விலை : 20.00
website : www.valampurii.lk
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 வைகாசி 24 திங்கட்கிழமை (06.06.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 170

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம் 1000/- மட்டுமே

## ஒன்றுபட்ட இலங்கைக்குள் நியாயமான அரசியல் தீர்வு!

### எதிர்க்கட்சித் தலைவர் உரை



(யாழ்ப்பாணம்)

ஒன்றுபட்ட இலங்கைக்குள் நியாயமான அரசியல் தீர்வைப் பெற விசுவாசமான ஒத்துழைப்பையும் பங்களிப்பையும் நல்குவோம் என எதிர்க்கட்சித் தலைவரும் த.தே. கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

23ஆம் பக்கம் பார்க்க....

## கொஸ்கம ஆயுத கிடங்கு நேற்று வெடித்துச் சிதறியது

### மக்கள் வெளியேற்றம்; விடுமுறை அறிவிப்பு

(கொழும்பு)

கொஸ்கம-சலாவ இராணுவ முகாமில் நேற்று மாலை ஏற்பட்ட வெடிவிபத்தை அடுத்து ஆயுதக் கிடங்கு வெடித்துச் சிதறியதால் அந்தப் பகுதியில் இருந்து மக்கள் வெளியேற்றப்பட்டுள்ளனர்.

கொஸ்கம இராணுவ முகாமில் ஏற்பட்ட தீ விபத்தினால் அதனைச் சூழ 8 கிலோ மீற்றர் தூரத்தில் வசிப்போரை அந்த இடங்களிலிருந்து அகன்று செல்லுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் குறித்த ஆயுத களஞ்சியசாலையில் ஏற்பட்டுள்ள தீ விபத்தினால் ஒரு புறம் கலுஅக்கல வரையும் மறுபுறம் அவிஸ்ஸாவலை வரை வெடிப்புச் சத்தங்கள் கேட்பதாக பொதுமக்கள் தெரிவித்துள்ளனர். இதேவேளை இந்த வெடிப்பு சம்பவத்தினால்

24ஆம் பக்கம் பார்க்க....

### கலாசாரம், பொருண்மியம், பொறுப்புக்கூறல்

## பேரவையின் 3 உப குழுக்கள் நேற்று ஆரம்பித்து வைப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்கள் பேரவையினால் சமூக பொருளாதார வலுவூட்டல், கலை கலாசாரம் மற்றும் பொறுப்புக் கூறலுக்கான சர்வதேச விசாரணை என முக்கிய மூன்று உப குழுக்கள் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டன.

23ஆம் பக்கம் பார்க்க....



## மின்னல் தாக்கி வீடு சேதம்



(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி - பேரம்பலம் வீதியின் பெரியமாவடி பகுதியில் வீடு ஒன்றின் நுழைவாயில் மீது மின்னல் தாக்கியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த சம்பவம் நேற்று அதிகாலை வேளையில் இடி மின்னலுடன் கூடிய திடீர் மழையின் போது நடந்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

24ஆம் பக்கம் பார்க்க....

## சூழல் பாதுகாப்பு தீர்மானங்களை எவரும் சவாலுக்குட்படுத்த முடியாது

### ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு



(கொழும்பு)

நாடெங்கிலும் இடம்பெற்றுள்ள சூழல் அழிவுகளுக்கு மத்தியில் சூழல் பாதுகாப்பு தொடர்பாக எடுக்கப்படும் தீர்மானங்களை எவரும் சவாலுக்குட்படுத்த முடியாது என் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

சட்டவிரோத வர்த்தகங்களை மேற்கொண்டு சூழலுக்கு சேதங்கள விளைவிக்கப்படுமானால் அவற்றைத் தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டியது சகல அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரச அதிகாரிகளின்

24ஆம் பக்கம் பார்க்க....

## ஒரு சிலை; ஒரே மாலை இருமுறை அணிவிப்பு



(கரணவாய்)

மு.சிவசிதம்பரத்தின் உருவச் சிலைக்கு மாறி மாறி ஒரே மாலையை இருவர் முந்திப் பிந்தி அணிவித்ததால் சிறிய சலசலப்பு ஏற்பட்டிருந்தது.

உடுப்பிட்டித் தொகுதி முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மு.சிவசிதம்பரத்தின் 14ஆம் ஆண்டு நினைவுதின வைபவம் நேற்று ஞாயிற்றுக் கிழமை

24ஆம் பக்கம் பார்க்க....

## பலத்த காற்று வீசும் சாத்தியம்

(கொழும்பு)

நாட்டை சூழவுள்ள கடற்பிராந்தியங்களில் சில நாட்களுக்கு அடிக்கடி பலத்த காற்று வீசும் சாத்தியமுள்ளதால் கடலுக்கு செல்வோர் மற்றும் மீனவர்கள் அவதானமாக இருக்க வேண்டும் என வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

புத்தளம் முதல் மன்னார் ஊடாக திருகோணமலை வரை மற்றும் மட்டக்களப்பு தொடக்கம் பொத்துவில் ஊடாக அம்பாந்தோட்டை வரையான கடற் பகுதிகளில் காற்றின் வேகம் மணிக்கு 60 முதல் 65 கிலோ மீற்றர் வரை அதிகரித்து செல்லும் என வளிமண்டலவியல் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் கடல் கொந்தளிப்பாக இருக்கும் எனவும் அந்த அறிக்கை

24ஆம் பக்கம் பார்க்க....

## பேரவையின் உப குழுவில் சட்ட வல்லுநர் பொயில்

### இணைந்து செயற்படவுள்ளதாக அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்கள் பேரவையுடன் சர்வதேச சட்டவல்லுனர் பிரான்சிஸ் பொயில் தமிழ் மக்கள் பேரவையின் பொறுப்புக்கூறலுக்கான சர்வதேச விசாரணைக்கான உபகுழுவில் அமெரிக்காவைச் சேர்ந்த போர்க் குற்றம் மற்றும் இன அழிப்பு சட்ட வல்லுநராகிய பேராசிரியர் பிரான்சிஸ் பொயில் இணைந்து செயற்படவுள்ளாரென தமிழ் மக்கள் பேரவையின் பொறுப்புக் கூறலுக்கான சர்வதேச விசாரணைக்கான உப குழுவின் இணைப்பாளர்களில் ஒருவரான சட்டத்தரணி ந.காண்டீபன் தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்கள் பேரவையால் மூன்று முக்கிய குழுக்கள் ஆரம்பிக்கப்பட்டு அக்குழுக்களின் செயற்பாடுகள் தொடர்பில் விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் மாநாடு நேற்றைய தினம் யாழ்.றக்காவீதியில் அமைந்துள்ள கலாமுற்றம் கேட்

23ஆம் பக்கம் பார்க்க....

## இ.போ.ச பேருந்து மீது நேற்றிரவு கல்வீச்சு

(கரணவாய்)

யாழ்ப்பாணத்திலிருந்து பருத்தித்துறை நோக்கி சென்ற இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான பேருந்தின் மீது கல்வீச்சு தாக்குதல் ஒன்று இடம்பெற்றுள்ளது.

24ஆம் பக்கம் பார்க்க....

## வைத்தியசாலை பெண் பரிசாரகர் 3 நாள் காய்ச்சலினால் மரணம்!

### பரிசோதனைக்கு உடல் அனுப்பி வைப்பு

(பரந்தன்)

கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் பணியாற்றுகின்ற பெண் பரிசாரகர் ஒருவர் மூன்று நாள் காய்ச்சலை தொடர்ந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மரணமடைந்தமையடுத்து அவரது உடல் யாழ்.போதனா வைத்தியசாலையின் உடற்கூற்று பரிசோதனைக்காக அனுப்பி வைக்கப்

24ஆம் பக்கம் பார்க்க....



நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# கண்டி தலதா மாளிகையை விட உயரத்தில் பள்ளியின் கோபுரம்

## எதிர்ப்பு தெரிவித்து ஜாதிக பெரமுவ போராட்டம்



(கண்டி)

கண்டி நகரின் சிறைச்சாலை வீதியில் அமைந்துள்ள பிரதான ஜும்மாப் பள்ளி வாசல்களில் ஒன்றான கண்டி லைன் பள்ளி (மர்கஸ்) யில் அமைப்பதற்காக ஏற்கெனவே திட்டமிடப்பட்டிருந்த உயர் கோபுரமான 'மினராவை' அமைக்க வேண்டாம் எனக் கூறி 'ஜாதிக பெரமுவ' என்னும் அமைப்பு நேற்று சத்தியாக்கிரகப் போராட்டமொன்றில் ஈடுபட்டது.

மேற்படி பள்ளி அமைந்துள்ள வீதியை இடைமறித்து அவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதனால் பொலிஸார் வாகனங்களை வேறு பாதையினூடாகத் திருப்பி அனுப்பியுள்ளனர்.

ஆர்ப்பாட்டக்காரர்கள் துண்டுப் பிரசுரங்களையும் விநியோகம் செய்துள்ளனர். அதில் குறிப்பிடப்பட்டிருந்ததாவது,

சிங்கள பௌத்தர்களின் உயர் ஸ்தானத்திலிருக்கும் ஸ்ரீதலதா மாளிகையை விடவும் கூடிய உயரத்தில் பள்ளியின் கோபுரத்தை அமைக்கப்படக்கூடாது என குறிப்பிடப்பட்டுள்ளது.

நேற்றுக் காலை பள்ளிவாசலின் முன் கூடிய ஆர்ப்பாட்டக்காரர்கள் சத்தமிட்டு குறித்த பள்ளியின் நிர்மான பணிகளை நிறுத்த உத்தரவாதம் வழங்க வேண்டும் எனக் கோரிக்கை விடுத்தனர்.

அங்கு கட்டிட நிர்மாணப்பணிகள் ஏதும் இடம்பெறாத நிலையிலேயே இவ்வாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந் நிலையில் பொலிஸார் தலையிட்டு, கண்டி மாநகரசபை ஆணையாளரின் கடிதத்தை சமர்ப்பித்ததும் அவர்கள் அமைதியாகக் கலைந்து சென்றுள்ளனர்.

குறித்த கடிதமானது, கண்டி மாநகர சபையின் அனுமதியின்றி எவ்வித அபிவிருத்தியும் செய்யக் கூடாது என ஏற்கெனவே தடை விதிககப்பட்டதாகும்.

இவ்வார்ப்பாட்டத்திற்கு அரம்பே பொல ரத்னசாரர் என்ற பௌத்த மத குரு தலைமை தாங்கியுள்ளார். இன்னும் பல அமைப்புக்களும் இணைந்திருந்தன.

அமைச்சர் றவூப் ஹகீம் அவர்களது அனுசரணையுடன் நிர்மாண வேலைகள் முன் எடுக்கப்படுவதாகவும் பிலிமத்தலாவையிலுள்ள பித்தளை கைத்தொழில் முயற்சியாளர்களிடம் அதற்கான உத்தரவு கொடுககப்பட்டுள்ளதாகவும் இது, ஸ்ரீதலதா மாளிகையை விட 28 அடி உயரமான கோபுரம் என்றும் ஆரப்பாட்டக்காரர்கள் தெரிவித்திருந்தனர். (செ-12)

# 6 ஆயிரம் தொன்களாக அதிகரித்த குப்பைகள்

(கொழும்பு)

அண்மையில் நாட்டில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கினால் கொழும்பு மாவட்டத்தில் மாத்திரம் 2 ஆயிரத்து 500 தொன் குப்பைகள் சேகரிக்கப்பட்டிருந்தன.

ஆனால் கடந்த நான்கு நாட்களாக 6 ஆயிரம் தொன்களுக்கும் அதிகமான குப்பைகள் சேகரிக்கப்பட்டுள்ளதாக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற அமைச்சு நேற்று கூறியுள்ளது.

இதேவேளை, அதிகளவான குப்பைகள் கோடிகாவத்தை, கொலன்னாவ, மீதொட்டுமுல்லை, சேதுவத்தை, கொகிலவத்தை மற்றும் வெல்லம்பிட்டிய ஆகிய பகுதிகளில் காணப்பட்டதாக அமைச்சு சுட்டிக் காட்டியுள்ளது.

இந்த குப்பைகளை மீட்கும் பணிகளுக்காக 100 இற்கும் மேற்பட்ட இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளதாக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

மேலும் இதன்போது, இராணுவம், பொலிஸார், சிவில் பாதுகாப்பு படையினர் மற்றும் உள்ளூராட்சி மன்ற அமைச்சு ஆகியன இணைந்து, இந்த நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-12)

# அரசாங்கத்தை விமர்சனம் செய்யும் அமைச்சர்கள் மீது நடவடிக்கை!

(கொழும்பு)

அரசாங்கத்தை விமர்சனம் செய்யும் அமைச்சர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

ஆளும் கட்சியைச் சேர்ந்த அமைச்சுப் பதவிகளை வகித்து வருவோர் அரசாங்கத்தின் கொள்கைகளை பகிரங்கமாக விமர்சனம் செய்தால் அது தொடர்பில் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் தீர்மானித்துள்ளனர்.

இத்தகவலை அரசாங்கத்தின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் தென் பகுதி ஊடகம் ஒன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு அரசாங்கத்தை விமர்சனம் செய்த ஐக்கிய தேசியக் கட்சியின் மூன்று பேருக்கு எதிராக கட்சி ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கவுள்ளது.

எதிர்வரும் காலங்களில் அரசாங்கத்தை நெருக்கடியில் ஆழ்த்தும் வகையில் கருத்துக்களை வெளியிடும் அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் யார் என்பது குறித்தும் ஆராயப்படவுள்ளது.

அரசாங்கத்தின் இருப்பிற்கு பங்கம் ஏற்படும் வகையில் கருத்து வெளியிடும் அமைச்சர்களை அடையாளம் கண்டு அவர்களுக்கு கட்சி மட்டத்தில் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக அந்தப் பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார். (செ-12)

# வெளிவிவகார அமைச்சர் மங்கள எரிக் சொல ஹெய்ம் சந்திப்பு



(கொழும்பு)

வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர, இலங்கைக்கான நோர்வேயின் முன்னாள் சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்மைச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

வெளிவிவகார அமைச்சர் பிரானசுக்கான பயணத்தை மேறகொண்டிருந்த போது, இந்தச் சந்திப்பு இடம் பெற்றுள்ளது.

இலங்கையின் சூழலை அபிவிருத்தி செய்வதற்கு, உதவுவதற்குத் தாம் எதிர்பார்த்துள்ளதாக, இந்தச் சந்திப்பின் போது, எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளார். (செ-12)

# விரும்பிய வயதில் ஓய்வு பெறலாம்

(கொழும்பு)

இலங்கை போக்குவரத்து சபையின் ஊழியர்களுக்கு தாம் விரும்பிய வயதில் ஓய்வு பெறுவதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான சுற்று நிருபம் வெளியிடப்பட்டுள்ளதாக போக்குவரத்து அமைச்சின் செயலாளர் நிஹால் சோமசிறி தெரிவித்தார்.

எனினும் போக்குவரத்து சபையின் கீழ் செயற்படும், பேருந்து சாரதிகள், நடத்துனர்கள், மற்றும் பொறியியலாளர்கள் குறித்த ஓய்வுபெறும் திட்டத்திற்குள் உள்ளடக்கப்படவில்லை.

இதன்படி, எதிர்வரும் 30 ஆம் திகதி வரை இது தொடர்பான விண்ணப்பங்கள் கோரப்படும் என அமைச்சின் செயலாளர் குறிப்பிட்டார். (செ-12)


## 31ஆம் நாள் நினைவஞ்சலி

### அமரர் செல்லத்துரை இராசதுரை

(ஓய்வுபெற்ற பொறியியலாளர்)



தோற்றம் 13.08.1944 மறைவு 07.05.2016

"கந்தபுராணப் படிப்பை
இயல்பாக ஏற்றுப் பரம்
பொருளை நோக்கிய பயணம் –
முக்தியின் ஆரம்பம். கொட்டும்
மழையில் இடியுடன்கூடிய
மின்னலாக ஆன்மாவின்
அமரத்துவம் – அன்பே சிவமயம்.
தெய்வத்தின் சான்றாக
தந்தையாக விடை கொடுத்த
அமரரின் வாழ்க்கை –
சைவசித்தாந்தம்."

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை 06.06.2016 (இன்று) முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். தொடர்ந்து நிகழும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

246/3, கோவில் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

- குடும்பத்தினர்

(4868)



## வாகனம் வாடகைக்கு



அனைத்து வைபவங்களுக்கும் அழையுங்கள்

(C-4777)

07 66 88 99 06


# மாணவர்களுக்கு போதை மாத்திரை விற்கும் நபர் கைது

(கொழும்பு)

பாடசாலை மாணவர்களுக்கு போதை மாத்திரைகளை விற்பனை செய்யும் ஒருவர் வெலிகந்த நகரில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளார்.

வெலிகந்தை பொலிஸாருக்கு கிடைதத தகவலின் அடிப்படையிலேயே இவர் கைதாகியுள்ளதாக தெரியவந்துள்ளது.

இவர் வசம் இருந்து 500 போதைமாத திரைகளும் கைப்பறறப்பட்டுள்ளன.

மேலும் சந்தேக நபர் கலேவெலை பகுதியைச் சேர்ந்த 23 வயதான ஒருவர் எனத் தெரியவந்துள்ளது.

இவரை பொலநறுவை நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (செ-12)


## கண்ணீர் அஞ்சலி



### மாணிக்கம் சுப்பிரமணியம்

கொக்குவில் மேற்கு பிரபல
வர்த்தகரும் கொடையாளியுமான
மாணிக்கம் சுப்பிரமணியம் காலமான
செய்தி கேட்டு அதிர்ச்சியடைந்தோம்.
அவரது பிரிவால் துயருறும்
அன்னாரின் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவிப்பதோடு அன்னாரின்
ஆன்மா சாந்தியடைய
இறைவனை வேண்டு
கிறோம்.

த.அழகரத்தினம் குடும்பம் (ஓய்வுபெற்ற அதிபர்)
பிறவுண் வீதி, கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

(4869)

# காணாமலாக்கப்படுதலை குற்றவியல் சட்டத்தின் கீழ் கொண்டுவர வேண்டும்

## மனித உரிமைகள் ஆணைக்குழு வலியுறுத்து

(கொழும்பு)

**காணாமல் ஆக்கப்படுதலை குற்றவியல் சட்டத்தின் கீழ் கொண்டு வந்து, அதற்கென தனி அலகொன்று உருவாக்கப்படுதல் அவசியம் என்றும், குறித்த அலகு சகல அதிகாரங்களையும் கொண்டதாக அமையவேண்டும் எனவும் ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.**

காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் சட்டமூலம் ஒன்றை உருவாக்குவதாக கடந்த வருடம் அமைச்சர் மங்களவால் ஐ.நா சபைக்கு உறுதிமொழி வழங்கப்பட்ட போதும், இதுவரை குறித்த சட்டமூலம் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படவில்லையென, ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கொள்கை பணிப்பாளர் பஷில் பெர்னாண்டோ சுட்டிக்காட்டியுள்ளார்.

இந் நிலையில், காணாமல் ஆக்கப்படுதல்களை விரைவில் குற்றவியல் சட்டத்தின் கீழ் கொண்டுவர நடவடிக்கை எடுக்க வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

யுத்தத்தின்போதும் அதன பின்னரான காலப்பகுதியிலும் இலங்கையில் பலர் பலவந்தமாக காணாமல் ஆக்கப்பட்டதாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ள நிலையில், இதுகுறித்த விசாரணை தொடர்பில் சர்வதேசம் தொடர் அழுத்தங்களை பிரயோகித்து வருகின்றது.

குறிப்பாக காணாமல் போனோர் தொடர்பான விசாரணை ஆணைக்குழுவால், பல கட்டங்களாக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வந்தபோதும், எவ்வித தீர்வும் பெற்றுக்கொடுக்கப்படவில்லை.

இதனால், குறித்த விசாரணை வெறும் கண்துடைப்பாகவே நடத்தப்படுகின்றதென பரவலாக குற்றஞ் சாட்டப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

## பிரடி கமகே மீதான தாக்குதலுக்கு எதிராக நீர்கொழும்பில் ஆர்ப்பாட்டம்




(கொழும்பு)

ஊடகவியலாளர் பிரடி கமகே மீது தாக்குதல் நடத்தியமைக்கு எதிராக நீர்கொழும்பில் பாரிய ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

குறித்த ஆர்ப்பாட்டம் நீர்கொழும்பில் நேற்றுக் காலை நடத்தப்பட்டுள்ளது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் சிவில் சமூக அமைப்புகள், ஊடக நிறுவனங்கள் மற்றும் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

கடந்த வியாழக்கிழமை நீர்கொழும்பு மாநகர சபையின் மாதாந்த ஒன்றுகூடல் தொடர்பில் செய்தி சேகரிக்கச் சென்ற பிரடி கமகே மீது இனந்தெரியாத இரண்டு நபர்கள் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இந்த தாக்குதலுக்கு எதிர்ப்பு தெரிவித்தே குறித்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டுள்ளதாக ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் தெரிவித்துள்ளனர். (இ-5)

## யானைக்காலிலிருந்து விடுபட்டது இலங்கை

### உலக சுகாதார அமைப்பு பாராட்டு

(கொழும்பு)

இலங்கை மற்றும் மாலைதீவு ஆகிய நாடுகள் யானைக்கால் நோயை கட்டுக்குள் கொண்டுவந்துள்ளதாக உலக சுகாதார அமைப்பு பாராட்டு தெரிவித்துள்ளது. யானைக்கால் நோயானது, அதனால் பாதிக்கப்பட்டவர்களை பல ஆண்டுகளாக முடக்கிவைத்திருக்கும். அத்துடன், குறித்த நோய் தாக்கத்திற்குள்ளானவர்கள் வாழ்நாள் முழுவதும் அந்த களங்கத்துடனே வாழ வேண்டிய கட்டாயத்திற்கு தள்ளப்படுவர். இதன் காரணமாக சமூகத்தில் பாரபட்சம் காட்டப்படுவதுடன் ஏழ்மை நிலைக்கும் தள்ளப்படும் நிலைமையும் ஏற்படும்.

தற்போது தென் ஆசிய நாடுகளான இலங்கை மற்றும் மாலைதீவு ஆகிய நாடுகள் இந்த நோயை வெற்றிகரமாக கட்டுக்குள் கொண்டு வந்துள்ளன. அத்துடன், இதனால் ஏற்படும் பல்வேறு காரணிகளையும் முறியடித்துள்ள பெருமை குறித்த இரு நாடுகளுக்கும் சேரும் என உலக சுகாதார அமைப்பு பாராட்டியுள்ளது. இந்த நோயை ஒழிக்க அரும் பாடுபட்டதுடன் இலங்கையில் மேலும் வராமல் தடுக்கவும் போதிய நடவடிக்கைகளை எடுத்துள்ளமையானது, பாராட்டுதலுக்குரியது என உலக சுகாதார அமைப்பு மேலும் தெரிவித்துள்ளது. (இ-5)

## சீனாவின் போட் சிட்டி திட்டத்தில் இந்திய நிறுவனங்களும் முதலீடு

இலங்கையில் சீனாவினால் அமைக்கப்படவுள்ள போட் சிட்டி நிர்மாணத்தில் இந்திய நிறுவனங்களும் முதலீடுகளை செய்யவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது இலங்கை, இந்தியா, சீனா என்ற மூன்று நாடுகளுக்குள் ஏற்பட்ட முக்கிய திருப்பம் என்று இலங்கை அரசாங்க செய்தித்தாள் ஒன்று தெரிவித்துள்ளது.

போட் சிட்டியின் விற்பனைப் பிரிவு தலைவராக உள்ள லியாங் தௌ கடந்த வாரம், இந்திய முதலீட்டாளர்களுடன் சந்திப்புக்களை நடத்தினார்.

இதன்போது ஐந்து இந்திய நிறுவனங்கள் போட்சிட்டியில் முதலீடுகளை மேற்கொள்ள விருப்பம் வெளியிட்டுள்ளன. (இ-5)

## மாணிக்கக்கல்லுடன் இளைஞன் கடத்தல்

மாணிக்கக்கல் ஒன்றை விற்பனை செய்ய முயன்ற 22 வயதுடைய இளைஞன் ஒருவரை, இனந்தெரியாத குழுவினர் கடத்திச்சென்று அம்மாணிக்கக்கல்லை பறித்துவிட்டு அவ்விளைஞனை வீதியில் இறக்கிவிட்டுச் சென்ற சம்பவம் அம்பாறை நகரில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றுள்ளது.

அம்பாறை நகரைச் சேர்ந்த குறித்த இளைஞன், புதையல் மூலம் பெறப்பட்ட மாணிக்கக்கல்லை விற்பனை செய்வதற்காக அம்பாறை நகரை அண்டிய கடைக்கு அருகில் அம்மாணிக்கக்கல்லுடன் நின்றுள்ளார். இதன்போது, அங்கு இலக்கத்தகடு இல்லாத வெள்ளை நிற வான் ஒன்றில் வந்த மூன்று பேர், குறித்த இளைஞனைக் கடத்திச் சென்று அம்மாணிக்கக் கல்லை பறித்துவிட்டு குறித்த இளைஞனை இங்கினியாகலைப் பகுதியில் இறக்கிவிட்டு தப்பிச் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (இ-5)

## மக்களை துன்புறுத்த வேண்டாம்

### கூறுகிறார் மகிந்த



அரசாங்கம் தற்போது வரிச் சுமைகளை அதிகரித்து வருகின்ற நிலையில், மக்களுக்கான சலுகைகளை குறைத்து, மக்களை துன்புறுத்தும் நிலைப்பாட்டில் இருந்து விடுபடுமாறு, நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தை கோரியுள்ளார். காலி-பத்தேகமையில் மறைந்த முன்னாள அமைச்சர் அமரசிறியை நினைவு கூரும் வகையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

அவர் மேலும், கருத்து தெரிவிக்கையில், அரசாங்கம் தற்போது வரிகளை அதிகரித்து வருகிறது. இதன் ஊடாக விலை யேற்றங்கள் இடம்பெற்றுள்ளன.

மேலும் பல சலுகைகளும் குறைக்கப்பட்டுள்ளதுடன் இவ்வாறான நிலைமையால் மக்களே அதிகம் பாதிக்கப்படுகின்றனர் என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்த ராஜபகஷ இதன் போது சுட்டிக்காட்டியுள்ளார். (இ-5)

### நீதவான் திலன கமகேக்கு

## பிணை வழங்கலை எதிர்த்து சட்டமா அதிபர் வழக்கு

கொழும்பு மேலதிக நீதவான் திலின கமகேக்கு பிணை வழங்கப்பட்டமைக்கு எதிராக சட்டமா அதிபர் வழக்கு தாக்கல் செய்யவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. யானைக்குட்டி ஒன்றை சட்டவிரோதமாக தம்வசம் வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் திலன கமகேக்கு எதிராக கைது உத்தரவு பிறப் பிக்கப்பட்டது.

எனினும் அவர் கங்கொடவில நீதவானிடம் சரணடைந்த நிலையில் கடந்த வார இறுதியில் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

எனினும் இந்த பிணை வழங்கலில் சட்டவலு இல்லை என்ற அடிப்படையில் சட்டமா அதிபர் வழக்கை தாக்கல் செய்யவுள்ளதாக ஆங்கில செய்தித்தாள் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. (இ-5)

## பசிலை எதிர்ப்போருக்கு விரைவில் அமைச்சு பதவி

(கொழும்பு)

கூட்டு எதிர்க் கட்சியிலுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலரை அரசாங்கத்துடன் இணைத்துக்கொண்டு அமைச்சுப் பதவிகளை வழங்குவதற்கு அரசாங்கத்திலுள்ள ஸ்ரீ ல.சு.க. குழுவொன்று நடவடிக்கை எடுத்து வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கு முதலில் சிலரை அரசாங்கத்துடன் இணைத்துக் கொள்ளவும் இதற்காக அவர்களுக்கு அமைச்சுக்களை வழங்கவும் அரசாங்கம் சார்ந்த குழுவொன்று உடன்பட்டிருப்பதாக கூட்டு எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷ கூட்டு எதிர்க் கட்சியில் பொறுப்புக்களை ஏற்று செயற்படுவதற்கு விரும்பாத சிலரையே அரசாங்கத்தில் இணைத்துக் கொள்ள முயற்சி எடுக்கப்பட்டு வருவதாகவும் கூறப்படுகின்றது. (இ-5)

கோபா அமெரிக்க கால்பந்து

# நெய்மர் இல்லாத பிரேசில் ஈக்வடோருடன் அதிர்ச்சி டிரோ



கோபா அமெரிக்க கால்பந்து தொடர் தொடங்கி நூறு ஆண்டுகள் ஆகிறது. எனவே இதனை சிறப்பாக கொண்டாடும் வகையில் இந்த ஆண்டு 'நூற்றாண்டு தொடர்' அமெரிக்காவில் நடைபெற்று வருகிறது. இதில் நேற்று நடைபெற்ற லீக் போட்டியில் பிரேசில் - ஈக்வடோர் அணிகள் மோதின.

கலிபோர்னியாவின், பசடேனாவில் நடைபெற்ற இப்போட்டியில் நெய்மர் இல்லாத பிரேசில் அணி, ஈக்வடோர் அணியுடன் கோல் இல்லாமல் சமன் செய்தது.

ஈகவடோர் வீரர் மில்லர் பொலானோஸன் கோல் ஒன்றை இல்லை என்று கூறியது இந்த ஆட்டத்தில் கடும் சர்ச்சைகளை எழுப்பியது. ஆட்டத்தின் 66ஆவது நிமிடத்தில் ஈக்வடோர் வீரர் மில்லர் பொலோனோசின் கிராஸ் ஒன்றை பிடித்த பிரேசில் கோல் காப்பாளர் அல்லிசன் பந்தைத் தடுக்கும் முயற்சியில் தோல்வியடைய பந்து கோல் கோட்டைத் தாண்டியதாக கருதப்பட்டது.

ஆனால் அது கோட்டைத் தாண்டியதா இல்லையா என்பதை முழுக்கவும் கூற முடியவில்லை இது கோல் இல்லை என்று தீர்ப்பளிக்கப்பட்டது. பந்து அவுட் என்றனர், இது ஈக்வடோர் வீரர்களை கடும் கோபத்துக்கு ஆளாக்கியது. இது தங்கள் வெற்றி வாய்ப்பை பறித்தது என்றும் வலுவான பிரேசில் அணிக்கு ஆதரவாக நடுவர் செயல்பட்டதாக ஈக்வடோர் பயிற்சியாளர் கடுமையாக சாடினார்.

நெய்மருக்கு ஓய்வு அளிக்கப்பட்டது, அவர் ரோஸ்பவுல் ஸ்டாண்ட்டிலிருந்து 8 முறை சம்பியனான தனது பிரேசில் கோல் இல்லாமல் சமன் செய்ததை அதிருப்தியுடன் பார்த்துக் கொண்டிருந்தார். அதே போல் டேவிட் லூயிஸ், மார்செலோ ஆகியோரும் ஒலிம்பிக் போட்டிகளுக்குத் தயார்படுத்திக் கொண்டிருப்பதால் இந்தப் போட்டி யில் ஆடவில்லை. இந்நிலையில் வெறுப்பான ஆட்டத்தில் ஈக்வடோர் அணி பிரேசில் பயிற்சியாளர் துங்காவுக்கு மேலும் சிந்திக்க சில புதிய பிரசினைகளை பிரேசில் அணிக்கு உருவாக்கித் தந்துள்ளது.

வில்லியன், பிலிப் கூட்டின்ஹோ ஆகியோர் போதிய அச்சுறுத்தல்களை வழங்கி னாலும் அந்த கில்லர் அணுகுமுறையைக் காணோம். 17ஆவது நிமிடத்தில் கூட்டின்ஹோ 25 யார்ட்டிலிருந்து ஆடிய ஷொட் வெளியே சென்றது. பொதுவாகவே பிரேசில் அணியை நீண்ட தூரத்திலிருந்து ஷொட் ஆடவே செய்தது ஈக்வடோர் தடுப்பணை.

சுமார் 53,000 ரசிகர்கள் ஆரவாரத்துடன் தீவிரமாகத் தொடங்கிய இந்தப் போட்டியில் பிரேசில் அணி ஏகப்பட்ட வாய்ப்புகளை சரியாக கோல் அடிக்கும் நகர்த்தலாக மாற்ற முடியாமல் தோல்வி கணடது. சில ஷொட்கள் மிகவும் துரதிர்ஷ்டவசமாக இலக்கை விட்டு விலகிச் சென்றது. ஒரு முறை லூகாஸ் லிமா தலையால் அடித்த ஷொட் நூலிழையில் கோல் வாய்ப்பை விட்டு விலகிச் சென்றது.

முதல் பாதியில் பிரேசில் தனது உத்வேகத்தை வெளிப்படுத்தியது, கூட்டின்ஹோ மற்றும் பிலிப் லூயிஸ் ஆகியோருக்கு இடது புறம் நிறைய இடம் கிடைத்தது. வில்லியனின் வேகம் ஈக்வடார் மூத்த வீரர் வோல்டர் அயோவியை அவர் பக்கத்தில் வர முடியாமல் செய்தது.

ஈக்வடோர் ஆங்காங்கே அச்சுறுத்தல் கொடுத்தது. பிரேசில் வீரர்களான கேசிமிரோ மற்றும் எலியாஸ் ஆகியோரை ஃபவுல் செய்யத் துாண்டுவதாகவே ஈக்வடோர் ஆட்டம் அமைந்தது. ஈக்வடோருக்குக் கிடைத்த சிறந்த வாய்ப்பு இடைவேளைக்கு முன்னதாக நிகழ்ந்தது, என்னர் வாலன்சியாவின் 25 அடி ஃப்ரீ கிக் அருமையாக கோல் நோக்கி செல்ல, பிரேசில் கோல் காப்பாளர் அலிசன் அதனை அருமையாகத் தடுத்தார்.

இடைவேளைக்குப் பிறகும் என்னர் வலன்சியா மூலம் ஈக்வடோர் சிறப்பான முயற்சிகளை மேற்கொண்டது, கடைசியில் வாலென்சியா அருமையாக பந்தை எடுத்து சென்றதும், ஜெஃப்ர்சன் மாண்ட்டிரோவின் கோல் முயற்சியும் இறுதி விசில் மூலம் முடிவுக்கு வந்தது.

மொத்தத்தில் கோல் வாய்ப்புக்களை பிரேசில் நழுவ விட்டது பிரேசிலின் இந்த அதிர்ச்சி டிராவுக்குக் காரணமாக அமைந்தது. அடுத்த போட்டியில் பிரேசில் அணி ஹெய்ட்டி அணியை சந்திக்கிறது.

இதேவேளை நேற்றைய நாளில் நடைபெற்ற மற்றைய ஆட்டங்களின் முடிவுகளின்படி ஹெய்ட்டி அணியை பெரு 1:0 என வென்றதுடன், கொஸ்ட ரிகா - பராகுவே அணிகளுக்கு இடையிலான போட்டி சமனிலையில் முடிந்தது.




முகமட் அலி மறைவு

## இந்திய பிரபலங்கள் இரங்கல்

பிரபல குத்துச் சண்டை வீரர் முகமட் அலியின் மறைவுக்கு விஜேந்தர் சிங், மேரி கோம் உட்பட பல்வேறு இந்திய பிரபலங்கள் இரங்கல் வெளியிட்டுள்ளனர்.

இவரது மறைவு தொடர்பாக தனியார் செய்தி நிறுவனம் ஒன்றுக்கு பேட்டி அளித்த விஜேந்தர் சிங், "முகமட் அலி ஒரு மிகப் பெரிய ஜாம்பவான். அவருக்கு இறப்பே இல்லை. குத்துச் சண்டையில் அவர் செய்துள்ள சாதனைகளை யாரும் மறக்க முடியாது. குத்துச்சண்டை களத்துக்கு வெளியிலும் அவர் பல சேவைகளைச் செய்துள்ளார்" என்று கூறியுள்ளார்.

இந்திய குத்துச்சண்டை வீராங்கனையான மேரி கோம், "குத்துச் சண்டை உலகுக்கு முகமட் அலியின் இழப்பு மிகப் பெரியது. சிறு வயதில் எனக்கு ஊக்கசக்தியாக இருந்தவர் முகமட் அலி.

எனவே அவரது இழப்பு தனிப்பட்ட முறையில் எனக்கு பேரிழப்பாகும். அவர் என்றும் மக்கள் மனதில் வாழ்வார்" என்று கூறியுள்ளார்.

இந்திய குத்துச்சண்டை வீரரான சிவதாபா, "குத்துச்சண்டை ஜாம்பவானான முகமட் அலி இன்று உயிருடன் இல்லை என்பது கவலை அளிக்கும் விஷயம். அவரைப் போன்ற ஜாம்பவான்களுக்கு என்றும் மறைவு இல்லை. ரசிகர்களின் மனதில் அவர் என்றும் வாழ்ந்து கொண்டு இருப்பார்" என்று கூறியுள்ளார்.

முன்னாள் கிரிக்கெட் வீரர் அனில் கும்ப்ளே, துப்பாக்கி சுடும் வீரர் ராஜ்யவர்தன் சிங் ராதோர், ரோஹன் போபண்ணா ஆகியோரும் முகமட் அலியின் மறைவுக்கு இரங்கல் வெளியிட்டுள்ளனர்.

நட்பு கால்பந்து; **போர்த்துக்கல் தோல்வி**

சர்வதேச நட்பு கால்பந்து போட்டியில் இங்கிலாந்து அணி, போர்த்துக்கல் அணியை வீழ்த்தியது.

ஐரோப்பிய நாடுகள் பங்கேற்கும் யூரோ கிண்ண கால்பந்து தொடர் வரும் 10ஆம் திகதி பிரான்சில் ஆரம்பமாகவுள்ள நிலையில்,

இதற்குத் தயாராகும் வகையில் இங்கிலாந்து, போர்த்துக்கல் அணிகள் நட்பு போட்டியில் மோதின.

சமீபத்தில் சம்பியன்ஸ் லீக் கிண்ணம் வென்ற ரியல் மாட்ரிட வீரர், போர்த்துக்கல் கப்டன் கிறிஸ்டியானோ ரொனால்டோ இதில் பங்கேற்கவில்லை.

35ஆவது நிமிடத்தில் எதிரணி வரர் கனேயின் தலை மீது, காலால மோதிய புருனோ ஆல்விசுக்கு 'ரெட் கார்ட்' காட்டப்பட, போர்த்துக்கல் 10 வீரர்களுடன் விளையாடியது. போட்டி முடிய சில நிமிடத்துக்கு முன் (86ஆவது), கிறிஸ் ஸ்மாலிங ஒரு கோல் அடிக்க, இங்கிலாந்து அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.



பிரெஞ்ச் ஓபன் டென்னிஸ்

## மகளிர் பிரிவில் ஸ்பெய்னின் முகுருசா ஆடவர் பிரிவில் ஜோகோவிக் சம்பியன்



பிரெஞ்ச் ஓபன் டென்னிஸ் தொடரின் மகளிர், ஆடவர் ஒற்றையர் பிரிவுகளில் முறையே ஸ்பெய்னின் முகுருசா, சேர்பியாவின் ஜோகோவிக் சம்பியனாகினர்.

**பெண்கள் ஒற்றையர் பிரிவு**

பிரெஞ்ச் ஓபன் தொடரில் முதல் முறையாக சம்பியனானார் ஸ்பெய்னின் முகுருசா.

நேற்று முன்தினம் நடந்த இறுதிப் போட்டியில் அமெரிக்காவின் செரினா வில்லியம்ஸை வீழ்த்தியே அவர் சம்பியன் பட்டத்தை சூடிக் கொண்டார்.

பிரான்ஸ் தலைநகர் பாரிசில் பிரெஞ்ச் ஓபன் டென்னிஸ் தொடர் நடக்கிறது. இதன் பெண்கள் ஒற்றையர் பிரிவு இறுதியில் உலகின நம்பர் 1 வீராங்கனை செரினா வில்லியம்ஸ், ஸ்பெயினின் கார்பைன்முகுருசாவை எதிர்கொண்டார்.

முதல் செட் தொடக்கத்தில் முகுருசா முன்னிலை வகித்தார். எனி னும் அதன்பின் செரினா சுதாரிக்க 5-5 என சமன் ஆனது. பின் மீண் டும் சுதாகரித்த முகுருசா 7-5 என முதல் செட்டை கைப்பற்றினார்.

தொடர்ந்து நடந்த இரண்டாவது செட்டில் முதல் கேமில் செரினாவின் சேர்விசை உடைத்த முகுருசா முன்னிலை பெற்றார். செரினா அடுத்தடுத்து செய்த தவறுகளால் ஒரு கட்டத்தில் 3-5 என பின் தங்கினார்.

மறுபுறம் தொடர்ந்து அசத்திய முகுருசா, 2ஆவது செட்டை 6□4 என கைப்பற்றினார். முடிவில், முகுருசா 7-5, 6-4 என்ற நேர் செட்களில் வெற்றி பெற்று கிராண்ட்ஸ்லாம் அரங்கில் முதன் முறையாக கிண்ணம் வென்று அசத்தினார்.

தவிர, கடந்த ஆண்டு விம்பிள்டன் பைனலில், செரினாவிடம் அடைந்த தோல்விக்கும் பழி தீர்த்தார். கடந்த 1998க்கு பின் பிரெஞ்ச் ஓபனில் பட்டம் வென்ற முதல் ஸ்பெயின் வீராங்கனையானார். கடந்த 1998ல் ஸ்பெயினின் அரான்ட்சா சான்சஸ் விகாரியோ கிண்ணம் வென்றிருந்தார்.

**தொடரும் சோகம்**

கடந்த ஆண்டின் இறுதியில் யு.எஸ்., ஓபன் அரையிறுதியில் தோற்றார் செரினா. இந்த ஆண்டு அவுஸ்திரேலிய ஓபன், தற்போது பிரெஞ்ச் ஓபன் என தொடர்ந்து இரு பைனலில் வீழ்ந்தார். இதனால் 'ஓபன் எராவில்' 22 கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்ற ஸ்டெபி கிராபின் சாதனையை இம்முறையும் செரினாவால் சமன் செய்ய முடியவில்லை.



**ஆடவர் ஒற்றையர் பிரிவு**

பிரெஞ்ச் ஓபன் டென்னிஸ் ஆண்கள் ஒற்றையர் பிரிவு இறுதியில் பிரிட்டனின் அன்டி முர்ரேயை வீழ்த்திய சேர்பியாவின் ஜோகோவிக் முதன்முறையாக கிண்ணம் வென்றி அசத்தினார்

பிரான்ஸ் தலைநகர் பாரிசில் பிரெஞ்ச் ஓபன் கிராண்ட்ஸ்லாம் டென்னிஸ் தொடர் நடந்தது.

இதன் ஆண்கள் ஒற்றையர் பிரிவு இறுதியில் உலகின் நம்பர்-1 வீரர் சேர்பியாவின் நோவக் ஜோகோவிக், 2ஆவது இடத்தில் உள்ள பிரிடடனின் அன்டி முர்ரே நேற்று மோதினர்.

இதில் அபாரமாக ஆடிய ஜோகோவிக் 3-6, 6-1, 6-2, 6-4 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் பட்டம் வென்றார்.

இதன்மூலம் ஜோகோவிக் பிரெஞ்ச் ஓபனில் முதலாவது பட்டத்தை கைப்பற்றினார். ஒட்டுமொத்தத்தில் இது அவருக்கு 12ஆவது பட்டமாக அமைந்தது. இதன்மூலம் நான்கு கிராண்ட்ஸ்லாம் தொடரிலும் (கேரியர் கிராண்ட்ஸ்லாம்) கிண்ணம் வென்ற 8ஆவது வீரர் என்ற பெருமை பெற்றார். தவிர 1969க்கு பின் தொடர்ச்சியாக 4 கிராண்ட்ஸ்லாம் தொடரிலும் கிண்ணம் வென்ற வீரர் என்ற சாதனை படைத்தார். கடந்த ஆண்டு விம்பிளடன், யு.ஏ., ஓபனில் பட்டம் வென்ற ஜோகோவிக், இந்த ஆண்டு ஆஸி ஓப னில் கிண்ணத்தை கைப்பற்றியிருந்தார்.

# கலைகளை பேணிக்காக்க தமிழ்மக்கள் பேரவைக்கு அனைத்துக் கலைஞர்களும் ஒத்துழைக்க வேண்டும்

## மரியசேவியர் அடிகளார் அழைப்பு

நாங்கள் எமது தனித்துவத்தையும் உரிமையையும் பாதுகாக்க வேண்டும் என்றாலகலைகளைபேணவேண்டும். தமிழ் மக்கள் பேர வையால் ஆரம்பிக்கப்பட்ட கலை கலாசார குழுவுக்கு கலைஞர்கள் அனைவரும் ஒத்துழைப்பு வழங்கி இந்த முயற்சியில் ஈடுபடவேண்டும் என திருமறைக்கலாமன்ற ஸ்தாபகா அருட்திரு மரியசேவியர் அடிகளார் தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்கள் பேரவையின் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்றையதினம் யாழ். றககா வீதியில் அமைந்துள்ள கலாமுற்றம் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

கலைகள் தெய்வீகமானவை. ஆற்றல் மிக்கவை. அவைகள் ஊடாக பலவற்றை சாதிக்க முடியும் என்பதை பட்டறிவில் உணர்ந்து கொணடதில் நானும் ஒருவன். 52 ஆண்டுகளுக்கு மேலாக மனிதத்தை வளர்ப்பதற்கும் பேணிக காப்பதற்குமாக கலைகளுடன் ஈடுபாடு கொண்டு திருமறைக்கலாமன்றத்தை அமைத்து போர்க்கால சூழலிலும் போர் முடிந்தகால கட்டத்திலும் இந்த மன்றத்தின் ஊடாக அமைதிக்காகவும் இனங்கள் மத்தியில் புரிந்துணர்வுக்காகவும் இதை செயற்படுத்தி வருகிறோம்.

இன்று இலங்கையில் 20 மையங்களில் நாம் அமைதிக்கான புரிந்துணர்வுக்கான செயற்பாடுகளில் அனைத்து சமயங்களையும் சேர்ந்த இளைஞர்கள், சிறுவர்கள், கலைஞர்களை உள்ளடக்கி செயற்பட்டுக்கொண்டு இருக்கின்றோம். சிறப்பாக யாழ் மண்ணில் இருந்துதான் இவை முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

ஆனால் இன்றைய சூழலில் எங்களுடைய மண்ணை நினைக்கின்ற போது வருத்தமாகத்தான் பலருக்கு தோன்றுகின்றது. ஏனெனில் ஒரு சிலர் இந்தநாட்டை விட்டு போய்விடுவார்கள். நாங்கள் இந்தநாட்டில்தான் வாழப் போகிறோம். எங்களுடைய பிள்ளைகள், அவர்களுடைய பிளளைகள் இந்த மணணை தமது வாழ்வாதாரமாக கொள்ளப்போகிறார்கள்.



எமது பண்பாட்டை. எமது சமூக அறத்தை சின்னாபின்னப்படுத்துகின்ற வகையில் பல வகையான திணிப்புகள் இன்றைய சூழ்நிலையில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. எனவே எமது தனித்துவத்தையும் உரிமையையும் எமது பண்பாடடு சிறப்புக்களையும் காக்க வேண்டும் என்றால் கலைகளை பேணவேண்டும்.

இந்த கலைகள் ஊடாகத்தான் ஆற்றல் பெற்றவர்களாக நாங்கள் மாறுவோம். மிகச்சிறந்த கருவிகள் கலைகள். ஆகவே இன்றைய சமூகச் சூழலில் கலைகளின் பல பிரிவுகளை நல்ல நோக்கத்துக்காக பயன்படுத்த வேண்டும்.

நல்லநோக்கத்தை நிறைவேற்றுவதற்காக தான் தமிழ் மக்கள் பேரவை இந்த துறையை ஆரம்பித்துள்ளது. இதில் அரசியல் கலப்பு எதுவும் இல்லை. வேறொரு வகையில் பார்த்தால் எல்லாமே அரசியல் தான். ஆனால் இது கட்சி அரசியல் சாராத சமூகத்தை முன்னேற்றுவதற்கான வழிமுறை.

அதற்கு கலைஞர்கள் அனைவரும் ஒத்துழைப்பு கொடுத்து இந்த முயற்சியில் ஈடுபடவேண்டும் என வேணடிக்கொள்கிறேன். (இ-9)

# ஜெயா கச்சதீவை மீட்க நடவடிக்கை எடுப்பார்

## மு.க.ஸ்ராலின் நம்பிக்கை



இலங்கையிடமிருந்து கச்சதீவை மீட்க, தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா நடவடிக்கை எடுப்பார் என நம்புகிறோம் என்று, தமிழக சட்டசபை எதிர்க்கட்சித் தலைவர் மு.க.ஸ்ராலின் தெரிவித்துள்ளார்.

காயிதே மில்லத் நினைவிடத்தில் நேற்றுக்காலை மரியாதை செலுத்திய பின்னர் மேற்கண்டவாறு கருத்து வெளியிட்டுள்ளார்.

தமிழக சட்டப் பேரவையில் 89 உறுப்பினர்களைப் பெற்றுள்ள திமுக, பலம் பொருந்திய எதிர்க்கட்சியாக விளங்குகிறது. அவரை பேரவை தி.மு.க. கட்சித் தலைவராக அந்தக் கட்சியைச் சேர்ந்த எம்.எல்.ஏ.க்கள் அண்மையில் தேர்வு செய்தனர்.

பேரவையில் அதிக உறுப்பினர்களைப் பெற்றுள்ள கட்சியாக தி.மு.க. விளங்குவதால், அந்தக் கட்சிக்கே எதிர்க்கட்சி அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது. இதைத் தொடர்ந்து, அந்தக் கட்சியின் தலைவராகத் தேர்வு செய்யப்பட்ட மு.க.ஸ்ராலின் எதிர்க்கட்சித் தலைவராக அங்கீகாரம் செய்யப்பட்டுள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவராக மு.க.ஸ்ராலினை பேரவைத் தலைவர் பி.தனபால் அங்கீகாரம் செய்துள்ளதாக சட்டப் பேரவைச் செயலாளர் ஏ.எம். பி.ஜமாலுதீன் நேற்று முன்தினம் சனிக்கிழமை அறிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் என்பவர், பேரவைத் தலைவர், துணைத் தலைவருக்கு அடுத்த நிலையில் வருகிறார். அரசு கொறடாவுக்கு என்னென்ன சலுகைகள் வழங்கப்படுமோ அந்தச் சலுகைகள் அனைத்தும் எதிர்க்கட்சித் தலைவருக்கும் அளிக்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)




பாராட்டி வாழ்த்துகின்றோம்

சித்தன்கேணி நாககன்னி நாகபுஷணி அம்மன்
ஆலய பிரதம குரு
இந்திரன் ஐயா (ராசதுரை)
அவர்களுக்கு கடந்த 02.04.2016 சனிக்கிழமை கொழும்பு-06 வெள்ளவத்தை இராமகிருஷ்ணமிஷன் மண்டபத்தில் அகில இன நல்லுறவு தேசிய ஒன்றியத்தினால் நடத்தப்பட்ட பட்டமளிப்பு விழாவில் **சாமஶ்ரீ சைவநெறி செம்மல் சமூகஜோதி** எனும் சிறப்புப்பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டமையையொட்டி எமது பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.
நாகபூஷணி இசைக்குழுவினரின் தெய்வீக காண ராகங்கள் 06.06. 2016 இன்று திங்கட்கிழமை காலை 9 மணி தொடக்கம் 12 மணி- வரையும் தொடர்ந்து 12 மணி தொடக்கம் 2.30 மணிவரை பஜனைக் கீதமும் (நயினை நாகபூஷணி அம்மன் ஆலயத்தின் நுழைவாசல் கோபுர மண்டபத்தில்) விசேடமாக நடைபெறும் என்பதை சகல அடியார்களுக்கும் அறியத் தருகின்றோம்.

வாழ்த்துவோர்
வைத்திய கலாநிதி சோமர் லோகர் சுவாமி அவர்கள்
(நயினாதீவு)
(சாமஶ்ரீ தேசமாணிய, பத்ம ஶ்ரீ கலாஜோதி, நவரசத்திலகம்
நாகபூஷணி இசைக்குழுவினரின்
தெய்வீக காண இராகங்கள் வாசிப்பவர்)
மகாலிங்கம் தயாநிதி சுவாமி அவர்கள் (உணாவில்)
சாமஶ்ரீ சிவநெறிச் செம்மல்)



(4768)


# இராசி பலன்

06.06.2016
(வைகாசி 24, திங்கட்கிழமை)
சூரிய உதயம் காலை 5.54 மணிக்கு
பிரதமை முற்பகல் 7.22 மணிவரை
துதியை பின்னிரவு 5.45 மணிவரை
மிருகசீரிடம் பிற்பகல் 12.43 மணிவரை
சுபநேரம் 11.52-1.22 மணிவரை
இராகுகாலம் 7.22-8.52 மணிவரை
புதூர் நாகதம்பிரான் பொங்கல்

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | சூரி சுக், புத | சந் |
| கேது | கிரகநிலை சந்திராஷ்டமம் அனுசம், கேட்டை | | |
| | | | குரு ராகு |
| | சனி செவ் | | |

**மீனம்:** அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், உடன் பிறப்புக்கள் வழியில் உதவிகள் கிடைக்கலாம், செய்தொழில் மேன்மையுண்டு, சுப தகவல்கள் வந்து சேரலாம்.

**மேடம்:** சவால்களைச் சமாளிக்கும் நாள், உடன் பிறப்புக்கள் வழியில் உள்ளம் மகிழும் சம்பவமொன்று இடம் பெறலாம், புதிய பொருட் சேர்க்கையுண்டு.

**இடபம்:** கற்பனை மிகுதியான நாள், பொதுவாழ்வில் மதிப்பும் மரி யாதையும் உயரும் நாள், தொலை பேசி வழித்தகவல் மகிழ்ச்சி தரும், வருமானம் திருப்தி தரும்.

**மிதுனம்:** உறவினர்கள் வழியில் அன்புத் தொல்லைகள் ஏற்படலாம், சிக்கனத்தைக் கடைப்பிடிக்க முற்படுவீர்கள், வியாபார நலன்கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும்.

**கும்பம்:** நட்பு வட்டம் விரிவடையும் நாள், சொத்துக்களால் ஆதாயமுண்டு, பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும், எடுத்த காரியத்தில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

**கடகம்:** தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், மாற்றங்களால் ஏற்றம் உருவாகலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**மகரம்:** பிரியமான சிலரின் சந்திப்பு இடம்பெறலாம், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், செய்தொழில் மேன்மையுண்டு, காரிய அனுகூலமுண்டு.

**சிம்மம்:** சுப காரியத்திற்குப் பிள்ளையார் சுழி போடும் நாள், பதவி உயர்வுகள் பற்றிய செய்திகள் வந்து சேரலாம், பொருளாதார நிலையில் முன்னேற்றம் ஏற்படலாம்.

**தனுசு:** சென்ற இடங்களில் செல்வாக்கு மேலோங்கும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், நண்பர்களின் சந்திப்பு இடம் பெறலாம், போசன சுகமுண்டு.

**விருச்சிகம்:** வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், மனதில் இனம்புரியாத சஞ்சலங்கள் தோன்றி மறையும், ஆரோக்கியத்தில் அக்கறை காட்ட வேண்டிய நாள்.

**துலாம்:** சிலர் உங்களிடம் தொழில் ரீதியாக உதவி கேட்டு வரலாம், தந்தை வழி உறவில் மனநிறைவான செய்தி யொன்று வந்து சேரலாம், பயணங்களால் ஆதாயமுண்டு.

**கன்னி:** தொழிலில் புதிய திட்டங்கள் தீட்டி ஆதாயம் காண நினைப்பீர்கள், சுப தகவல்கள் வந்து சேரும் நாள், ஆடம்பரப் பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.

# 50 முதியவர்களுக்கு இலவச பரிசோதனை





மொபிற்றல் நிறுவனத்தின் அனுசரணையுடன் யாழ். மாவட்டத்திற்குட்பட்ட 50 முதியவர்களுக்கு இலவச கண்பரிசோதனை சிகிச்சை முகாம் கடந்த வெள்ளிக்கிழமை யாழ்.போதனா வைத்தியசாலையில் இடம் பெற்றது. இம்முதியவர்களுக்கான கண்ணாடி வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 10 ஆம் திகதி வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியிலுள்ள மொபிற்றல் நிறுவனத்தில் வைத்து வழங்கப்படும். (பங்கள்-நல்லூர் செய்தியாளர்)

# மருந்தடித்து பழுக்க வைத்த பழங்களை விற்பதற்கு தடை

சந்தைகளில் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ள பழவகைகளுக்கு எவ்வித மருந்துப் பொருட்களும் பயன்படுத்தல் தடை செய்யப்பட்டுள்ளதாக நல்லூர் பிரதேச சபை திருநெல்வேலி மற்றும் கொக்குவில் சந்தை பழக்கடை விற்பனை வியாபாரிகளுக்கு அறிவித்துள்ளது.

சந்தைக்கு உள்வாங்கப்படும் பழங்கள் அல்லது சந்தையில் இருந்து விற்பனை செய்யப்படும் பழங்கள் என்பனவற்றுக்கு மருந்துப் பொருட்கள் பாவித்து விற்பனை செய்யப்படுவது தடை செய்யப்பட்டுள்ளது.

இதனை மீறுவோர் மீது உடன் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் இவ்வாறான பழங்கள் விற்பனைக் குட்படுத்தப்படுவதால் மக்கள் நோய்த்தாக்கத்திற்கு உள்வாங்கப்படுவர் என்ற நோக்கத்தைக் கொண்டே பிரதேச சபை இவ்வறிவித்தலை விடுத்துள்ளது. இவ் விடயம் தொடர்பாக சந்தைகளில் பிரதேச சபையாலும் பொதுச் சுகாதார பரிசோதகர்களாலும் பழ வியாபாரிகள் கண்காணிக்கப்படுவர் என நல்லூர் பிரதேச சபை மேலும் அறிவித்துள்ளது. (இ-5-81)

# மஹோற்சவ விஞ்ஞாபனம்

யாழ். வண்வட மேற்கு ஆனைக்கோட்டை -கண்ணகைபுரம் ஸ்ரீ இராஜ இராஜேஸ்வரி அம்பாள் திருக்கோவில் மஹோற்சவ விஞ்ஞாபனம் இன்று திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பதினைந்து தினங்கள் இடம் பெறவுள்ளன.

இதற்கமைய 19 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு தேர்த்திரு விழாவும் 20 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளன. (இ-5)

---

புற்றளை சித்தி விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 11 ஆம் திகதி காலை 8 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளன. இதற்கமைய 19 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை தேர்த் திருவிழாவும் 20 ஆம் திகதி திங்கட் கிழமை தீர்த்ததிருவிழாவும் நடை பெறவுள்ளது. (இ-5-60)

# தன்னியக்க விற்பனை இயந்திர திறப்பு விழா



டேவிட் பீரீஸ் மோட்டார் கம்பனியின் பஜாஜ் அசல் உதிரிப்பாக தன்னியக்க விற்பனை இயந்திர திறப்புவிழா கடந்த வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு யாழ்ப்பாணம் சென். மார்டின் விற்பனை நிலைய கட்டடத்தில் திறந்துவைக்கப் ட்டது.

இத்தன்னியக்க விற்பனை இயந்திரமானது 24 மணி நேரமும் அவசர தேவையை நிவர்த்தி செய்ய வாடிக்கையாளர்களுக்கு உதவுவதுடன் இந்தசேவை யில் பஜாஜ மோட்டார் சைக் கிள். ஆட்டோ முக்கிய உதிரிப்பாகங்களை வாடிக்கையாளர்கள் உடனடியாகப் பெறமுடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் உதிரிப் பாக பிரிவு நி றைவேற்று அதிகாரி மகேந்திரன் சபேசன். விற்பனை பிரிவு நிறைவேற்று பிரிவு அதிகாரி சந்தான கிருஷ்ணன் வசந்தன். நிதிக் கம்பனி பிரதிநிதிகள். பஜாஜ் வற்பனை பிரதிநிதிகள். வாடிக்கையாளர்கள் என பலரும் கலந்துகொண்டனர். (இ-9)




# விழிப்புணர்வு கருத்தரங்கு



(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட ஜே/388 கிராம சேவையாளர் பிரிவில் சொண்ட் நிறுவனத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட இளவயது திருமணம் மற்றும் முறையற்ற தொடர்பாடலினால் ஏற்படும் பாதிப்பு தொடர்பான விழிப்புணர்வு கருத்தரங்கு கடந்த 2 ஆம் திகதி இடம்பெற்றது.

பிரதேச பொதுச் சுகாதார பரிசோதகர், குடும்பநல உத்தியோகத்தர் ஆகியோரால் நடத்தப்பட்ட இக் கலந்துரையாடலில் கிராம சேவையாளர், சமுர்த்தி உத்தியோகத்தர், அபிவிருத்திஉத்தியோகத்தர், சொண்ட் நிறுவன பணியாளர் மற்றும் கிராம மக்கள் எனப்பலர் கலந்து கொண்டனர். (இ-91)

# நயினாதீவு நாகபூஷணி அம்மன் மஹோற்சவப் பெருந்திருவிழா



(யாழ்ப்பாணம்)

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் வருடாந்த மஹோற்சவப் பெருந்திருவிழா இன்று 6 ஆம் திகதிதிங்கட்கிழமைகொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 15 தினங்கள் திருவிழா இடம்பெறும்.

10 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இரவு முத்துச் சப்பறமும் 15 ஆம் திகதி புதன் கிழமைபகல்சிவபூசைகைலை காட்சியும் இரவு திரு மஞ்சமும்16 ஆம் திகதி வியா ழக்கிழமை பகல் விசேட கருட சர்ப்ப பூசையும் வாயு பட்சணி நாகம் வீதியுலாவும் இரவு பூந்தண்டிகையும் 17 ஆம் திகதி வெள்ளிக்கிழமை குதிரை வாகனமும் 18 ஆம் திகதி சனிக்கிழமை பகல் கைலைக் காட்சியும் இரவு சப்பறத் திருவிழாவும் 19 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தேர்த்திருவிழாவும் 20 ஆம் திகதி திங்கட் கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (இ-5)

### அனர்த்தப் பாதிப்புக்குள்ளானவர்களுக்கு வழங்க

# நிவாரணப் பொருட்கள் நெடுந்தீவில் சேகரிப்பு



(யாழ்ப்பாணம்)

நாட்டில் அண்மையில் ஏற்பட்ட சீரற்ற காலநிலை மாற்றத்தினால் இடம்பெற்ற இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நெடுந்தீவு பிரதேச செயலகத்தின் வாழ்வின் எழுச்சி உத்தியோகத்தர்களால் சேகரிக்கப்பட்ட உதவிப் பொருட்கள் யாழ். மாவட்ட செயலகத்தில் ஒப்படைக்கப்பட்டது. (இ-5)

### மலேரியா குறித்து அவதானமாக இருங்கள்

# நோய்த் தடுப்புச் சிகிச்சையினை பெற்றுக் கொள்வது அவசியம்

(யாழ்ப்பாணம்)

மலேரியா தொற்றுள்ள நாடுகளுக்கு செல்வதற்கு முன் நோய்த் தடுப்பு சிகிச்சை பெற்றுக்கொள்வது அவசியம் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. யாழ்.மாவட்ட ஊடகவியலாளர்களுக்கான மலேரியா பற்றிய விழிப்புணர்வு கூட்டம் கடந்த வியாழக்கிழமை யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணியகத்தில் சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி க.நந்தகுமா ரன் தலைமையில் இடம்பெற்றது.



இந்நிகழ்வில் பிராந்திய தொற்றுநோய் தடுப்பு வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி க.சிவகணேஸ், மலேரியா தடை இயக்க பிராந்திய வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி அ.ஜெயக்குமரன், பூச்சியியல் உதவியாளர் எஸ்.சிவமோகன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இலங்கைய்யை மலேரியா அற்ற நாடக மாற்ற கரங்களை கோர்ப்போம் என்னும் தொனிப்பொருளில்இடம்பெற்ற இந்தக் கருத்தரங்கில் விழிப்புணர்வு துண்டுப்பிரசுரமும் வழங்கப்பட்டது.

இதேவேளை கடந்த 3 வருடங்களாக இலங்கை மலேரியாத் தொற்றிலிருந்து விடுதலைபெற்றநாடாகஇருந்து வருவதாகவும் தற்போது நுளம்பால் ஏற்படும் தாக்கங்கள் சவாலானதாக உணரப்பட்டுள்ளன. குறிப்பாக டெங்கு, மலேரியா போன்ற நோய்களை ஏற்படுத்தும் நுளம்புகளின் பரவலை குடாநாட்டில் அவதானிக்க முடிகிறது.

வெளிநாட்டில் இருந்து இலங்கை வரும் குடியேற்றவாசிகள் சிலர் மலேரியா நோய்த்தாக்கத்துக்கு இலக்காகியிருக்கின்றமையை அவதானிக்க முடிகிறது. குடாநாட்டை பொறுத்தவரை மலேரியா நோய் பெருமளவில் இனங்காணப்படவில்லை. ஆனால் அதனை ஏற்படுத்தும் நுளம்புகள் தாராளமாகவே காணப்படுகின்றன. இத்தகைய நிலைகளை தவிர்ப்பதற்கு மலேரியா நோயோடு வருபவர்களை இனங்காணவேண்டியது அவசியம். இந்த நோய் இலங்கையில் பரவாமல் நடவடிக்கை முன்னெடுக்கப்படல் அவசியம் என யாழ்ப் பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் க.நந்த குமாரன் தெரிவித்தார். (இ-7)

# துர்நாற்றத்துடன் மீன் சந்தை





(கரணவாய்)

வடமராட்சிமந்திகைப்பொதுச் சந்தையில் அமைந்துள்ள மீன் சந்தையானது பொருத்தமில்லாத இடத்தில் இயங்குவதுடன் முற்று முழுதான சுகாதாரச் சீர் கேட்டுடன் காணப்படுவதாக பொது மக்களிடமிருந்து குற்றச்சாட்டுகள் முன் வைக்கப்பட்டுள்ளன.

மீன் சந்தையின் கட்டுமானப் பணிகள் இடம் பெற்ற வேளை மீன் சந்தையானது சைக்கிள் தரிப்பிடத்துக்கு என ஒதுக்கப்பட்ட இடத்தில் தற்காலிகமாக இயங்க விடப்பட்டது. ஆனால் அவ்விடத்தில் மீன் சந்தையானது தற்போது நிரந்தரமாக இயங்கிவருகிறது. அதனால் மேற்படி பொதுச் சந்தையில் சுகாதாரச் சீர்கேடு ஏற்பட்டுள்ளதாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. அங்கு வெட்டப்படும் மீன்களின்கழிவுகள் பெரும் துர்நாற்றத்தை ஏற்படுத்துகின்றது. எனவே இது தொடர்பில் உரிய அதிகாரிகள் கவனமெடுக்குமாறு பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-5-60)

# ரவிக்கு ஆப்பு வைக்க ஆதரவளிக்க வேண்டும்

## ஐ.ம.சு.கூவிடம் பந்துல வேண்டுகோள்



நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்கவிற்கு எதிரான நம்பிக்கையில்லா தீர்மானத்திற்கு ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு ஆதரவளிக்க வேண்டுமென நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அமைச்சர் ரவி கருணாநாயக்கவிற்கு எதிராக கடந்த மார்ச் மாதம் கூட்டு எதிர்க்கட்சியினர், சபாநாயகர் கரு ஜயசூரியவிடம் நம்பிக்கையில்லா தீர்மான யோசனையை சமர்ப்பித்திருந்தனர்.

இது தொடர்பில் எதிர்வரும் 8 ஆம் திகதி நாடாளுமன்றில் விவாதம் நடத்தப்படவுள்ளது. 8ஆம் திகதி நடைபெறவுள்ள விவாதத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பினை பிரதிநிதித்துவம் செய்யும் அனைத்து அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டு எதிர்க்கட்சியின் சார்பில் குரல் கொடுக்க வேண்டுமென பந்துல குணவர்தன கோரியுள்ளார்.

கொழும்பு ஊடகமொன்றுக்கு கருத்து வெளியிடுகையில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

வாக்கெடுப்பின் போது ரவி கருணாநாயக்கவிற்கு எதிராக அனைத்து கூட்டமைப்பின் உறுப்பினர்களும் வாக்களித்து, அவர்கள் அனைவரும் மக்களின் பக்கம் இருப்பதனை நிரூபிக்க முடியும்.

நிதி அமைச்சர், ஜனாதிபதியின் உத்தரவுகளை மதிக்காது நாட்டையும் மக்களையும் நெருக்கடியில் சிக்க வைக்கும் வகையில் வற்வரியை உயர்த்தியுள்ளார்.

அரச நிதி நிர்வாகம் நூல் அறுந்த பட்டத்தைப் போன்று காணப்படுகின்றது.

அரச பிணையங்களில் செய்யப்பட்டுள்ள வெளிநாட்டு முதலீடுகள் மீளப் பெற்றுக் கொள்ளப்படும் நிலைமை ஏற்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

ALREADY ISSUED 24000 CERTIFICATES
நெல்லிப்பளையில் யாழ்ப்பாணத்தில் கொழும்பில்
MICOM THE GREAT
SINCE 1997 IN COLOMBO
School of Law



Diploma In The Australian Legal System
- Studing Law
- The Sources of Australian Law
- The Legal System
- Precedent
- The Interpretation of statutes
- Contracts and Commercial Dealings
- Torts
- Some Basic Legal Concepts

Course Fee Rs-40,000
Date of Commencement
19th June
IBSL Introduction to Banking and Financial Law- Course Fee Rs-19,000

Conducted by
Mohanarajah Joganantham
(M.Raja Joganantham)
LL.B.(Col.Uni)
Dip in Journalism
Reading for LL.M
Proprietor of MICOM



An old Student of Honourable Prof. Dr.G.L.Peries,
Prof.Madam Savithiri Kunasekere
Prof.Dr.S.Sornaraja
Prof.Madam. N.Chandrakasan
Regiee Michal - the Chief Editor of daily mirror

Contacting Numbers:
077 395 0215,
076 707 7558,
077 284 2556.
Contactable person
Mr.Joganantham

Lectured on Law at, University of Ballarat (Australia), University of ICFAI (Hydrabad), OXONIA, IAS, Ladies College,London Business School, MICOM International
(C-3633)

1985ம் ஆண்டிலிருந்து இன்று வரை....



யாழ்
கலாலயா
பயிற்சியகம்
விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ். போதனா வைத்தியசாலை பின் புற வீதி)

மகளிருக்கான 3 மாத பயன்மிகு பயிற்சிகள் ஆரம்பமாகின்றன!



- கேக் ஐசிங், உணவு தயாரித்தல்,
- Hair Dressing & Styling (கூந்தல் வடிவமைப்புகளும் முடி சீராக்குதலும்)
- முக அழகுக் கலை (Facials)
- Pedicure, Manicure (கைகள், கால்கள், விரல்கள், நகங்கள் அழகுபடுத்துதல்)
- இந்து, கிறிஸ்தவ, இஸ்லாம் முறைகளில் மணப்பெண் அலங்காரம், வித்தியாசமான 7 முறைகளில் சேலை அணிதல்,

மேற்படி அனைத்துப் பயிற்சிகளின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.

- பிளவ்ஸ், சாறி பிளவ்ஸ், சுரிதார், தைக்கும் சான்றிதழ் அற்ற தையல் பயிற்சிகள். (கிழமை நாட்களில் மட்டும்)

கிழமைநாள் பிரிவுகள்: 10.06.2016 (வெள்ளி)
சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம்: 11.06.2016 (சனி)
மேலும் விபரங்களை நேரில் அறிந்து கொள்ளலாம்.
-இயக்குநர்-
(சி-4800)
GURU

yarl Beauty Academy
YARL BEAUTY ACADEMY
அழகுக்கலை பயிற்சிகள்

- Certificate in Basic Beauty Courses (ஒரு மாத கால அழகுக்கலை)
- Dip in Beauty Culture & Hair Dressing (மூன்று மாத கால டிப்ளோமா அழகுக்கலை)
- Certificate in Cake Icing (கேக் ஐசிங்)

கிழமை நாள் பிரிவுகள் 10.06.2016 (வெள்ளி) 10.30 மணிக்கு
சனி, ஞாயிறு பிரிவுகள் 11.06.2016 (சனி) 10.30 மணிக்கு

அனைத்து பயிற்சிகளும் இந்திய முறையில் மிகச்சிறந்த பயிற்சி நெறி விளக்கத்துடன் இடம் பெற்று பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.

வகுப்புகளில் சேரவிரும்புவோர் மேலதிக விபரங்களுக்கும் பதிவுகளுக்கும் அலுவலக நேரத்தில் வருகைதரவும்.

இல.616 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(வேம்படி சந்தியில் மஞ்சள் கடவையின் முன்)
(சி-4816)

கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1984RC<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>கி.பா:19 உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்:BSc/தனியார் தொழில்<br>தொ.இ: B/4520 | பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>கி.பா: 41செவ் 12 இல்<br>தகைமை/தொழில்:O/L<br>தொ.இ: G/5490 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம்<br>கி.பா: 39 செவ் 12 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:A/L/ சொந்தத்தொழில்<br>தொ.இ: B/4523 | பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா: 50 செவ் 1 இல்<br>உயரம்: 5'1".<br>தகைமை/தொழில்:MBBS/வைத்தியர்<br>தொ.இ: G/5492 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா: 18 உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:BSc, MSc/ அரசதொழில்<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம் அசைவமும் ஏற்கப்படும்<br>தொ.இ: B/4524 | பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா: 37 செவ் 12 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:BSc Eng லண்டன் NOT PR<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: G/5497 |
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>கி.பா: 63 செவ் 1 இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்:A/L/அரச தொழில்<br>தொ.இ: B/4526 | பிறப்பு: 1975 இந்து<br>நட்சத்திரம்: அனுசம்<br>கி.பா: 60செவ் 8 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:HNDA/ கணக்காளர்<br>தொ.இ: G/5496 |

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:-021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
(ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம்.)















முல்லைத்தீவு மாவட்ட கல்வி வலயத்தின் ஆசிரியர் மகாநாடு கடந்த 3,4 ஆம் திகதிகளில் மு/சிலாவத்தை தமிழ் மகா வித்தியாலய கலையரங்கில் முல்லை. மாவட்ட வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி உ.முனீஸ்வரன் தலைமையில் நடைபெற்றபோது.... (படங்கள்:- பனிக்கன்குளம் செய்தியாளர்)

# கால்நடைகளை காடுகளூடாக கடத்தி விற்பனை செய்யும் மாபியா கும்பல்

## ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் சிவமோகன் எம்.பி. குற்றச்சாட்டு

( குருமன்காடு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் இருந்து சட்டவிரோத மான முறையில் கால்நடைகளை கடத்தி வியாபாரம் நடை பெறுவதாக கடந்த 3 ஆம் திகதி நடைபெற்று முடிந்த முல்லை. மாவட்ட அபிவிருத்தி குழு கூட்டத்தில் வன்னிப் பாராளுமன்ற உறுப்பினரும் மாவட்ட ஒருங்கிணைப்பு குழு இணைத் தலைவரு மான சி.சிவமோகன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

பெண் கால்நடைகளும் வகைதொகையின்றி காடுகள் ஊடாக கடத்தப்பட்டு வெளி மாவட்டங்களில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இதன் மூலம் முல்லை.மாவட்டத்தில் கால்நடை அபிவிருத்தி மோசமாக பாதிக்கப்பட்டு வருகிறது. இதற்கென ஒரு கால் நடைகளைக் கடத்தும் மாபியா கும்பல் திட்டமிட்டு செயற்படுகிறது. இந்த கும்பல் மாடுகளை காடுகள் ஊடாக கடத்தி வவுனியா நகரத்திற்கு அப்பால் உள்ள இரட்டை பெரியகுளம் கிராமத்தின் காடுகள் ஊடாக வெளி மாவட்டங்களுக்கு கடத்தி வருகின்றனர்.

இதுபற்றி கால்நடை அபிவிருத்தி உத்தியோகத்தரிடம் வினவிய போது, முறைப்படி 2015 தொடக்கம் 2016 ஆம் ஆண்டு காலப்பகுதிக்கு ஆயிரம் மாடுகள் மட்டுமே கொண்டு செல்ல அனுமதிகள் வழங் கியதாகவும், ஆனால் சட்ட விரோத மாக பெருந்தொகையான மாடுகள் கடத்தப்படுவதாகவும் கூறினர்.

இறுதியில் இது தொடர்பாக சகல பொலிஸ் நிலையங்களுக்கும் பொலிஸ் மேலதிகாரியூடாக அறிவுறுத்தப் படுவதாகவும், மக்களின் முறைப்பாடுகள் கிடைக்கும் பட்சத்தில் உரிய நடவடிக்கைகள் எடுப்பதாகவும் பொலிஸ் அதிகாரிகள் இதன்போது தெரிவித்தனர்.

எனவே பொதுமக்கள் மாடுகள் கடத்தல் விடயத்தில் கவனமெடுத்து பொலிஸ் நிலை யங்களுக்கு அறிவிக்குமாறு வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வைத்தியர் சி.சிவமோகன் தெரிவித்தார். (2-281-250)



வடக்கு மாகாண சபை உறுப்பினர் ம.தியாகராசாவின் குறித்தொதுக்கப்பட்ட 50 ஆயிரம் ரூபா நிதியொதுக்கீட்டில் இருந்து கனகராஜன் குளத்திலுள்ள கம்பன் சனசமூக நிலையம் அமைப்பதற்கான கூரைத் தகடுகள் அண்மையில் வவுனியா வடக்கு பிரதேச சபை உப அலுவலகத்தில் வைத்து வழங்கப்பட்டது. இந் நிகழ்வில் வவுனியா வட பிரதேச சபை செயலாளர் எஸ்.சத்தியசீலன் தலைமையில் நடைபெற்றது. இந் நிகழ்வில் ம. தியாகராஜா, வட மாகாண சபை உறுப்பின,ர் சனசமூக நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர் க.தனபாலசிங்கம், பிரதேச அபிவிருத்தி உத்தி யோகத்தர் சசி, வவு/வட உப அலுவலக பணியாளர்கள், ஆயுர்வேத வைத்திய அதிகாரி, சனசமூக நிலைய உறுப்பினர்கள், பொதுமக்கள் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.




# வருடாந்த சந்திப்பு

கிளிநொச்சி தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் வருடாந்த ஊடக வியலாளர் சந்திப்பு அண்மையில் இடம்பெற்றது.

கிளிநொச்சி மாவட்ட அலுவலகத்தில் முற்பகல் 11 மணியளவில் மேற்படி மன்றத்தின் மாவட்ட சம்மேளனத் தலைவர் தர்சன் தலைமையில் இடம்பெற்றது. ஊடக வியலாளர் சந்திப்பில் மன்றத்தின் உதவிப் பணிப்பாளர் நா.குவேந்திரா மற்றும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் பூநகரி பயிற்சி நிலைய பொறுப்பதிகாரி செ.கோகில ராஜா ஆகியோர் 2015 ஆம் ஆண்டு மன்றத்தின் செயற்பாடுகள் தொடர்பில் ஊடக வியலாளர்களுக்கு விளக்கம் அளித்தனர்.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் கிளிநொச்சி மாவட்டத்தில் வருடாந்தம் இளைஞர் யுவதிகளின் திறன் விருத்தி, விளையாட்டு, கலை சார நிகழ்வுகள் மற்றும் சமூகங்களுக்கிடையேயான நல்லிணக்க செயற்பாடுகள் என்பவற்றை வலுப்படுத்தும் வகையில் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகிறது. அத்தோடு இளைஞர்களின் பங்களிப்புடன் கிராமங்களில் இனம் காணப்பட்ட விளையாட்டு மைதான புனரமைப்பு, விளையாட்டு கழகங்களுக்கு உபகரணங்கள் வழங்கல், உள்ளிட்ட பல்வேறு பணிகளையும் மேற்கொண்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.(2-15-281-312)

# கொக்குத் தொடுவாய் மக்களின் வயற்காணிகள் தொடர்பான பிரச்சினை மூடிமறைக்கப்பட்டது ஏன்?

## வடக்கு மாகாண சபை உறுப்பினர் ரவிகரன் கேள்வி

மகாவலி அதிகார சபையினால் பறிக்கப்பட்ட முல்லைத்தீவு- கொக்குத்தொடுவாய் மக்களின் வயல் காணிகள் தொடர்பான பிரச்சினையை தீர்த்து வைக்க நடவடிக்கை எடுக்குமாறு மத்திய காணி அமைச்சு எழுத்து மூலமாக கொடுத்த உத்தரவை மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகம் ஆகியன மூடி மறைத்துள்ளதாக கொக்குத்தொடுவாய் மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

1984 ஆம் ஆண்டு முல்லைத்தீவு மாவட்டத்தின் எல்லை பகுதியில் உள்ள கிராமங்களிலில் இருந்து மக்கள் வெளியேற்றப்பட்டு 2009 ஆம் ஆண்டில் போர் நிறைவடைந்த பின்னர் மேற்படி பகுதியில் மக்கள் மீள குடியேறினர்.

இந்நிலையில் அவ்வாறு குடியேறிய கொக்குத் தொடுவாய் மக்களுக்கு சொந்தமான சுமார் 2157 ஏக்கர் வயல் நிலம் மகாவலி அதிகார சபையின் (எல்)வலயம் என்ற போர்வையில் அபகரிக்கப்பட்டு பெரும் பகுதி சிங்கள மக்களுக்கு விவசாய நடவடிக்கைகளுக்காக வழங்கப்பட்டிருக்கின்றது.

இந்த நிலையில் குறித்த மக்களுடைய நிலங்கள் பறிக்கப்பட்டமை தொடர்பாக மக்கள் பல்வேறு மட்டங்களில் தமது காணிகளை பெற்றுக் கொடுக்குமாறு தொடர்ச்சியாக கோரிக்கைகளை விடுத்திருந்த போதும் ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கப் படாத நிலையில் கடந்த 2015. 06.12, 13ஆம் திகதிகளில் முல்லைத்தீவு மாவட்டத்தில் இடம்பெற்ற காணி பிணக்குகளை தீர்த்து வைப்பதற்கான நடமாடும் சேவையில் கொக்குத்தொடுவாய் மக்கள் தாம் கலந்து கொண்டு வயல் நிலங்கள் அபகரிக்கப்பட்ட விடயத்தை சுட்டிக்காட்டியிருந்தோம்.

இந்த நிலையில் 2015. 06.16 ஆம் திகதி மத்திய காணி அமைச்சு கொக்குத் தொடுவாய் மக்களின் காணி பிணக்குகளை மாவட்ட செயலகம் (முல்லைத்தீவு), கரைதுறைப் பற்று பிரதேச செயலகம், வடக்கு மாகாண காணி ஆணையாளர் ஆகியோர் இணைந்து இந்தக் காணி பிணக்கை தீர்த்து வைக்குமாறும், இதற்காக எடுக்கப்படும் நட்வடிக்கைகள் தொடர்பாக தமக்கு தெளிவூட்டல்களை வழங்குமாறும் மத்திய காணி அமைச்சு அந்த கடிதத்திலேயே குறிப்பிட்டிருக்கின்றது.

மேலும் மகாவலி அதிகார சபையுடன் பேசி விடயத்தை தீர்க்குமாறும் அந்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

இந்த நிலையில் மேற்படி விடயம் தொடர்பாக கடந்த 23 ஆம் திகதி இடம்பெற்ற முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில், மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரனிடம் வினவிய போது, ஒட்டு மொத்தமாக கொக்குத்தொடுவாய் மக்களின் நிலம் பறிக்கப்பட்ட விடயத்தில் பொறுப்பற்றவர்களாகவே எமது அரசாங்க அதிகாரிகள் மற்றும் திணைக்களங்கள் செயற்பட்டிருக்கின்றன.

இந்த நிலையில் இந்த கடிதம் மாகாண காணி அமைச்சுக்கும் அனுப்பி வைக்கப்பட்டிருக்கின்றது.

எனவே குறித்த கடிதத்தின் பிரதியை முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுக்கு கையளிக்க தீர்மானித்திருக்கிறோம். இதனடிப்படையில் இந்த கடிதம் எதற்காக மூடி மறைக்கப்பட்டது.

இது தொடர்பில் எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன? என்பன தொடர்பான ஒரு தெளிவான பதிலை கொக்குத்தொடுவாய் மக்களுக்கு பெற்றுக் கொடுக்க வேண்டும். அதற்காக நாம் தொடர்ந்து நடவடிக்கை எடுப்போம் என பதிலளித்துள்ளார். (2-281)

## வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதற்கு

# இளைஞர் கழக மட்டத்தில் செயற்றிட்ட அறிக்கை கோரல்

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் நாடு தழுவிய ரீதியில் உள்ள இளைஞர் கழகங்களைச் சேர்ந்த ஆயிரத்து 500 கிராம அபிவிருத்தி செயற்றிட்டங்களை முன்னெடுப்பதற்கும் அதனோடு இணைந்ததாக இளைஞர் கலை நிகழ்வு வேலைத் திட்டத்தையும் முன்னெடுப்பதற்கான செயற்றிட்ட அறிக்கையை இளைஞர் கழக மட்டத்தில் கோரப்பட்டுள்ளன. முல்லைத் தீவுமாவட்டத்திலுள்ள இளைஞர் கழகங்கள் தங்கள் பிரதேசத்திற்கு பொருத்தமானதிட்டத்தைத் தெரிவு செய்து உரிய விண்ணப்பப்படிவத்தில் பூரணப் படுத்தி எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் பிரதேச இளைஞர் கழகத்தின் ஊடாக முல்லைத்தீவு மாவட்ட இளைஞர் சேவை அதிகாரிக்கு கிடைக்கக்கூடியவாறு அனுப்பிவைக்க வேண்டும் என தேசிய இளைஞர் சேவைகள் மன்ற முல்லைத் தீவு மாவட்ட அதிகாரி குக நேசதாசன் சறோஜா அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

இதன் பிரகாரம் ஒவ்வொரு இளைஞர் கழகத்தில் இருந்தும் ஒவ்வொரு கிராம அபிவிருத்திக்கான செயற்றிட்டம் ஒன்றை தெரிவு செய்து பிரதேச குழுவினால் மிகவும் பொருத்தமானதெனக் கருதப்படும் திட்டங்கள் முதற்கட்டமாக செயற்படுத்தப்படும்.

தெரிவு செய்யப்படும் ஒவ்வொரு திட்டத்திற்கும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் 75 ஆயிரம் ரூபா பணம் வழங்கப்படும்.

அப் பணத்துடன் பிரதேச மட்டத்திலுள்ள பொது அமைப்புக்கள் , இளைஞர்கள் ஆகியோரின் பங்களிப்புடன் 2 இலட்சத்து 25 ஆயிரம் ரூபா பெறுமதி கொண்ட வேலைத்திட்டத்தை முன்னெடுக்க வேண்டும்.

மாவட்டம், மாகாணம், தேசிய மட்டம் என மூன்றிலும் சிறந்ததாகத் தெரிவு செய்யப்படும் வேலைத் திட்டத்திற்கு மாவட்ட மட்டத்தில் சான்றிதழ் வழங்கப்படும்.

மாகாண மட்டத்தில் 10 இலட்சம் ரூபா பணமும் தேசிய மட்டத்தில் ஒரு கோடி ரூபா பணமும் பரிசாக வழங்கப்படும்.

அத்தோடு மேலும் சிறந்த 8 வேலைத்திட்டங்களுக்கு பணப்பரிசில்கள் வழங்கப்படும்.

இதேவேளை கலை நிகழ்வுகளுக்கு பிரதேச இளைஞர் கழக மட்டங்களில் பாடகர்களையும் அறிவிப்பாளர்களையும் தெரிவு செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

இந் நிகழ்வுகளும் மாவட்டம், மாகாணம், தேசியம் என மூன்று மட்டங்களிலும் நடை பெற்று சிறந்த பாடகர்கள், அறிவிப்பாளர்கள் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டு பரிசில்கள் வ்ழங்கப்படும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.(2-15)

# வௌவால்களின் உறைவிடமாக மாறியுள்ள கிராமிய சுகாதார வைத்திய நிலையம்

(மன்னார்)

மடு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட மாதா கிராமம் கிராம அலுவலகர் பிரிவிலுள்ள கிராமிய சுகாதார வைத்திய நிலையம் பாழடைந்த நிலையில் காணப்படுவதாகவும் வௌவால்களின் உறைவிடமாக மாறியுள்ளதாகவும் அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

மடு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட மாதா கிராமத்தில் ஏற்கனவே காணப்பட்ட கிராமிய சுகாதார வைத்திய நிலையம், மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையினூடாக மீள் திருத்தம் செய்யப்பட்டது.

எனினும் குறித்த கிராமிய சுகாதார வைத்திய நிலையத்தின் திருத்தப்பணிகள் நிறைவடைந்து பல மாதங்களாகின்ற போதும், தற்போது குறித்த சுகாதார நிலையம் பற்றைக்காடுகள் வளர்ந்து, பாழடைந்த நிலையில் காணப்படுவதாகவும் வௌவால்களின் உறைவிடமாக மாறியுள்ளதாகவும் அப்பகுதி மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

எனவே, குறித்த கிராமிய சுகாதார வைத்திய நிலையத்தின் செயற்பாடுகளை உடனடியாக ஆரம்பிக்க உரிய அதிகாரிகள் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பாக மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் கருத்து தெரிவிக்கையில்,

கிராமிய சுகாதார வைத்திய நிலையத்தின் திருத்தப்பணிகளை மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையூடாக மேற்கொண்டுள்ளோம். குறித்த வைத்திய நிலையத்தை இயங்க வைப்பதற்கு சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கிராமிய சுகாதார வைத்திய நிலையம் கர்ப்பிணி தாய்மார்களுக்கு சிகிச்சை வழங்குதல் மற்றும் அவர்களின் உடல் ஆரோக்கியத்தில் அக்கறை செலுத்தும் நிலையமாக அமைந்துள்ளது.

வெகுவிரைவில் மடு சுகாதார வைத்திய அதிகாரி தலைமையில் மாதம் ஒருமுறை கர்ப்பிணித் தாய்மார்களுக்கான வைத்திய பணிகளை ஆரம்பிக்கவுள்ளது.

குறித்த நிலையத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் மீள் திருத்தப்பணிகள் சில நிறைவடையவில்லை. பணிகள் துரிதப்படுத்தப்பட்டுள்ள நிலையில் பணிகள் முடிவடைந்த நிலையில் உடனடியாக கர்ப்பிணி தாய்மார்களுக்கான வைத்திய பணிகள் முன்னெடுக்கப்படும் என்றார். (2)




# மழை வெள்ளத்தை அடுத்து ஏற்பட்ட பாரிய குழிகள் சீர்செய்யப்படவில்லை

## வீதியால் பயணிப்போர் விபத்துக்களை சந்திப்பதாக தெரிவிப்பு



உருத்திரபுரம்பிரதான வீதியில் காணப்படும் குழிகளுக்கு கல், மண் ஆகியவை இட்டு நிரப்பும் வேலைகள் வீதி அபிவிருத்தித் திணைக்களத்தினால் அண்மையில் மேற்கொள்ளப்பட்டன.

இந்நிலையில் குறித்த வீதியின் மிகுதி வேலைகள் மேற்கொள்ளப்படவில்லையென மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

அண்மையில் பெய்த மழையை அடுத்து பெருக்கெடுத்த வெள்ளத்தினால் மாணிக்கப்பிள்ளையார் கோவிலடி மற்றும் சில பகுதிகளில் பாரிய குழிகள் ஏற்பட்டு அவை இதுவரையில் நிரவப்படாமல் இருப்பதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

இதனால் இரவு வேளைகளில் இதனூடாக பயணிப்போர் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்வதாகவும் சிலவேளைகளில் குழிகளினுள் தவறி விழும் சந்தர்ப்பங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அதுமட்டுமன்றி கிளி / இந்துக்கல்லூரிக்கு முன்பாக காணப்படும் வீதியிலுள்ள குழிகளுக்கு பெரிய கற்கள் போடப்பட்டு அரைகுறையாக வேலைகள் நடைபெற்று வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

எனவே உரிய திணைக்களத்தினர், வீதி அபிவிருத்திக்குப் பொறுப்பான வடக்கு மாகாண அமைச்சர் ஆகியோர் நேரடியாக இதனைப் பார்வையிட்டு இப்பிரதான வீதி செப்பனிடலை நல்ல முறையில் செயற்படுத்த உதவ வேண்டுமென பொதுமக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர். (2-254)

# சிறந்த மேற்பார்வை, அர்ப்பணிப்பு இருந்தால் மட்டுமே திட்டங்களை நிறைவு செய்யமுடியும்

## வடக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சர் தெரிவிப்பு



வடக்கின் அனைத்து மாவட்டங்களுக்கும் வீதி அபிவிருத்தி அமைச்சர் பா.டெனிஸ்வரனினால் வீதி அபிவிருத்தித் திணைக்களத்தின் ஊடாக 2016 ஆம் ஆண்டு மாகாண அபிவிருத்தி நன்கொடை யின் கீழ் வீதி அபிவிருத்தித் திட்டங்களுக்கு நிதி ஒதுக்கப்பட்டு கடந்த ஏப்ரல் மாதம் வேலைத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்ட நிலையில், கடந்த 2 ஆம் திகதி புதன்கிழமை முல்லைத்தீவு மாவட்டத்திற்கு விஜயம் மேற்கொண்ட வடக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சர் பா.டெனிஸ்வரன் தண்ணீர் ஊற்று குமுறமுனை அளம்பில் வீதியில் அமைக்கப்படும் நீர் வடிந்தோடும் மதகுகளின் வேலைத்திட்டத்தை நேரில் சென்று பார்வையிட்டார்.

அந்த பகுதியிலே கடந்த மழை காலங்களில் அவ் வீதியினூடாக பயணித்த பாட சாலை மாணவர்கள் மற்றும் கிராமத்து மக்களது அவல நிலையை கருத்தில் கொண்டும் மக்களது வேண்டுகோளுக்கு இணங்கவும் அவ்வீதி வேலைத் திட்டத்திற்கும் அங்கே எட்டு கல்வெட்டுக்கள் அமைப்பதற்கும் நிதி ஒதுக்கியதாகவும், அவ்வாறு நிதி ஒதுக்கப்பட்டு வேலைத்திட்டங்கள் ஆரம்பித்து வைப்பதோடு நின்றுவிடாது சரியான மேற்பார்வை முகாமைத்துவமும், அர்ப்பணிப்பும் இருக்கும் பட்சத்தில் மக்களையும் மாவட்டங்களையும், மாகாணத்தையும் சிறந்த ஒரு அபிவிருத்திப் பாதையிலே கொண்டு செல்ல முடியும் என அமைச்சர் வலியுறுத்தினார். (2-312)

# பல்கலைக்கழகத்தில் கல்விகற்கும் 150மாணவர்களுக்கு உதவிப்பணம்



முல்லைத்தீவு மாவட்ட கல்விக்கும் அபிவிருத்திக்குமான நம்பிக்கை நிதியத்தினால் முல்லைத்தீவு மாவட்டத்தில் வருமானம் குறைந்த குடும்பங்களில் இருந்து பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் 150 மாணவர்களுக்கான 2016 ஆம்ஆண்டுக்குரிய உதவு வழங்கும் நிகழ்வு அண்மையில் நிதியத்தின் தலைவரும் மவட்டச் செயலாளருமான திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

உதவுத்தொகையானது நிதி வழங்குநர்களிடம் இருந்து பெறப்பட்டு மாணவர்களுக்கு வழங்கப்பட்டது.

இதில் முல்லைத்தீவு றொட்றிக் கழகத்தினூடாக 114 பேருக்கும்,

லண்டன் சிறுவர் வறுமை ஒழிப்பு நிவாரண நிதியத்தினால் 73 மாணவர்களுக்கும்

அவுஸ்திரேலிய உதவும் கரங்களினால் 15 மாணவர்களுக்கும்

முல்லைத்தீவு மாவட்ட கல்விக்கும் அபிவிருத்திகுமான நம்பிக்கை நிதியத்தினால் 22 மாணவர்களுக்கும் தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம் மற்றும் அதன் அங்கத்தவர் சார்பாக 9 மாண வர்களுக்கும் வழங்கப்பட்டது.

தலா ஒரு மாணவருக்கு 2500ரூபா தொடக்கம் 3 ஆயிரம் ரூபாவுக்கு உட்பட்ட தொகை வழங்கப்பட்டுள்ளது. இத் தொகையானது 12 மாதங்களுக்கு தொடர்ச்சியாக வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

இவ் உதவுத் தொகை வழங்கும் நிகழ்வானது வருடாவருடம் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் உள்ள நலன் விரும்பிகளால் வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். (2-15)

# முல்லைத்தீவு ஒருங்கிணைப்புக்குழு கூட்டங்களுக்கான திகதி அறிவிப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களுக்கான திகதிகளை வன்னி நாடாளுமன்ற உறுப்பினரும் முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத்தலைவர்களில் ஒருவரான மருத்துவர் சி.சிவமோகன் அறிவித்துள்ளார்.

இதற்கமைய, எதிர்வரும் 29ஆம் திகதி காலை 9 மணிக்கு ஒட்டுசுட்டான் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டமும் முற்பகல் 11 மணிக்கு கரைதுறைப்பற்று பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டமும் பிற்பகல் 3 மணிக்கு வெலிஓயா பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டமும் இடம்பெறவுள்ளன.

இதேவேளை, எதிர்வரும் 30ஆம் திகதி காலை 9 மணிக்கு புதுக்குடியிருப்பு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டமும் பிற்பகல் 2 மணிக்கு துணுக்காய் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டமும் பிற்பகல் 4 மணிக்கு மாந்தை கிழக்கு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டமும் நடைபெறவுள்ளன. அவ்வப் பிரதேச செயலகங்களில் இக் கூட்டம் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2)



கிளி நொச்சி மாவட்ட சமூக சேவைகள் அலுவலகத்தின் ஏற்பாட்டில் அநுராதபுரத்தில் இருந்து வருகைதந்த மதங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் அமைப்பினர் கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலக பிரிவில் உள்ள சிவநகர் கிராமத்தில் கடந்த 3 ஆம் திகதி மாற்றுத் திறனாளிகள் 18 பேருக்கு உலருணவுப் பொதிகள் வழங்கப்பட்டது. சிவநகர் வித்தியாலயத்தின் கிணறு முழுமையாக இறைத்து சுத்தம் செய்து கொடுத்துள்ளனர். முதியோர்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட 6 பேருக்கு உலருணவுப் பொதிகள் வழங்கப்பட்டது. (2-254)

# நயினையில் வீற்றிருந்து அகிலமெல்லாம் அருளாட்சி செய்கின்ற அன்னை நாகபூஷணி

வரலாற்றுச் சிறப்பும் ஆன்மீகச் சிறப்பும் அழகுச் சிறப்பும் திருவருட்பொலிவும் பெற்று விளங்குவது நயினாதீவு. நீர்வளம், நிலவளம், அருள்வளம், பொருள்வளம், கல்வி வளம், அன்னதான வளம் என்பன ஒருங்கே அமையப் பெற்றதும் நயினாதீவு என்னும் இனிய திருப்பதியேயாகும். ஈழநாட்டின் வரலாற்றுப் புகழ்மிக்க வழிபாட்டுத் தலங்களுள் நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலயமும் ஒன்றாகும். அலைகடல் நடுவே வீற்றிருந்து அகிலமெல்லாம் அருளாட்சி செய்கின்ற அன்னை பராசக்தி கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் பதியும் நயினையம் பதியாகும்.

அழகுத்திருக்கோலத்துடன் அருளாட்சி புரிகின்ற அம்பாள், அழகுக்கொருவரும் ஒவ்வாத ஆனந்த வல்லியாக அன்பர் என்பவர்க்கு நல்லன எல்லாம் தருபவளாக அருளாட்சி நடத்துகின்றாள். மூர்த்தி, தலம், தீர்த்தம் முறையாகத் தொழுவார்க்கு வார்த்தை சொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே என்ற தாயுமானவர் கூற்றிற்கமைவாகமாகவும் உருவெடுத்துத் தன்னை அடியார்களுக்கு வெளிக்காட்டிக் கணவிலும் நனவிலும் ஆடி அசைந்து அரசாட்சி செய்கின்ற பேரற்புதத்தை விபரிக்க முடியாது.

குழந்தைப் பேற்றையும் குழந்தைகளைக் காப்பாற்றும் பெருமையினையும் உடையவள் அன்னை பராசக்தி.சாந்தியும் சாந்நித்தியமும் அருளும் அனுக்கிரகமும் நிறைந்த அற்புதநாயகியாக நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் விளங்குகின்றாள்.

அடியார்கள் அம்பிகையை நெக்குருக நின்று நினைந்து வருகின்ற பக்தியே வியக்கத்தக்கதாகும். விபரிக்க முடியாது.அனலைதீவு நாகதம்பிரான் ஆலயத்தின் பக்கமாக ஆகாயத்திலே வட்டமிடும் கருடப்பறவையைக் காணும் அடியார்களது மெய்ப்பாடு உணர்வுபூர்வமானது.

மேற்படி நாகதம்பிரான் ஆலயத்திலிருந்து அம்பிகையை வழிபடுவதற்காக கடல்மார்க்கமாக வாயில் பூவுடன் வந்த நாகபாம்பொன்றினைக் கொல்ல முயன்ற கருடனை அவ்வழியே கப்பலில் வந்த வணிகன் கண்டு கொல்லவேண்டாமெனக் கூறியதாகவும் அதன்பின்பு வணிகன் நயினாதீவில் தன் கப்பலுடன் வந்திறங்கி அம்பாளுக்கு ஆலயம் அமைத்ததாகவும் நயினா பட்டர் என்னும் பிராமணரைப் பூசை செய்வதற்கு நியமித்தார் என்றும் சரித்திர வாயிலாக அறிய முடிகின்றது. அவரின் பெயரால் நயினார்தீவு என இத்தீவு அழைக்கப்படுவதாகவும் நாகத்தால் பூஜிக்கப் பெற்ற அம்மை என்பதால் நாகபூஷணி எனப் பெயர் பெற்றாள் என்றும் வரலாறுகள் தெரிவிக்கின்றன.



இங்குள்ள தீர்த்தம் பாவங்கள் பலவற்றையும் தீர்க்க வல்லது என்பது சைவ நன்மக்களின் அசையாத நம்பிக்கையாகும். தன்னை விரும்பித் தொழும் அடியார்களது வேண்டுதல்களை வேண்டியவாறு ஏற்று அவர்களுக்கு வேண்டியவாறு வழங்கும் அருள் உடையவள் அன்னை. அன்னையின் மணியோசை அகிலமெல்லாம் ஒலித்துக் கொண்டிருக்கின்றது.

அம்பிகையின் மீது அளவற்ற கருணையினால் பக்தி கொண்டு அடியார்கள் பெருமளவில் நயினையம்பதியில் கூடுகின்றார்கள். அடியார்களின் கண்ணீரைக் காணிக்கையாக ஏற்று கருணை பாலிப்பவள் அன்னை. நாகபூஷணியாக நாகராணியாக எழுந்தருளியிருந்து, நாகதோஷத்தை நிவர்த்தி செய்து புத்திரபாக்கியத்தையும் கொடுத்து அருள்பாலித்துக் கொண்டு இருக்கின்றாள்.

அடியார்களின் துன்ப துயரங்களெல்லாம் சூரியனைக் கண்ட பனிபோல மறைந்திட அருள் பாலிக்கின்றாள் அன்னை. காலாதி காலமாக முழு நம்பிக்கையோடு அம்பாளை வழிபட்டு நற்பேறு பெற்றோர் பலர். நயினை ஸ்ரீ நாகபூஷணியை வந்து தரிசியுங்கள். அம்பிகையின் அற்புதங்களை நயினையில் பாருங்கள். நயினை நாகபூஷணியே பாம்பாகவும் நாக

பக்தியோடு கூடியபண்பாட்டு அம்சங்களை வலியுறுத்தும் பெருமை கொண்ட வேதாகம விதிமுறைகளை அனுஷ்டான முறைகளை கைக்கொள்ளும் நடைமுறைத்தலமாக விளங்குவதுநயினைஸ்ரீநாகபூஷணி அம்மன் ஆலயம். பூர்வீகமான பழைமை மிகு மகிமைச் சிறப்பைக் கொண்டது நாகபூஷணி அம்பாளின் மூலவிக்கிரகம்.சாந்தியும் சாந்நித்தியமும் அருளும் அனுக்கிரகமும் நிறைந்த அற்புத நாயகி நயினை நாகபூஷணி. இம் மூலமூர்த்தியின் அமைப்பும் அதிசயமும் அற்புதமும் உலகிலே வேறெந்தத் திருத்தலத்திற்கும் இல்லைஎன்பது பேருண்மை. 108 அடி உயர வானுயர்கோபுரம் கிழக்கு முகப்பு வாசலில் கிழக்கு, தெற்கு,வடக்கு வீதிகளில் மூன்று கோபுரங்களையும் உள்வீதி, வெளி வீதிகளில் அழகிய சிற்பங்களையும் உள்வீதியில் வரலாற்று ரீதியான ஓவியங்களையும் பக்தி மயமான திருமுறைப்பாடல்களையும் அறுபத்து மூவரின் திருவுருவங்களையும் கொண்ட ஒருதெய்வீகமான கலைக் கோயிலாக மிளிர்கின்றது நயினை நாகபூஷணி அம்பாளின் ஆலயம்.

இத்திருத்தலத்தில் இன்று (06.06.2016)திங்கட்கிழமை வருடாந்த உயர் திருவிழா கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. அடியார்கள் அம்பிகை மீது கொண்ட அளவற்ற கருணையினால் பெருந்திரளாக உற்சவகாலங்களில் மட்டுமல்லாது அனுதினமும் அம்பாளைத் தரிசிப்பதற்காக நயினைம்பதியில் கூடுவார்கள். (19.06.2016) ஞாயிற்றுக்கிழமை தேர்த்திருவிழாவும் (20.06.2016) புதன்கிழமை தீர்த்தத்திருவிழாவும் நடைபெறும்.

நயினைத்தீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் பேரில் அன்பர்கள் பலர் பாமாலை பாடியுள்ளார்கள். அவ்வாறு பாடிப்பரவியுள்ள அன்பர்களில் குறிப்பிடத்தக்கவர் நயினை வரகவி நாகமணிப் புலவர் ஆவார். அவர் பாடிய தனிப்பாடல் ஒன்றை மட்டும் இங்கு தருவதால் அடியார்களுக்குப்பயனுள்ளதாக அமையும்.

"பெற்ற தாலன்னை பெறு
முயிரனைத்தும்
பேணலால்அன்னைபெற்றிடுவோர்
உற்றதாலன்னை விரும்பிய
அனைத்தும்
உதவலால் அன்னை எக்கலையும்
சொற்றதாலன்னை
உலகொடுவானும்
தொழுதலாலன்னையென்றென்றும்
பற்றதாங் கருணை
பொழிதலாலன்னை
பராபரை நாகபூஷணியாள்"

அடியார்கள் நலன் கருதி அமுதசுரபி அன்னதான சபையினரும் அமுது வழங்குவதற்கான சகல ஒழுங்குகளையும் செய்துள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

தாகசாந்தி நிலையத்தினர் போக்குவரத்துச் சேவையினர், மோட்டார் படகுச் சேவையினர், சுகாதார சேவையினர், தொண்டர் சபையினர், சாரணர்கள், சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் முதலுதவிப் படையினர், செஞ்சிலுவைச் சங்கத்தினர்,மக்கள் நலன் புரிச் சங்கத்தினர் அனைவரும் வேண்டிய ஒழுங்குகளைச் செய்துள்ளார்கள்- எல்லோருக்கும் அம்பிகையின் அருட்கடாட்சம் கிடைக்க வேண்டி பிரார்த்திக்கின்றோம்.

நயினை
நா.க.குமராசூரியர்(J.P)

## இன்று நயினை நாகபூஷணி அம்மனுக்கு கொடியேற்றம்



## நாகம் பூக்கொண்டு வர

அலைகடல் நடுவில் அமர்ந்திருப்பளே
இன்று உனக்கு கொடியேற்றம்
கோடி பக்தர் புடை சூழ
அலை கடல் ஒலி ஓசை எழுப்ப
நாதஸ்வர மேளம் ஒலி எழுப்பிட
நாகம் பூக்கொண்டு வர
பால் அபிஷேகம் பொழிய
பூமாரி அள்ளி வீச
கற்பூர தீபம் கமழ அன்னையே
உன் பக்தர் அரோகர அரோகரா
என பக்திப்பரவசமாய் திகழ
எம் துன்பம் யாவும் ஒரு நொடியில்
தீர அன்னையே நாகம்மாவே
கொடி ஏறிடம்மா கொடி ஏறிடு



வ.பவளகேசி
கொய்யாத்தோட்டம்

## நயினையின் நாயகியே கொடியேற்றி நல்வழிகாட்டு தாயே

அலைகடல் நடுவினிலே வீற்றிருந்து அருள் பாலிக்கும் தாயே!
அடியவர்கள் குறைகள் அனைத்தும் போக்கிடும் தாயே!
ஆர்ப்பரிக்கும் கடலருகே அலங்கார கோவில் கொண்ட தாயே!
நல்லாட்சிதனில் நாட்கள் நகர்கின்றன பலன் ஏதும்
எம்மக்களுக்கு இல்லைதாயே!
ஒன்றுபடா எம்மினத்தை ஒன்றாக்கி விடுதாயே!
நயினையின் நாயகியே கொடியேற்றி நல்வழி காட்டு தாயே!

நயினை விசு-இராசநாயகம்

## அன்னை அருள் பெற்றிடுவோம்

அருள் மழை பொழிகின்ற அன்னையவள்
அரவமது குடை நிழலில் வீற்றிருந்து
அலை கடலின் ஆர்ப்பரிப்பை ஆண்டு கொண்டு
ஆனந்த மயமாய் ஏற்றுகின்றான் கொடியதனை
அலை அலையாய் வாரீர் அடியவரே
அன்னையவள் அருளினை பெற்றிடவே

இ.தனலோஜன்
மானிப்பாய்



## நாகபூஷணிக்கு இன்று கொடி

கடல் நடுவில் வீற்றிருந்து
அருள் பாலிக்கின்ற
நயினை நாகபூஷணிக்கு
இன்று கொடி
அவ திருமுகம் காண
ஒரு நாள் வரம் கொடுங்கள்

எம்.அஞ்சலி
சுன்னாகம்

# தமிழ் மக்கள் பேரவை கலை கலாசாரக் குழுவில் இணைந்து சமூக மறுமலர்ச்சியில் ஈடுபடுவோம்

## சின்மயா மிஷன் வதிவிட ஆச்சாரியார் அறைகூவல்



(யாழ்ப்பாணம்)

**தமிழ் சமூகத்தின் விடிவுக்காக தமிழ் மக்கள் பேரவையின் கலை கலாசார குழுவில் இணைந்து சமூக மறுமலர்ச்சியில் ஈடுபடுவோம் என யாழ். சின்மயா மிஷன் வதிவிட ஆச்சாரியார் ஜாக்கிரத சைதன்ய சுவாமிகள் தெரிவித்துள்ளார்.**

தமிழ் மக்கள் பேரவையின் ஊடகவியலார் சந்திப்பு நேற்றைய தினம் யாழ். நக்கா வீதியில் அமைந்துள்ள கலாமுற்றம் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும், கருத்து தெரிவிக்கையில்,

தமிழ் சமூகத்தின் விடிவுக்காகவும் முன்னேற்றத்துக்காகவும்அனைத்துசமயத்தலைவர்கள்,புத்திஜீவிகள், துறைசார் நிபுணர்கள் இணைந்து தமிழ் மக்கள் பேரவை என்ற மக்கள் மயப்படுத்தப்பட்ட அரசியல் சார்பு இல்லாத அமைப்பை ஏற்படுத்தி அந்த அமைப்பின் உப குழுக்களாக ஒவ்வொரு துறையையும் முன்னெடுக்கக் கூடி குழுக்களை அமைத்துள்ளோம்.

அதன் அடிப்படையில் கலை, கலாசாரத்துக்கான உப குழு என்கின்ற வகையில் இன்றைய காலத்தின் தேவையாக இருக்கின்ற தமிழர்களாகிய எங்களுடைய கலை, கலாசாரம், பண்பாடு விழுமியங்கள்,பாரம்பரியங்கள் எல்லாம் எம்மை விட்டு விலகிச்சென்று கொண்டிருக்கின்ற இத் தருணத்திலே குறிப்பாக இளம் சமூகத்தினர் மத்தியில் இருந்து இவை விடுபட்டு சென்று கொண்டிருக்கும் இக்கால கட்டத்தில் இவற்றை மேம்படுத்துவதற்கும் மீண்டும் இளம் சமூகத்தினர் மத்தியில் மிளிரச் செய்வதற்கு நாங்கள் எவ்வாறு செயற்படலாம் என சிந்திப்பதற்காக பல செயற்றிட்டங்களை உருவாக்கி செயற்படுத்துவதற்காக தமிழ் மக்கள் பேரவையின் கலை, கலாசாரத்துக்கான உப குழு அமைக்கப்பட்டிருக்கிறது.

தமிழர்களுடைய தாயகமாகிய வடகிழக்கில் இன்று நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற கலாசார சீரழிவுகள், எமது இனத்துக்கு எதிரான செயற்பாடுகள் போன்றவற்றை தடுத்து நிறுத்தி தமிழர்களின் பாரம்பரிய கலை வடிவங்களை, கலாசார விழுமியங்களை பாதுகாக்கும் நோக்கில் இளம் சமூகத்தினர் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தி அவர்களையும் இந்த ஒரு அரிய சமூக மறுமலர்ச்சித் திட்டத்தில் இணைத்துக் கொள்ளும் திட்டமாக இது இருக்கின்றது.

இத்திட்டத்தில் பலதுறைகள் வகுக்கப்பட்டு அதனடிப்படையில் பல செயற்றிட்டங்கள் நடைமுறைப்படுத்தப் படவுள்ளன. அனைவரும் எம்முடன் இணைந்து செயற்படலாம் தமது கருத்துக் களை எடுத்துச்சொல்ல முடியும். தமிழ் மக்கள் அனைவரினதும் ஆதரவை வழங்கிஅத் துறைகளில் தம்மை ஈடுபடுத்த ஆர்வமுள்ளவர்கள் தமிழ் சமூகத்தின் நலனில் அக்கறைகொண்டவர்கள் . எமது கலை கலாசார பாரம்பரியத்தை பேண விரும்புபவர்கள் எம்முடன் இணைந்து கொள்ளமுடியும் என.அவர் மேலும் தெரிவித்தார்.(இ-9)

# மீனவர்கள் 11 பேருடன் 90 படகுகளையும் இலங்கையிடமிருந்து விடுவிக்க வேண்டும்

## பிரதமர் மோடிக்கு தமிழக முதல்வர் கடிதம்

இலங்கை கடற்படையினரால் சிறை பிடிக்கப்பட்ட 11 மீனவர்களையும், பறிமுதல் செய்யப்பட்ட 90 படகுகளையும் உடனடியாக விடுவிக்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என தமிழக முதல்வர் ஜெயலலிதா கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக பிரதமர் நரேந்திர மோடிக்கு நேற்று அவர் அனுப்பிய கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கை கடற்படையினரால் தமிழக மீனவர்கள் கைது செய்யப்படும் சம்பவம் தொடர்பாக மீண்டும் ஒரு முறை தங்களுக்கு கடிதம் எழுதுகிறேன். புதுக் கோட்டை மாவட்டம் கோட்டைப்பட்டினத்தில் இருந்து மீன் பிடிக்கச் சென்ற 4 மீனவர்கள் கடந்த முதலாம் திகதி இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் அனைவரும் கடந்த 2ஆம் திகதி அந்நாட்டின் காங்கேசன்துறைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

இந்தியா - இலங்கை இடையிலான கடந்த 1974 மற்றும் 1976 ஆம் ஆண்டுகளில் செய்யப்பட்ட ஒப்பந்தங்கள் அரசியலமைப்பு சட்டரீதியாக செல்லாது என உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளது. இதனால், தற்போதைய சர்வதேச கடல் எல்லையும் கேள்விக்குரியதாக உள்ளது. ஆனால், எல்லை தாண்டியதாகக் கூறி தமிழக மீனவர்களை இலங்கை கடற்படையினர் கைது செய்து வருகின்றனர்.

பலமுறை கோரிக்கை விடுத்தும் கைது செய்யப்பட்ட மீனவர்களையும், பறிமுதல் செய்யப்பட்ட படகுகளையும் விடுவிக்க இலங்கை அரசு தொடர்ந்து தாமதம் செய்து வருகிறது. இதனால் அப்பாவி தமிழக மீனவர்களும், அவர்களின் குடும்பத்தினரும் தங்கள் வாழ்வாதாரத்தை இழந்து தவிக்கின்றனர். இதனால் மீனவர்கள் விரக்தி அடைந்துள்ளனர். எனவே, இப்பிரச்சினையில் தாங்கள் தலையிட்டு இலங்கை சிறையில் உள்ள மீனவர்களையும், அவர்களின் படகு களையும் உடனடியாக விடு விக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.



படகுகள் நீண்ட காலமாக ஒரே இடத்தில் நிறுத்தப் பட்டுள்ளன. எனவே, அவை சேதமடையாமல் தடுக்க இலங்கை அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தி உடனடியாக படகுகள் விடுவிக்கப்படுவதை உறுதி செய்ய வேண்டும்.

பாக்கு நீரிணைப் பகுதியில் அதிகளவு மீன்பிடிப் பைக் குறைத்து, ஆழ்கடல் மீன்பிடிப்பை ஊக்குவிக்க தமிழக அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. ஆழ்கடல் மீன்பிடிப்புக்கு தேவையான கருவிகளை மானிய விலையில் வழங்கும் திட்டத்தை தமிழக அரசு வகுத்துள்ளது.

ஆழ்கடல் மீன்பிடிப்பு உட்கட்டமைப்புக்காக ரூ.1,520 கோடியும், ஆண்டு பராமரிப்புச் செலவாக ஆண்டுதோறும் ரூ.10 கோடியையும் விடுவிக்க வேண்டும் என தமிழக அரசு தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. இது தொடர்பாக கடந்த 3-6-2014, 7-8-2015 ஆகிய திகதிகளில் தங்களிடம் கோரிக்கை மனு அளிக்கப்பட்டுள்ளது. தமிழக அரசின் இந்த கோரிக்கையை மத்திய அரசு உடனடியாக நிறைவேற்ற வேண்டும்.

இப்பிரச்சினையில் தாங்கள் நேரடியாக தலையிட்டு, இலங்கை கடற்படையினரால் கடந்த முதலாம் திகதி கைது செய்யப்பட்ட 4 பேர் உட்பட 11 மீனவர்களையும், 90 படகுகளையும் தாமதமின்றி விடுவிக்க வெளியுறவுத் துறை மூலம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஜெயலலிதா வலியுறுத்தியுள்ளார். (இ-5)

# இரு சிறுமிகள் சித்திரவதை; சிறிய தந்தை கைதானார்

## ஏறாவூரில் சம்பவம்

மட்டக்களப்பு, ஏறாவூர் நகரில் சகோதரிகளாகிய சிறுமிகள் இருவரை சித்திரவதைக்கு உட்படுத்திய சம்பவம் தொடர்பில் அச்சிறுமிகளின் சிறிய தந்தையை நேற்று முன்தினம் சனிக்கிழமை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

எட்டு மற்றும் பத்து வயதுகளையுடைய இச்சிறுமிகள் இருவரும் சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டு வருவதாக மட்டக்களப்பு மாவட்ட சிறுவர் நன்னடத்தைப் பிரிவு அதிகாரிகளுக்கு பொதுமக்களிடமிருந்து தகவல் கிடைத்தது.

இதனை அடுத்து, இச் சிறுமிகள் வசித்துவந்த ஏறாவூர் நகரில் உள்ள வீட்டுக்குச் சென்ற அதிகாரிகள், சிறுமிகளைப் பரிசோதித்தபோது அவர்கள் சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டமைக்கான உடற்தழும்புகள் காணப்பட்டன.

இந்நிலையில், இந்தச் சிறுமிகள் இருவரும் மீட்கப்பட்டு, மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் இச்சிறுமிகளின் சிறிய தாய் (வயது 48) கடந்த முதலாம் திகதி புதன்கிழமை கைதுசெய்யப்பட்டு, அவருக்கு நான்கு மாதக் குழந்தை இருப்பதன்காரணமாக பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

“சிறிய தாயின் கணவரும் தங்களைச் சித்திரவதைக்கு உட்படுத்தி வந்துள்ளார்.

தேநீருக்குள் உப்புக் கலந்தும் உணவை உட்கொள்ள முடியாதளவுக்கு அதில் மிளகாய்த்தூள் கலந்தும் தந்துள்ளார்.

அத்துடன், இரவு வேளைகளில் தங்களுக்கு உறக்கத்தில் அடி ஆக்கினைகள் தந்ததுடன், சூடு வைத்து எழுப்பி வீட்டு வேலைகளைச் செய்யுமாறு பணித்துள்ளார் என இச்சிறுமிகள் பொலிஸாருக்கு அளித்துள்ள வாக்கு மூலத்தில் மேலும் தெரிவித்துள்ளனர்.

“மத்திய கிழக்கு நாடு ஒன்றுக்கு வீட்டுப் பணிப் பெண்ணாக தங்களின் தாய் சென்றுள்ளார்.

இதேவேளை, தந்தை பொலநறுவையில் அவரது தாயாருடன் வசித்து வருகின்றார்.

தாய் மத்திய கிழக்கு நாட்டுக்குச் செல்லும் போது, தங்களை அவரது தங்கையான தமது சிறிய தாயிடம் ஒப்படைத்துவிட்டுச் சென்றுள்ளார்.

இச் சிறுமிகளின் பராமரிப்பாளராக இருந்துவந்த தாயின் சகோதரியும் மற்றும் அவரது உறவினர்களும் தொடர்ந்து தங்களை சித்திரவதைக்கு உட்படுத்தி வந்துள்ளனர்" என ஏற்கனவே அச்சிறுமிகள் அளித்த வாக்கு மூலத்தில் தெரிவித்துள்ளனர்.

மேலும், இந்தச் சிறுமிகள் நீண்டகாலமாக பாடசாலைக்கு அனுப்பப்பட வில்லை என்பதும் விசாரணையிலிருந்து தெரிய வந்துள்ளது. (இ-5)

# வேகக் கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் விபத்து

## கர்ப்பிணிப் பெண் படுகாயம்

மட்டக்களப்பு - கொழும்பு பிரதான வீதியின் வாகனேரி பகுதியில் நேற்றுக் காலை 9 மணியளவில் மோட்டார் சைக்கிள் ஒன்று வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானதில் கர்ப்பிணிப் பெண் உட்பட இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

பொலநறுவையில் இருந்து காத்தான்குடி பயணித்த மோட்டார் சைக்கிள் வாகனேரி சந்தியில் வேகக் கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளானதில், அதில் பயணித்த கணவனும், மனைவியும் காயமடைந்துள்ளதாக வாழைச்சேனை மோட்டார் போக்குவரத்து பொலிஸார் தெரிவித்தனர். (இ-5)

# அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட 10 ஆயிரத்து 674 பேர் முகாம்களில் வாழ்கின்றனர்

வெள்ளம் மற்றும் மண்சரிவு அனர்த்தம் ஏற்பட்டு நேற்றுடன் 22 நாட்கள் கழிந்தும், இதுவரையில் 10 ஆயிரத்து 674 பேர் முகாம்களில் வாழ்வதாக தெரிவிக்கப்படுகின்றது. இவர்கள் 133 முகாம்களில் உள்ளனர். இவர்கள் 3107 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் எனவும் குறிப்பிடப்படுகின்றது. இவர்களில் அதிகமானவர்கள் சப்ரகமுவ மாகாணத்தைச் சேர்ந்தவர்கள் எனவும் குறிப்பிடப்படுகின்றது. கடந்த மே மாதம் 13 ஆம் திகதி இரவு முதல் இந்த அனர்த்த நிலைமை ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

# அவுஸ்திரேலியாவில் தொடரும் கனமழை

## பெருமளவான மக்கள் பாதிப்பு









அவுஸ்திரேலியாவின், கிழக்குப் பிராந்தியங்களில் தொடரும் கன்மழை மற்றும் பலத்த காற்று காரணமாக, நேற்று பல நூற்றுக்கணக்கிலான மக்கள் வேறு இடங்களுக்கு இடம்பெயர்ந்து சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. மேலும், சுமார் 26 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வீடுகளுக்கு மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளதாகவும்தெரிவிக்கப்படுகின்றது. அவுஸ்திரேலியாவின் கிழக்குக் கரையோரப்பகுதிகளில் கடந்த சில நாட்களாக தொடரும் கனமழை மற்றும் பலத்த காற்று காரணமாக குறித்த பகுதிகளில் வெள்ளம் ஏற்பட்டுள்ளதுடன், பலத்த சேதங்களும் பதிவாகியுள்ளதாக கூறப்படுகின்றது. இந்த நிலையில், வெள்ளத்தில் மூழ்கியுள்ள பகுதியில் உள்ள மக்கள் தொடர்ந்தும் வெளியேற்றப்பட்டுக் கொண்டிருப்பதாகவும், மின்சாரம் துண்டிக்கப்பட்ட நிலையில், பல பகுதிகள் ஸ்தம்பிதம் அடைந்து காணப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எவ்வாறான போதும், மேலும் பல பகுதிகளுக்கு மின்சார விநியோகம் தடைப்படலாம் என்று அந்த நாட்டு மின்சார உட்கட்டமைப்பு நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, சிட்னி நகரில் இருந்து 500 கிலோ மீற்றர் தொலைவில் அமைந்துள்ள ஒரு துறைமுகப் பகுதியில் படகுசவாரியில் ஈடுபட்டிருந்த நிலையில், பாரிய அலைகளின் காரணமாக விபத்திற்குள்ளாகி தத்தளித்துக் கொண்டிருந்த சிலரை குறித்த பகுதியின் மீட்புப்பணியாளர்கள் மீட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, காலநிலை சீர்கேட்டின் காரணமாக, சிட்னியில் அமைந்துள்ள இரண்டு சர்வதேச விமான நிலையங்களின் 3 ஓடுதளங்கள் மூடப்பட்டுள்ளதாக வும். இதனால் சிட்னிநோக்கி பயணித்த சில விமானங்கள் நேற்று முன்தினம் வேறு இராணுவ விமானத் தளங்க ளில் தரையிறங்கியதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இந்த நிலையில், கிழக்கு மற் றும் தெற்கு கரை யோரப் பகுதியில் வசிக்கும் மக்களை பாது காப்பான இடங்களுக்கு நகருமாறும், குறித்த பகுதி களுக்கு வெள்ள அபாயம்இருப்பதாகவும்அவுஸ்திரேலிய அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். (இ-5)

# இந்திய - பசுபிக் பிராந்தியத்திலுள்ள நாடுகள் ஒருங்கிணைவது அவசியம்



இந்திய - பசுபிக் பிராந்தியத்தில் மற்ற நாடுகளின் சுதந்திரத்தைப் பாதுகாக்க ஒருங்கிணைந்து செயற்படுவது அவசியம் என்று மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் மனோகர் பாரிக்கர் தெரிவித்தார்.

ஆசிய - பசுபிக் பிராந்தியத்தில் உள்ள நாடுகளின் பாதுகாப்புத் துறை அமைச்சர்களின் 15 ஆவது மாநாடு சிங்கப்பூரில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

உலகிலேயே பயங்கரவாத அச்சுறுத்தல் அதிகம் உள்ள பிராந்தியமாக ஆசிய - பசுபிக் பிராந்தியம் கருதப்படுகிறது. இந்த அச்சுறுத்தலை எதிர்கொள்ள இப்பிராந்தியத்தில் உள்ள நாடுகள் ஒற்றுமையுடன்செயற்படவேண்டும். இல்லையெனில், பயங்கரவாதத்தின் வேர்கள் நமது நாடுகளை ஆக்கிரமித்துக் கொள்ளும்.

பயங்கரவாதம் தவிர, நமது பிராந்தியத்தில் கடல் சார் பாதுகாப்பின்மை, கடற்கொள்ளையர்களால் பாதிப்பு, இயற்கைப் பேரிடர்கள் ஆகியவையும் பெரும் அச்சுறுத்தல்களாக உருவெடுத்துள்ளன. இவற்றை நாம் ஒருசேர எதிர்கொள்ள ஒத்துழைப்புடன் கூடிய கூட்டு நடவடிக்கைகளே அவசியம்.

**தென் சீனக் கடல் பிரச்சினை:** ஆசிய - பசுபிக் பிராந்தியத்தில் உள்ள நாடுகளின் பொருளாதாரத்தை தீர்மானிக்கும் முக்கிய காரணியாக இருப்பது கடல் சார் வர்த்தகம். இந்தியா உட்பட எந்த நாடும் இதற்கு விதிவிலக்கு அல்ல. உலகிலேயே வேகமாக வளரும் பொருளாதார சக்தியாக இந்தியா உருவெடுத்திருக்கும் இந்தத் தருணத்தில், சுதந்திரமான கடல் போக்குவரத்தை உறுதி செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் எங்களுக்கு (இந்தியா) ஏற்பட்டுள்ளது.

இப்போது தென் சீனக் கடல் பகுதியில் சுதந்திரமான கப்பல் போக்குவரத்து சில சக்திகளால் (சீனாவை மறைமுகமாக சுட்டிக்காட்டுகிறார்) கட்டுப்படுத்தப்படுகிறது. எந்த ஒரு நாடோ அல்லது பிராந்தியமோ கடற்பகுதியை சொந்தம் கொண்டாட முடியாது என்றார் மனோகர் பாரிக்கர்.

**பாரிக்கர் - கார்ட்டர் சந்திப்பு:** முன்னதாக, இந்த மாநாட்டுக்கு இடையே மனோகர் பாரிக்கரும், அமெரிக்க பாதுகாப்புத்துறை அமைச்சர் ஆஷ்டன் கார்ட்டரும் சந்தித்துப் பேசினர். (இ-5)

# கோர வீதி விபத்தில் சிக்கிய 17பேர் பலி; 35பேர் காயம்



மராட்டிய மாநிலம் மும்பை புனே எக்ஸ்பிரஸ் வீதியில் பயணிகள் சொகுசு பேருந்து 2 கார்கள் மீதும் மோதி 20 அடி பள்ளத்திற்குள் பாய்ந்ததில் 17 பேர் உயிரிழந்தனர். 35 பேர் காயம் அடைந்தனர்.

நவி மும்பையில் மும்பை-புனே எக்ஸ்பிரஸ் வீதியில் பழுதடைந்து நின்ற கார் ஒன்றிற்கு இன்வோ காரில் வந்தவர்கள் உதவி செய்து உள்ளனர். நேற்றுக்காலை 5.30 மணியளவில் சாத்ராவில் இருந்து மும்பை நோக்கி சென்று கொண்டிருந்த சொகுசு பேருந்து இரண்டு கார்கள் மீதும் மோதி, 20 அடி பள்ளத்திற்குள் விழுந்து விபத்துக்குள் சிக்கியது. கார்கள் நொருங்கின. பேருந்தும் உருக்குலைந்து விட்டது. இச்சம்பவம் தொடர்பாக தகவல் அறிந்து மீட்பு குழுவினர் விரைந்து சென்று மீட்பு பணியில் ஈடுபட்டனர். விபத்தில் 6 மாத குழந்தை உட்பட 17 பேர் உயிரிழந்து விட்டனர். 35 பேர் காயம் அடைந்து உள்ளனர்.

காயம் அடைந்தவர்கள் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு அங்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இது தொடர்பாக பொலிஸார் விசாரணை செய்து வருகின்றனர். (இ-5)

## தேசிய புலனாய்வுப் பிரிவை

# பாகிஸ்தான் அனுமதிக்காவிட்டால் இந்தியாவுக்கு செய்யும் துரோகம்

பதன்கோட் விமானப் படை தளம் மீது தாக்குதல் நடத்தப்பட்டது தொடர்பாக விசாரணைக்கு தேசிய புலனாய்வு பிரிவை பாகிஸ்தான் தன்னுடைய நாட்டிற்குள் அனுமதிக்கவில்லை என்றால் அது அந்நாடு இந்தியாவிற்கு செய்யும் துரோகமாகும் என்று மத்திய உள்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

பஞ்சாப் மாநிலம் பதன்கோட்டில் முக்கியஸ்தர்கள் கலந்து கொண்ட நிகழ்ச்சியில் நேற்று முன்தினம் மத்திய உள்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் பேசுகையில், பதன்கோட் தீவிரவாத தாக்குதல் தொடர்பாக விசாரிக்க பாகிஸ்தான் கூட்டு விசாரணை குழு இந்தியாவிற்கு வர அனுமதிகோரிய போது, இந்தியாவின் தேசிய புலனாய்வு பிரிவு பாகிஸ்தானிற்கு வந்து விசாரிக்கும் சிலரிடம் வாக்குமூலம் பெறும் என்று பரஸ்பர ஒப்பந்தம் செய்யப்பட்டது. இருப்பினும், பாகிஸ்தான் இதுவரையில் தேசிய புலன்ாய்வு பிரிவு அந்நாட்டுக்கு செல்ல அனுமதி வழங்கவில்லை. தேசிய புலனாய்வு பிரிவை பாகிஸ்தான் தன்னுடைய நாட்டிற்குள் அனுமதிக்கவில்லை என்றால் அது அந்நாடு இந்தியாவிற்கு செய்யும் துரோகமாகும் என்று கூறினார். தேசிய புலனாய்வு பிரிவை அனுமதித்து, பாகிஸ்தான் தீவிரவாதிகளுக்கு ஆதரவு தெரிவிக்காது என்பதையும் உறுதிசெய்ய வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார். பதன்கோட் விமானப் படை தளத்தில் தாக்குதல் முயற்சியில் ஈடுபட்ட தீவிரவாதிகள் பாகிஸ்தானில் இருந்து வந்தவர்கள் என்பது கண்டுபிடிக்கப்பட்டுவிட்டது. இப்பிரச்சினையை இந்தியா மிகவும் முக்கியமானதாக எடுத்துக் கொண்டுள்ளது என்றும் ராஜ்நாத் சிங் கூறியுள்ளார். (இ-5)

# ஏழு பேரையும் உடன் விடுவிக்க வேண்டும்

## வைகோ வலியுறுத்து

(டில்லி)

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் சிறையில் அடைக்கப்பட்டுள்ள 7 பேரையும் விடுதலை செய்ய வேண்டும் என ம.தி. மு.க. பொதுச் செயலாளர் வைகோ வலியுறுத்தினார்.

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் கைது செய்யப்பட்டு மதுரை சிறையில் அடைக்கப்பட்டுள்ள ரவிச்சந்திரனை நேற்று சந்தித்து நலம் விசாரித்தார். பின்னர் சிறைக்கு வெளியே செய்தியாளர்களிடம் பேசிய வைகோ,

ராஜீவ் கொலை வழக்கில் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ள 7 பேரையும் விடுவிக்க வேண்டும்.

அரசியலமைப்புச் சட்டத்தின் 161 ஆவது பிரிவின் கீழ் அவர்களை விடுவிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்என்றார். (இ-5)

# ஐ.எஸ். கோட்டைக்குள் சிரியப்படைகள் நுழைவு



(பெய்ரூட்)

**ஐ.எஸ். தீவிரவாதிகளின் கோட்டை என வர்ணிக்கப்படும் ராக்கா மாகாணத்திற்குள் சிரியப் படைகள் நுழைந்து தாக்குதல்களில் ஈடுபட்டு வருகின்றன.**

சிரியாவில் கடந்த 5 ஆண்டுகளாக உள்நாட்டுப்போர் நடந்து வந்தது. இப்போது அமெரிக்கா, ரஷ்யா முயற்சியால் போர் நிறுத்தம் அமுலுக்கு வந்துள்ளது. இருப்பினும் அங்கு ஆதிக்கம் செலுத்தி வருகிற ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கு எதிரான தாக்குதல் தொடர்ந்து நடந்து வருகிறது.

ஐ.எஸ். தீவிரவாதிகளின் கோட்டையாக ராக்கா மாகாணம் திகழ்ந்து வருகிறது. அந்த ராக்காவினுள் சிரியா படைகள் நேற்று முன்தினம் நுழைந்தன. அங்கு யூப்ரேட்ஸ் நதியின் மீது கட்டப்பட்டுள்ள தாப்கா அணையை நோக்கி அந்தப் படைகள் முன்னேறி செல்கின்றன. இதற்கிடையே ரஷ்ய படைகள் வான்தாக்குதல்கள் நடத்தி வருகின்றன.

இதுபற்றி சிரியாவில் உள்ள மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் இயக்குநர் ரமி அப்துல் ரகுமான் செய்தி நிறுவனம் ஒன்றிடம் பேசுகையில், " ரஷ்ய படையினரால் பயிற்றுவிக்கப்பட்ட சிரியா படையினர், ராக்காவினுள் 2014-ம் ஆண்டுக்கு பின்னர் இப்போதுதான் முதன்முதலாக நுழைந்துள்ளனர்" என தெரிவித்தார். (இ-5)

## பாலியல் தொல்லை குறித்த புகார்களுக்கு அலட்சியம் காட்டும் ஆயர்கள் பதவி நீக்கம்

### போப் பிரான்சிஸ் அதிரடி உத்தரவு

(மிலான்)

குழந்தைகளை பாலியல் தொல்லை செய்வதாக கத்தோலிக்க பாதிரியார்கள் மீது கடந்த 15 ஆண்டுகளாக புகார்கள் கூறப்பட்டு வருகின்றன. இதில் சிக்குகிற பாதிரியார்கள் பதவி நீக்கம் செய்யப்படுவதற்கு பதிலாக ஒரு சபையில் இருந்து மற்றொரு சபைக்கு மாற்றப்படுவது சர்ச்சையை ஏற்படுத்தி வந்தது.



இதன் காரணமாக சபைகளில் பாலியல் தொல்லை சம்பவங்களை அடியோடு ஒழிக்கும் விதத்தில் சிறப்பான வழிமுறைகளை உருவாக்குமாறு வாடிகன் கமிஷன் ஒன்றை போப் ஆண்டவர் பிரான்சிஸ் 2014 ஆம் ஆண்டு அமைத்துள்ளார்.

இந்த நிலையில் குழந்தைகள் மீதான பாதிரியார்களின் பாலியல் தொல்லை புகார்களை கையாள்கிறபோது, அலட்சியமாக ஆயர்கள் நடந்து கொண்டால், அது குறித்து விசாரணை நடத்தி பதவி நீக்கம் செய்ய வேண்டும் என்று போப் ஆண்டவர் பிரான்சிஸ் அதிரடி உத்தரவு பிறப்பித்துள்ளார். (இ-5)

## மும்பைத் தாக்குதல் வழக்கை ஆமை வேகத்தில் நடத்துவதா?

### பாகிஸ்தானுக்கு அமெரிக்கா கண்டனம்

(வோஷிங்டன்)

அமெரிக்க வெளியுறவுத் துறையின் வருடாந்த அறிக்கை வெளியாகியுள்ளது.

இதில் 2008 ஆம் ஆண்டு, நவம்பர் 26 ஆம் திகதி இந்தியாவின் மும்பையில் நடந்த தீவிரவாத தாக்குதல் வழக்கின் விசாரணையை ஆமை வேகத்தில் நடத்துவதற்கு கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதுமட்டுமன்றி, இந்த தாக்குதலில் மூளையாக செயற்பட்ட ஜாகியுர் ரகுமான் லக்வியை பிணையில் விடுவித்துள்ளதை கவனத்தில் கொண்டுள்ளதாகவும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.



இந்த அறிக்கையில் இடம் பெற்றுள்ள பிற முக்கிய அம்சங்கள்,

ஆப்கானிஸ்தானில் தலிபான் இயக்கத்தினரும், ஹக்கானி வலைச்சமூக இயக்கத்தினரும், தொடர்ந்து தாக்குதல்கள் நடத்தி வருகின்றனர். இவற்றில் பெரும்பாலான தாக்குதல்கள் பாகிஸ்தானில் வைத்து திட்டமிட்டு நடத்தப்பட்டுள்ளன.

லஷ்கர் இ தொய்பா, ஜெய்ஷ் இ முகமது போன்ற இயக்கங்கள் மீது பாகிஸ் தான் போதுமான நடவடிக்கை எடுக்கவில்லை, அவ்வியக்கங்கள் தொடர்ந்து பாகிஸ்தானில் செயற்படுகின்றன; பயிற்சி அளிக்கின்றன; நிதி திரட்டுகின்றன. மும்பை தாக்குதலில் மூளையாக செயற்பட்ட ஜமாத் உத் தாவா அமைப்பின் தலைவரான ஹபீஸ் சயீத், அடிக்கடி பொது இடங்களில் தோன்றுகிறார். அவரை தடுத்து நிறுத்துவதற்கு பாகிஸ்தான் தன் விரலைக் கூட நீட்டவில்லை இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது. (இ-5)

## நைஜரில் போகோஹராம் தீவிரவாதிகள் தாக்குதல்

### 32 வீரர்கள் பலி

(நைஜர்)

நைஜீரியாவின் அயல் நாடான நைஜரில் போகோஹராம் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் 32 இராணுவ வீரர்கள் உயிரிழந்தனர்.

ஆபிரிக்க நாடான நைஜீரியா மற்றும் சுற்றியுள்ள நாடுகளில் போகோ ஹராம் தீவிரவாதிகள் தொடர் தாக்குதல் நடத்தி வருகின்றனர். குறிப்பாக பாதுகாப்பு படையினரை குறிவைத்து தாக்குதல் நடத்துகின்றனர்.

அவர்களின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளை இராணுவம் அதிரடி தாக்குதல் நடத்தி மீட்டு வருகிறது.

நைஜீரியாவைப் பொறுத்தவரையில் அரசு படைகளுக்கும் போகோஹராம் தீவிரவாதிகளுக்கும் இடையே நடந்துவரும் கடும் போரினால் இதுவரை 20 ஆயிரம் பேர் இறந்துள்ளனர். 25 இலட்சத்துக்கும் அதிகமானோர் வீடுகளை இழந்துள்ளனர்.

இதேபோல் அயல் நாடான நைஜர் நாட்டிலும் கடந்த ஆண்டு பெப்ரவரி மாதம் முதல் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

இந்நிலையில், நைஜீரியாவில் இருந்து எல்லைப் பகுதி வழியாக நைஜர் நாட்டிற்குள் நுழைந்த தீவிரவாதிகள், போசோ நகரில் இராணுவ நிலைகள் மீது நேற்று முன்தினம் தாக்குதல் நடத்தினர்.

இராணுவமும் பதில் தாக்குதல் நடத்தியது. எல்லைப் பகுதியில் இந்த சண்டை நடந்ததால் நைஜீரிய இராணுவமும் தீவிரவாதிகள் மீது தாக்குதல் நடத்தியது.

நீண்ட நேரம் நடந்த இந்த சண்டையில் நைஜரைச் சேர்ந்த 30 வீரர்களும், நைஜீரியாவின் 2 வீரர்களும் என மொத்தம் 32 பேர் உயிரிழந்ததாக நைஜர் பாதுகாப்புத்துறை தெரிவித்துள்ளது. மேலும், நேற்று அதிகாலையில் இராணுவம் பதில் தாக்குதல் நடத்தி அனைத்து நிலைகளையும் தங்கள் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்திருப்பதாகவும், தற்போது நிலைமை கட்டுக்குள் இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

## இந்திய-ஆப்கான் நட்புறவு அணையை இந். பிரதமர் மோடி திறந்து வைத்தார்

(காபூல்)

ஆப்கானிஸ்தானில், இந்தியாசார்பில்கட்டிய அணையை, இந்திய பிரதமர் நரேந்திர மோடி, அந்நாட்டு ஜனாதிபதி அஷ்ரப் கனியுடன் சேர்ந்து நேற்று முன்தினம் திறந்து வைத்தார்.

பயங்கரவாதத்தால் பாதிக்கப்பட்ட, ஆப்கானில், இந்திய அரசு நட்பு அடிப்படையில் மறுசீரமைப்புப் பணிகளை மேற்கொண்டு வருகிறது. அந்த வரிசையில், இருநாட்டு நட்புறவை மேலும் வலுப்படுத்தும் வகையில் ஹிராட் மாகாணத்தில், 1,700 கோடி ரூபாய் செலவில், இந்திய அரசு அணையை கட்டியுள்ளது.



இந்நிலையில், ஆப்கான், கட்டார், சுவிட்சர்லாந்து, அமெரிக்கா, மெக்சிகோ ஆகிய ஐந்து நாடுகளுக்கு, பிரதமர் நரேந்திர மோடி, அரசு முறை பயணம் மேற்கொண்டுள்ளார்.

முதல் பயணமாக நேற்று முன்தினம் ஆப்கான் சென்றடைந்த அவர், ஹிராட் மாகாணத்தில் கட்டப்பட்டுள்ள அணையை, அந்நாட்டு ஜனாதிபதி அஷ்ரப் கனியுடன் இணைந்து திறந்து வைத்தார். (இ-5)




# யார் மன்னர்?

…இரண்டாம் மகன், தனக்கு அரசியலில் பங்கு கிடைத்த நாள் முதலாக ஆடம்பர வாழ்க்கையை மேற்கொண்டொழுகி வந்தான். நன்றாக உடை உடுத்துவது, சுவை மிக்கவற்றையே உண்பது, இன்பமாகப் பொழுது போக்குவது ஆகியவற்றில் தன் கவனத்தை முழுமையாகச் செலுத்திக் கொண்டிருந்தான்.

மூன்றாம் மகனுக்குத் தந்தையின் மறைவு அதிர்ச்சியைக் கொடுத்தது. ஆனாலும், "தந்தைக்குப் பின் அவரது பெயர் கெடாத வகையில் நாட்டைப் பொறுப்புடன் ஆள வேண்டுமே.

மூத்த அண்ணன் இதனை அறியாமல் துயரத்தில் மூழ்கியிருக்கிறான் இரண்டாம் அண்ணன் கடமைகளை மறந்து, உலக இன்பங்களில் மூழ்கிக் காலங்கழிக்கிறான். எல்லாப் பொறுப்புகளும் என்னைச் சார்ந்துவிட்டன. மக்களின் நலம் கருதி செங்கோல் செலுத்தும் திறனை இறைவன் எனக்கு அளித்தருள்வானாக.

இவன் தந்தை இவனைப் பெறுவதற்கு என்ன தவம் செய்தானோ என்று உலகம் சொல்லுமாறு நடந்து கொள்வதுதான், மகன் தந்தைக்குச் செய்யத்தக்க கடமையாகும். அந்தக் கடமையைச் செய்ய நல்ல மன வலிமையையும், ஆற்றலையும் நான் பெறுவது எவ்வாறு?' என்று எண்ணி எண்ணி அமைச்சர்களுடன் கலந்து ஆலோசித்துத் திட்டமிட்டு அரசியல் அலுவல்களை ஒழுங்காகக் கவனித்து வந்தான்.

அவ்வாறு இருந்து வந்த மூன்று பிள்ளைகளின் நிலைமைகளையும், அக்கிழவனிடம் விளக்கமாக எடுத்துக் கூறினர். அவற்றைக் கேட்டறிந்த அக்கிழவன் வேறு எவனும் அல்லன், பழைய மன்னவனாகிய தந்தைதான்.



அம்மன்னவன் திட்டமிட்டு அவ்வாறு செயல் புரிந்தான். தான் இறந்தபிறகு என்ன நடக்கும் என்பதை அறியவேண்டி, தான் இறந்துவிட்டதாகக் கூறுமாறு தன்னுடன் வந்தவர்களிடம் கூறி, அவர்களை முன்னதாக அனுப்பி வைத்தான். அவர்களும் திரும்பி வந்து அவ்வாறே செய் தனர். பின்னர் மன்ன வனே கிழக்கோலத்தில் வந்து, தன் புதல்வர் களின் நிலைமைகளைக் கேட்டறிந்தார்.

அப்போது மன்ன வனுக்குத் தன்மீது உண்மையான அன்புள்ள மகன் எவன் என்பது நன்கு விளங்கிவிட்டது. மன்னன் உடனே அரண்மனைக்குச் சென்றான். தான் பழைய மன்னன் என்பதை வெளிப் படுத்தினான். எல்லாரும் அவனை பெருமகிழ்ச்சியுடன் வரவேற்றனர். அவன் அரண்மனையில் சில நாட்கள் தங்கி யிருந்து, தன் மூன்றாம் புதல்வனாகிய இளையமகனே ஆளுதல் வேண்டும் என்று முடிவு செய்து, அவனுக்கு முடி சூட்டினான்.

இளைய மகனுக்கு முடி சூட்டிய பின்னர், மன்னன் மன அமைதியோடு காசிக்குச் சென்றான். அங்கே தங்கித் தன் இறுதி நாட்களைக் கழித்தான்.

(முற்றும்)




- 1508 - புனித ரோமப் பேரரசன் முதலாம் மாக்சிமிலியன் பிரியுல்லா என்ற இடத்தில் வெனிசியப் படைகளிடம் தோற்றான்.
- 1644 - கின் அரசமரபின் மஞ்சு படைகள் பெய்ஜிங் நகரைக் கைப்பற்றினர்.
- 1711 - யாழ்ப்பாணத்தில் இந்து மதச் சடங்கு ஒல்லாந்து அரசினால் தடை விதிக்கப பட்டது.
- 1752 - மொஸ்கோவின் மூன்றில் ஒரு பங்கு தீயினால் அழிந்தது. 18,000 வீடுகள் சேதமடைந்தன.
- 1761 - சூரியனுக்கும் பூமிக்கும் இடையில் வீனஸ் கோளின் நகர்வு பூமியின் பல இடங்களிலும் அவதானிக்கப்பட்டது.
- 1808 - நெப்போலியனின் சகோதரன் ஜோசப் பொனபார்ட் ஸ்பெயின் மன்னன் ஆனான்.
- 1832 - புாரிசில் மாணவர் எழுச்சி முறியடிக்கப்பட்டது.
- 1844 - கிறிஸ்தவ இளையோர் அமைப்பு (YMCA) லண்டனில் அமைக்கப்பட்டது.
- 1859 - குயின்ஸ்லாந்து என்ற பெயரில் புதிய குடியேற்ற நாடு நியூ சவுத் வேல்ஸ் இலிருந்து பிரித்தெடுக்கப்பட்டது.
- 1862 - அமெரிக்க உள்நாட்டுப் போர்: அமெரிககப் படைகள் டென்னசியில் மெம்ஃபிஸ் நகரை கூட்டமைப்புப்படைகளிடம் இருந்து கைப்பற்றினர்.
- 1882 - அரபிக் கடலில் இடம்பெற்ற புயலால் பம்பாயில் 100,000 பேர்களுக்கு மேல் கொல்லப்பட்டனர்.
- 1912 - அலாஸ்காவில் நொவரப்டா எரிமலை வெடித்தது.
- 1930 - இலங்கையில் வீரகேசரி நாளிதழ் தொடங்கப்பட்டது.
- 1944 - இரண்டாம் உலகப் போர்: நோமண்டி சண்டை ஆரம்பமானது.
- 1971 - சோயுஸ் 11 ஏவப்பட்டது.
- 1974 - சுவீடனில் நாடாளுமன்ற் முடியாட்சி அமைக்கப்பட்டது.
- 1981 - இந்தியாவில் தொடருந்து ஒன்று பகுமதி ஆற்றில் தடம் புரண்டு வீழ்ந்ததில் ஆயிரத்துக்கும் அதிகமானோர் கொல்லப்பட்டனர்.
- 1984 - இந்திய இராணுவத்தினர் அம்ரித்சரில் உள்ள பொற்கோயிலில் தாக்குதல் நடத்தியதில் 576 பேர் கொல்லப்பட்டு 335 பேர் காயமுற்றனர்.
- 1993 - மங்கோலியாவில் முதலாவது நேரடியான அதிபர் தேர்தல் நடைபெற்றது.
- 2004 - இந்தியாவில் தமிழ் மொழி செம்மொழியாக அறிவிக்கப்பட்டது.

**பிறப்புகள**

- 1799 - அலெக்சாண்டர் புஷ்கின், ரஷ்ய எழுத்தாளர், கவிஞர். (இ. 1837)
- 1893 - கருமுத்து தியாகராஜன் செட்டியார், இந்திய விடுதலை இயக்கத்தில் முக்கியப் பங்கு வகித்தவர். (இ. 1974)
- 1901 - சுகர்னோ, இந்தோனீசியாவின் முதல் ஜனாதிபதி. (இ. 1970)
- 1930 - சுனில் தத், இந்தியத் திரைப்பட நடிகர் (இ. 2005)
- 1948 - சுப்ரமண்ய ராஜ/, தமிழ் எழுத்தாளர். (இ. 1987)
- 1986 - பாவனா, தமிழ், மலையாளத் திரைப்பட நடிகை.

**இறப்புகள்**

- 1947 - மு. சி. பூரணலிங்கம் பிள்ளை, தமிழறிஞர். (பி. 1866)
- 1968 - ரொபேர்ட் எஃப். கென்னடி, அமெரிக்க செனட்டர். (பி. 1925)
- 1996 - ஜோர்ஜ் ஸ்நெல், நோபல் பரிசு பெற்றவர். (பி. 1903)
- 2007 - வீ. கே. சமரநாயக்க, இலங்கையின் அறிவியியலாளர். (பி. 1939)
- 2008 - ஜோர்ஜ் சந்திரசேகரன், இலங்கை வானொலி ஒலிபரப்பாளர். (பி. 1940)
- 2009 - ராஜமார்த்தாண்டன், கவிஞர், எழுத்தாளர்.

**சிறப்பு நாள்**

- தமிழீழம் - மாணவர் எழுச்சி நாள்.
- சுவீடன் - தேசிய நாள்.
- தென் கொரியா - நினைவு நாள்.
- குயின்ஸ்லாந்து நாள.

## கருமுத்து தியாராஜன் செட்டியார்



கருமுத்து தியாகராஜன் செட்டியார் கலைத்தந்தை என்று அழைக்கப்பட்டவர். இந்திய விடுதலை இயக்கத்தில் முக்கியப் பங்கு வகித்தவர். மதுரையில் புகழ்பெற்ற தியாகராசர் கலைக்கல்லூரி, தியாகராசர் பொறியியல் கல்லூரி போன்ற கல்வி நிறுவனங்களையும் நிறுவியவர். கருமுத்து தியாகராஜன் தமிழ்நாடு, சிவகங்கை மாவட்டத்தில் முத்துக்கருப்பன் செட்டியாருக்கு பத்தாவது கடைசி மகவாகப் பிறந்தவர். இவர் இலங்கையில் கொழும்பு புனித தோமஸ் கல்லூரியில் கல்வி கற்றார். இலங்கையின் மலையகத் தோட்டத் தொழிலாளர் நலன்களுக்காக அங்கு பத்திரிகை ஒன்றையும் தொடங்கி நடத்தினார். இந்தியா திரும்பிய தியாகராஜன் 1925 ஆம் ஆண்டில் மதுரையில் மீனாட்சி மில் என்ற தொழில் நிறுவனத்தை நிறுவினார். நூல் ஆலையும் நெசவு ஆலையும் அமைத்தார். இவர் தமிழ் மீது தனி ஆர்வம் காட்டி வந்தார். தமிழ்நாட்டில் இந்தியைத் தேசிய மொழியாக, பாடமாக இந்தி கற்பிக்கப்பட வேண்டும் என்று கொண்டு வந்த கொள்கைகளை எதிர்த்தவர்களுள் இவரும் ஒரு முன்னோடியாகத் திகழ்ந்தார். இதற்காக இளம் வயது முதல் தாம் இருந்து வந்த காங்கிரஸ் கட்சியில் இருந்து விலகிக் கொண்டார். சோமசுந்தர பாரதியாரும், பெரியார் ஈ.வெ.ராவும் இந்தி எதிர்ப்பு இயக்கம் நடத்திய போது அவர்களுக்கு உறுதுணையாக இருந்தார். இவர் இலங்கை கொழும்பு மாநகரிலிருந்து வந்த ஆங்கில நாளிதழ் ஒன்றில் ஆசிரியப் பிரிவில் இளமையில் பணிபுரிந்து வந்திருந்த போதிலும் ஆங்கிலம் கலவாது தமிழில் பேசியும் எழுதி வந்தார்.

1917ஆம் ஆண்டு காங்கிரஸில் சேர்ந்து தொழிலாளர் தலைவராகவும், சில முறை மாகாணக் காங்கிரஸ் கமிட்டியின் செயலாளராகவும் இருநதார். மகாத்மா காந்தியடிகள் மதுரைக்கு வந்திருந்த போது அப்போது தியாகராசச் செட்டியார் வாழ்ந்த மேலமாசி வீதி வீட்டில் அவருடைய விருந்தாளியாகத் தங்கினார். சான்று தேவை அப்போது காந்தியடிகள் விரிவான உடைகளையும் தலைப்பாகையையும் சட்டையையும் கைவிட்டு ஆடைகளைக் குறைத்துக்கொள்ள முடிவு செய்தார். தமிழ்நாடு நாடு அரசு கதர்க்கடை ஒன்றினை இப்பொழுது அவ்வீட்டில் நடத்தி வருகின்றது. அதன் மாடியில் பொதுமக்கள் காண ஒரு மகாத்மா காந்திஜி சிலையினை நிறுவி புகைப்படக் கண்காட்சியையும் நடத்தி வருகினறது. ஒக்டோபர் மாதம் இரண்டாம் திகதி அரசாங்க அதிகாரிகள் அங்கு வருகின்றனர்.

# ஆட்கடத்தலுக்குதவிய அதிகாரி மீது இராணுவ நீதிமன்றத்தில் வழக்கு!

(கொழும்பு)

**சட்டவிரோத ஆட்கடத்தல்களில் ஈடுபட்ட கடற்படை அதிகாரி ஒருவர் மீது இராணுவ நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்படவுள்ளதாக கடற்படை தளபதி வைஸ் அட்மிரல் ரவீந்திர விஜேகுண வர்த்தன தெரிவித்துள்ளார்.**



கே.சி.வெலகெதர என்ற இந்த அதிகாரி. கடற்படைக்கு தெரியாமல் வெளிநாட்டுக்கு சென்றமை தொடர்பிலும் குற்றச்சாட்டுக்கு உள்ளாகியுள்ளார்.

இதேவேளை வெலகெதர. கடற்படை தடுப்பில் வைககப்பட்டுள்ளதாக வெளியான தகவல் தொடர்பில் கருத்துரைத்துள்ள கடற்படை தளபதி. அவரின் குடும்பத்தினர் அவரை கடற்படை தலைமையகத்தில் பார்வையிட முடியும். குற்றச்சாட்டின்படி அவர் தடுத்து வைக்கப்பட்டிருந்தால் அவர்கள் மனித உரிமைகள் ஆணைக் குழுவில் முறையிட முடியும் என்றும் தெரிவித்தார். (இ-5)

# இராணுவத் தளபதி புலனாய்வுப் பணிப்பாளருக்கு எதிராக வழக்கு?

(கொழும்பு)

பல கொலை வழக்குகள் தொடர்பான விசாரணைகளுக்கு ஒத்துழைக்கத் தவறினால். இலங்கை இராணுவத் தளபதி மற்றும் இராணுவப் புலனாய்வுப் பணிப்பாளர் ஆகியோருக்கு எதிராக. குற்றவியல் வழக்குகளைப் பதிவு செய்வது குறித்து குற்றப்புலனாய்வுத் திணைக்களம் ஆலோசித்து வருகிறது.

கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்று இந்தச் செய்தியை வெளியிட்டுள்ளது.

பல்வேறு படுகொலைகள் தொடர்பான விசாரணைகளுக்கு குற்றப் புலனாய்வுப் பிரிவினர். இராணுவப் புலனாய்வுத்துறையின் உதவியைக் கோரியிருந்தனர். ஆனால் இராணுவப் புலனாய்வுத்துறை. விசாரணைகளுக்குத் தேவையான தகவல் களையோ சான்றுகளையோ வழ ங்கி ஒத்துழைக்கவில்லை.

இந்த நிலையில் கடந்த வாரம், லசந்த விக்கிரமதுங்க கொலை தொடர்பான விசாரணை கல்கிசை நீதிமன்றத்தில் நடந்த போது. விசாரணைக்குத் தேவையான தகவல்கள் அனைத்தையும் வழங்குமாறு இராணுவப் புலனாய்வுப் பிரிவுக்கு நீதவான் உத்தரவிட்டிருந்தார்.

லசந்த விசாரணையில், இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் சிலரின் நடமாட்டங்கள் தொடர்பாக குற்றப் புலனாய்வுப் பிரிவு தகவல்களைக் கோரியுள்ளதாக அறியப் படுகிறது.

நீதிமன்றம் உத்தரவிட்ட போதிலும். லசந்த கொலை தொடர்பான விசாரணைக்கு இலங்கை இராணுவப் புலனாய்வுத்துறை ஒத்துழைக்கவில்லை.

இந்த நிலையில் லசந்த கொலை விசாரணைக்கு ஒத்துழைக்காவிடின், இராணுவத் தளபதி மற்றும் இராணுவப் புலனாய்வுப் பணிப்பாளருக்கு எதிராக. கொலைக் குற்றம் தொடர்பான விசாரணைகளுக்குத் தேவையான தகவல்களை வழங்க மறுப்பதாக. குற்றவியல் வழக்கை பதிவு செய்யப் போவதாக இலங்கை பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஏற்கனவே. உயர்மட்டங்களுடன் தொடர்புடைய வழக்குகளில் சான்றுகளை மறைத்த குற்றச்சாட்டில் பல பொலிஸ் உயர் அதிகாரிகளையே குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தடுத்து வைத் துள்ள நிலையில், இரா ணு வத்தினரை சட்டத்துக்கு மேலானவர்களாக கருத முடியாது என்று இலங்கை பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (இ-5)

# பொலிஸாரிடம் உள்ள ஆயுதங்கள் குறித்து பொலிஸாருக்கே தெரியாது

பொலிஸ் திணைக்களத்தில் காணப்படும் ஆயுதங்கள் பற்றிய சரியான தகவல்கள் பொலிஸ் திணைக்களத்திடமே இல்லை என தெரிவிக்கப்படுகிறது.

பொலிஸ் திணைக்களத்தில் காணப்படும் துப்பாக்கிகள் உள்ளிட்ட ஏனைய ஆயுதங்கள் பற்றிய துல்லியமான தகவல்கள் பொலிஸ் தலைமையகத்தில் பேணப்படவில்லை.

• பொலிஸ் திணைக்களத்திற்கு சொந்தமான பாரியளவிலான ஆயுத தொகை பற்றிய சரியானதும் துல்லியமானதுமான தகவல்கள் இல்லாமை ஓர் பாரதூரமான பிரச்சினையாகும்.

பொலிஸாரிடம் காணப்படும் ஆயுதங்கள் தொடர்பில் சரியான புள்ளி விபர மதிப்பீடுகள் இதுவரையில் செய்யப்படவில்லை.

கடந்த போர் காலத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குச் சொந்தமான பெருந்தொகை ஆயுதங்களை விசேட அதிரடிப்படையினரும பொலிஸாரும் கையற்றியிருந்தனர்.இந்த ஆயுதங்கள் பற்றியும் பொலிஸாரிடம் சரியான தகவல்கள் கிடை யாது என சிங்கள ஊடக மொ ன்று செய்தி வெளியிட்டுள்ளது. (இ-5)

# கட்டுநாயக்க விமான நிலையம் மூன்று மாதங்கள் மூடப்படும்

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலைய விமான ஓடுபாதையின் திருத்த வேலைகளுக்காக எதிர்வரும் 2017 ஜனவரி 06 ஆம் திகதி முதல் 2017 ஏப்ரல் 06 ஆம் திகதியுள்ள மூன்று மாத காலத்துக்கு பகல் வேளையில் மூடப்பட்டிருக்கும் என விமான நிலைய அதிகாரிகள் தீர்மானம் எடுத்துள்ளனர்.

இவ்வாறு இப்பாதைகள் காலை 8.30 மணி முதல் மாலை 4.30 மணிவரையில் மூடப்படவுள்ளது.

இவ்வாறு மூடப்படுவதனால் விமான நிலையத்துக்கு பாரிய இழப்பு ஏற்படும் எனவும், இதற்கு தமது பாரிய எதிர்ப்பைத் தெரிவித்துக் கொள்வதாகவும் ஸ்ரீலங்கன் விமான சேவையின் தொழிற்சங்கங்கள் தெரிவித்துள்ளன. (இ-5)

## இன்று ஒரு தகவல்

### அம்புக் கேள்விகள்

நறுக்குத் தெறிச்சாப்பல நாலு கேள்வி கேட்டுட்டு வந்துடறேன்! என்று வேகமாக புறப்படுகிறவர்கள் நட்டத்தோடுதான் திரும்புவார்கள். இதில் சந்தேகமே வேண்டாம்.

நம் பக்கம் எவ்வளவோ நியாயமிருக்கும். நான்கு கேள்வி கேட்டாலும் எதிராளி திண றிப் போகும் படி அல்லது பதில் சொல்ல முடி யாதபடி நம்மால் கேள்வி கேட்டுவிட எத்த னையோ சந்தர்ப்பங்கள் வாய்க்கும். அப் படிக் கேட்டு விட்டால்தான் ஆத்திரம் தீரும். மனம் ஆறும் என்பது போன்ற மனப் பிரம்மையும் நமக்குத் தோன்றும். போதாக் குறைக்கு நமக்கு அப்படி ஓர் எண்ணம் இருக்கிறது என்று தெரிந்தால் அதை விசிறி விசிறி அதிகப்படுத்த எத்த னையோ பேர் தயாராக இருக்கிறார்கள்.

இவர்களது விசிறல்களுக்கு நாம் பலி யாகி விடக் கூடாது.காரணம், அவற்றின் விளைவுகளைச் சிந்திக்க வேண்டியவர்கள் அவர்களல்ல நாம்!

மற்றவர்களைப் புண்படுத்தும் கேள்வி களைக் கேட்டுவிடுவதன் மூலம் நம் மனம் ஆறும் என்று எண்ணுகிறீர்களா? முதலில் அப்படித்தான் தெரியும். ஆனால் போகப் போக ஏன்தான் அப்படிக் கேட்டோமோ என்று ஒரு நேரம் நினைத்து நினைத்து வருந்த வேண்டிவரும். நம்முடைய அம்புக் கேள்விகள் அப்பாவிகளைத் துளைத்தால் மேற்கூறிய உணர்வு ஏற்படும். ஒருவேளை அத்தகைய கேள்விகளுக்கு இலக்காக ஆகிறவர்கள் பொல்லாதவர்களாக இருந்து விட்டால் விளைவு விபரீதம் ஆகிவிடும். நம்மைப் பழிவாங்குவது, அவமானப்படுத்துவது என அவர்கள் முடிவு செய்துவிட்டாலோ நாம் ஏன் தான் அத்தகைய கேள்விகளைக் கேட் டோமோ என நாம் கண்டிப்பாக வருந்தும் படி இவர்கள் ஆக்கிவிடுவார்கள்.அதன் பிறகு நான் அதை யல்லாம் எதிர்பார்த்துத் தான் இறங்கினேன் என்று சொல்லிக் கொள்வது நம்மை நாமே ஏமாற்றிக் கொள்ளும் செயலே தவிர ,வேறு அல்ல.

என்னால் என்னுடைய கோபத்தை -வருத்தத்தைக் கொட்டித் தீர்க்காமல் இருக்க முடியாது என்கிறீர்களா? சமயம் வரும்வரை காத்திருங்கள். அப்போதும் கூட அவர்கள் கோபப்படாத படியும் உங்கள் மீது வருத்தம் கொள்ளாத படியும் தங்கள் தவறுகளை, குறைகளைத் தாங்களே உணரும் படியும் எடுத்துச் சொல்லுங்கள்.

சிலர் தங்களுக்குக் கட்டுப்பட்டவர்களை இன்னுமா செய்யவில்லை? ஏன் செய்யவில்லை? என்றெல்லாம் அவர்களின் வயிற்றெரிச்சலைக கொட்டிக் கொள்ளும்படி கேள்வி கேட்பார்கள். இப்படிப்பட்ட கேள்விகள்-

முடியாது போ ! என்றோ இவருக்கு வேறு வேலையில்லை என்றோ அவர்கள் எண்ணும் படியோ அல்லது வாய்விட்டுச் சொல்லும் படியோ அமையுமே தவிர சாதகமாய் அமைவது அபூர்வம். பயம் காரணமாக வேண்டுமானால் சாதகமாக அமையலாம்.

மற்றவர்களின் குற்றங்குறைகளைச் சுட்டிக் காட்டும் கேள்விகள், மற்றவர்களது மனதில் குற்ற உணர்வை ஏற்படுத்தும் கேள்விகள் ஆகியவை காலப் போக்கில் நமக்கெதிராகவே வேலை செய்வதை நாம் நன்கு உணர முடியும்.

சிலர் எதிராளியின் விளக்கத்தைத் தெரிந்து கொள்ளாமலேயே கேள்விகளால் மனத்தைத் துளைப்பார்கள்.

நம் கேள்வியால் ஆர்வத் தொனி இருக்கலாம்.அதிகாரத் தொனி வேண்டாம். சாதகமான கேள்விகளாக இருக்கலாம். பாதகமாக இருக்க வேண்டாம்.

நல்லெண்ணத்தை அளிக்கும் கேள்விகள் இருக்கலாம்; நல்லெண்ணத்தை அழிக்கும் கேள்விகள் வேண்டாம்!

லேனா தமிழ்வாணன்

## 100 அடி பள்ளத்தில் பாய்ந்த லொறி



கினிகத்தேன கொழும்பு வீதியில் லொறியொன்று விபத்துக்குள்ளானதில் சாரதி படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கினிகத்தேன பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ராம்பாதெனிய பகுதியிலே நேற்றுமுன்தினம் மாலை 6 மணியளவில் சுமார் 100 அடி பள்ளத்தில் வீழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

லொறியில் ஏற்பட்ட இயந்திரக் கோளாறினாலேயே குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது. (இ-5)

## அதிகாரிகளுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை

300 இற்கும் மேற்பட்ட அரச அதிகாரிகளுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளதாக அரச சேவை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

சில ஒழுக்காற்று நடவடிக்கைகள் தொடர்பான விசாரணைகள் பல வருடங்களாக மேற்கொள்ளப்பட்டு வருவதாக ஆணைக்குழு செயலாளர் காமினி செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

அரச நிர்வாக சேவை, கணக்காளர்கள், கல்வி நிர்வாக சேவை, வைத்தியர்கள் உள்ளிட்ட அரச அதிகாரிகளுக்கு எதிராக கிடைத்துள்ள முறைப்பாடுகள் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

ஒழுக்காற்று நடவடிக்கைகள் காரணமாக சில அதிகாரிகள் பணியிலிருந்து இடை நிறுத்தப்பட்டுள்ளதாக அரச சேவை ஆணைக்குழுவின் செயலாளர் காமினி செனவிரத்ன தெரிவித்தார்.

அத்துடன் ஒழுக்காற்று விசாரணைகளை தாமதப்படுத்தப்படுவதை தடுப்பதற்கு விசேட வேலைத்திட்டமொன்றை முன்னெடுக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (இ-5)



## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 250 | 250 | 250 | 240 | 240 | 250 |
| உருளைக்கிழங்கு | 140 | 120 | 100 | 120 | 110 | 120 |
| பச்சைமிளகாய் | 700 | 600 | 500 | 800 | 500 | 600 |
| தக்காளி | 200 | 200 | 160 | 200 | 200 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 70 | 60 | 50 | 60 | 60 | 80 |
| கோவா | 160 | 200 | 130 | 100 | 160 | 200 |
| கரட் | 200 | 200 | 150 | 160-240 | — | 260 |
| பூசணி | 60 | 100 | 50 | 60 | 60 | 80 |
| புடோல் | 140 | 100 | 100 | 100 | 120 | 160 |
| வாழைக்காய் | 70 | 80 | 50 | 60 | 50 | 80 |
| சின்ன வெங்காயம் | 150 | 160 | 180 | 160 | 140 | 200 |
| பெரிய வெங்காயம் | 120 | 160 | 70 | 80 | 80 | 100 |
| பாகற்காய் | 320 | 400 | 250 | 240 | 220 | 200 |
| வெண்டிக்காய் | 220 | 150 | 150 | 120 | 140 | 160 |
| கருணைக் கிழங்கு | 120 | 150 | 100 | 120 | 100 | 160 |
| பயற்றங்காய் | 300 | 400 | 300 | 240 | 240 | 280 |
| லீக்ஸ் | 180 | 200 | 180 | 200 | 220 | 240 |
| பீற்றூட் | 140 | 200 | 110 | — | 100 | 240 |
| கறிமிளகாய் | 250 | 200 | 200 | 200 | 220 | 240 |
| முருங்கைக்காய் | 300 | 200 | 120 | 180 | 140 | 300 |
| போஞ்சி | 300 | 200 | — | 240 | 240 | 300 |
| கத்தரிதம்புள்ள | 220 | 200 | 190 | 200 | 240 | 250 |
| கீரை - 1பிடி | 50 | 50 | 50 | 50 | 50 | 60 |
| தேசிக்காய் | 300 | 200 | 200 | 350 | 300 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 50 | 15-25 | 40 | 30 | 20-25 |
| இராசவள்ளி | 150 | 300 | 110 | 160 | 160 | 200 |
| வெங்காயப்பூ | 300 | 200 | — | 240 | — | — |
| முள்ளங்கி | 80 | 100 | — | 120 | — | 160 |
| பொன்னாங்காணி | 40 | 50 | 20 | 30 | 50 | 40 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 10 | 20 | 20 |
| ஈரப்பலா | 100 | 120 | — | 80 | 100 | 80-100 |

# இலங்கைத் தமிழர் வரலாறு

## நோர்வே சமரச முயற்சி விடுதலைப்புலிகள் போர்நிறுத்தம் 197

நோர்வே குழுவினர் பிரபாகரனைச் சந்தித்த செய்தியை விடுதலைப்புலிகளின் வானொலிதான் முதலில் வெளியிட்டது. நோர்வே குழுவின் பயணத்தை அரசு மிகவும் இரகசியமாக வைத்திருந்தது.

**திரும்பினார்**

இந்த நிலையில் பிரபாகரனுடன் பேசியது நோர்வே தூதர் எரிக்சோல்கிம் ஜனாதிபதியைச் சந்தித்து விளக்கினார்.

பின்னர் நிருபர்களிடம் பேசிய நோர்வே தூதர் சந்திரிகாவுடன் நடத்திய பேச்சு வார்த்தை ஆக்க பூர்வமாக இருந்தது என்று மட்டும் குறிப்பிட்டார்.

ஆனால் பிரபாகரன் நோர்வே நாட்டுத்தூதர் சந்திப்புப் பற்றி அரசு எந்தச் செய்தியும் வெளியிடவில்லை.

சமரச முயற்சிக்காக நாட்டிற்கு வந்த எரிக்சோல்கிம் தனது 4 நாள் பயணத்தை முடித்துக் கெண்டு 04.11.2000 அன்று நோர்வே திரும்பினார்.

**போர் நிறுத்த அறிவிப்பு**

நிபந்தனையற்ற பேச்சு வார்த்தைக்குத் தயார். ஆனால் சமரசப் பேச்சு சுமூகமாக நடைபெற போர் நிறுத்தம் செய்யப்பட வேண்டும் என்று மாவீரர் தினத்தன்று பிரபாகரன் அறிவித்தார்.

அரசும் நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைக்குத் தயார் என்று அறிவித்தது. இருந்த போதிலும் அமைதி ஏற்படுவதில் உண்மையான விருப்பம் இல்லை என்று இரு தரப்பினரும் ஒருவரையொருவர் குற்றம் சாட்டினார்கள்.

இந்த நிலையில் விடுதலைப்புலிகள் திடீரென்று போர் நிறுத்தம் அறிவிப்பை வெளியிட்டனர்.

இது குறித்து விடுதலைப் புலிகள் இயக்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டிருந்ததாவது,

**24ஆம் திகதி முதல்**

சமரசப் பேச்சு நடைபெறுவதற்கான நல்லெண்ண அடிப்படையில் ஒரு மாதப்போர் நிறுத்தத்தை ' அறிவித்துள்ளோம். எங்கள் மீது இராணுவம் தாக்குதல் நடத்தாமல் இருந்தால் இந்தப் போர் நிறுத்தம் தொடர்ந்தும் நீடிக்கப்படும்.

இராணுவத்தின் மீது எந்தத் தாக்குதலையும் நடத்த வேண்டாம் என்று விடுதலைப்புலிகளின் எல்லாப், பிரிவுகளுக்கும் இயக்கத் தலைவர் பிரபாகரன் உத்தரவிட்டுள்ளார். இந்தப்போர் நிறுத்தம் 24.12.2000 முதல் 24.01.2001 வரை அமுலில் இருக்கும்.

இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டிருந்தது.

**நிராகரித்தது ஏன்?**

விடுதலைப்புலிகள் தன்னிச்சையாக அறிவித்த போர் நிறுத்தத்தை அரசு நிராகரித்து விட்டது. தொடர்ந்து விடுதலைப்புலிகளின் மீது இராணுவம் கடுமையாகத் தாக்குதல் நடத்தி வந்தது.

விடுதலைப்புலிகளின் போர் நிறுத்த கோரிக்கையை அரசு நிராகரித்தது ஏன்? என்று இராணுவ துணை அமைச்சர் அனுருத்தா கூறியதாவது,

**ஏமாற்று வேலை**

விடுதலைப்புலிகள் தன்னிச்சையாக அறிவித்த போர் நிறுத்தம் ஏமாற்று வேலையாகும். இராணுவத்தினர் மேற்கொண்டு வரும் கடுமையான தாக்குதலைச் சமாளிக்க முடியாததால் இப்போர் நிறுத்தத்தை அறிவித்துள்ளனர்.

விடுதலைப்புலிகளை அமைதிப் பேச்சு வார்த்தைக்குக் கொண்டுவர ஒரே வழி அவர்களை இராணுவ ரீதியாக பலவீனப்படுத்த வேண்டும். இதன் மூலமே நாட்டின் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும்.

**பேச்சுவார்த்தை**

போர் நிறுத்தத்தை அறிவித்துவிட்டுப் பிரிந்து கிடக்கும் விடுதலைப்புலிகளை ஒன்று சேர்த்து இராணுவம் மீது கடும் தாக்குதல் நடத்துவதை விடுதலைப்புலிகள் வழக்கமாகக் கொண்டுள்ளனர். தற்போது இராணுவத்தினர் சிறப்பாகச் செயற்பட்டு விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளை மீட்டு வருகின்றனர் என்ற போதிலும் இராணுவம் மூலம் இப்பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது. அதை அரசும் உணர்ந்து உள்ளது.

விடுதலைப்புலிகளுடன் ஆக்கபூர்வமான பேச்சு வார்த்தை தொடங்கியதும் போர் நிறுத்தம் செய்வது பற்றி முடிவு செய்யப்படும்.

இவ்வாறு அமைச்சர் கூறினார்.

**சந்திரிகா கருத்து**

இந்தப் போர் நிறுத்தம் குறித்து ஜனாதிபதி சந்திரிகா இதுவரை எந்தக் கருத்தும் தெரிவிக்கவில்லை. தொலைக்காட்சியில் உரையாற்றும் போது அவர் முதன் முறையாக விடுதலைப்புலிகளின் போர் நிறுத்தம் பற்றி கருத்துத் தெரிவித்தார்.

தொலைக்காட்சியில் சந்திரிகா கூறியதாவது,

**நிலையான அமைதி**

சமரசப் பேச்சுக்காக இரு தரப்பினருக்கும் இடையே ஒப்பந்தம் ஏற்படுவதற்கு முன்பு செய்யப்படுகின்ற போர் நிறுத்தம் பயனற்ற வர்குறுதியாக அமையும்.

7 ஆண்டுகளுக்கு முன்பு அரசு ஒரு போர் நிறுத்தத்தை அறிவித்து இருந்தது.

போர் நிறுத்தம் என்பது தற்காலிகமானது. ஆனால் நாங்கள் நாட்டில் நிலையான அமைதியை விரும்புகிறோம்.



நோர்வே குழுவினருடன் பிரபாகரன். பாலசிங்கம் உடன் இருக்கிறார்.

(தொடரும்)

# நிதிக்குற்றவியல் விசாரணைகளை தீவிரப்படுத்த ஜனாதிபதி திட்டம்

(கொழும்பு)

**பொலிஸ் நிதி மோசடி விசாரணைப் பிரிவினருக்கு கிடைத்த முறைப்பாடுகள் தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்ட பின் அவை தொடர்பான மேலதிக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படாமல் தேங்கிக் கிடக்கும் கோப்புகள் பற்றி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனது கவனத்தைச் செலுத்தவுள்ளார்.**



ஏராளமான அரசியல்வாதிகளும் அரச அதிகாரிகளும் புரிந்ததாகக் கூறப்படும் பாரிய நிதி மோசடிகள் பற்றிய விசாரணைகள் நடந்து முடிந்த பின்னரும் அவர்கள் மீது சட்ட நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை என்று ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னணி அரசியல்வாதிகள் ஜனாதிபதிக்கு முறையிட்டதையடுத்து அதற்கான காரணங்களை ஆராய ஜனாதிபதி முடிவு செய்திருப்பதாகவும் அண்மையில் அரசின் அமைச்சர் ஒருவர் வழங்கிய இராப்போசன விருந்தில் கலந்துகொண்ட ஜனாதிபதி, எவ்.சி.ஐ.டியின் இந்த அசமந்தப் போக்குக்கான காரணங்களை இன்னும் இரு வாரங்களில் தனக்கு சமர்ப் பிக்க வேண்டுமென உத்தரவு பிறப்பித்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

நல்லாட்சி அரசை ஸ்தாபித்த பின் ஊழல் மோசடிகளில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என மக்களுக்கு வாக்குறுதி அளித்திருப்பதை விருந்தை வழங்கிய அமைச்சர் ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டு வந்தார் எனவும், அதனைத் தொடர்ந்தே ஜனாதிபதி எவ். சி.ஐ.டியின் நடவடிக்கைகளைத் தான் கண்காணிக்கப் போவதாகத் தெரிவித்தார் எனவும் அவ்வட்டாரங்கள் மேலும் சுட்டிக்காட்டியுள்ளன. (இ-5)



வட பகுதி மற்றும் தென்னிலங்கை மாணவர்கள் மத்தியில் புரிந்துணர்வை ஏற்படுத்தும் வகையில் அம்பாந்தோட்டை சென்மேரிஸ் தேசிய பாடசாலை மாணவர்கள் ஒரு தொகுதியினர் வயாவிளான் மத்திய கல்லூரிக்கு கடந்த வெள்ளிக்கிழமை வருகை தந்திருந்தனர். இந் நிகழ்வில் வட மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரே கலந்து கொண்டிருந்தார்.

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 742

Search for people, places and things Nagendram Home

**தனுசியா**




**சசி**




**ஜிவி**







**மிதுளா**




**ராஜ்**



நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து "TNA" யுடன் கலந்துரையாடல் நடத்தும் நடுநிலையாளராக அமெரிக்காவின் ஆர்மிற்ரேஜ்

ஒரு காலத்தில் அமெரிக்க நிர்வாகத்தின் மிகவும் பலம் வாய்ந்த மனிதராக இருந்துவந்த றிச்சார்ட் ஆர் மீற்ரேஜ் "தமிழர் விடுதலைக் கூட்டணி"யுடன் கடந்த வாரம் கலந்து கொண்ட பேச்சுவார்த்தைகள் ஒரு நடு நிலையாளருக்கான அவரது பாத்திரப் பங்கினை குறிப்பிட்டுக் காட்டுவதாக அமைகிறது.

அமெரிக்க இராஜாங்க இலாகாவைச் சேர்ந்தவரும் அமெரிக்காவின் முன்னாள் இராஜாங்க துணைச் செயலருமான ஆர்மிற்ரேஜ் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தலைவர் இரா.சம்பந்தனுடனும் அதன் பேச்சாளர் எம்.ஏ. சுமந்திரனுடனும் சந்திப்பினை மேற்கொண்டிருந்தார்.

போர் முடிந்து 7 வருடங்கள் கடந்த நிலையில் இலங்கையின் வடக்கிலும் கிழக்கிலும் இடம்பெற்ற அபிவிருத்தி மற்றும் சூழ்நிலை விருத்திகள் போன்ற விபரங்களடங்கிய சுருக்கமானதொரு விளக்கம் அவருக்கு அளிக்கப்பட்டதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது.

வடக்கிலும் கிழக்கிலும் பொதுமக்களது சொந்தக் காணிகளான பெருநிலப் பிரதேசங்கள் இராணுவத்தினால் தொடர்ந்தும் ஆக்கிரமிக்கப்பட்டு வருவது பற்றி ஆர்மிற்ரேஜ்க்கு எடுத்துக்கூறப்பட்டதுடன் பயங்கரவாத தடைச்சட்டத்தின்கீழ் ஏற்கனவே கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருக்கும் அரசியல்கைதிகள் விடுவிக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கையும் விடுக்கப்பட்டிருந்தது.

இராணுவத்தினால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் காணிகளை திரும்பக் கையளிப்பதற்கும் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் அரசியல் கைதிகளை விடுவிப்பதற்கும் ஓரளவு அழுத்தம் பிரயோகிக்கப்படுவது அவசியமாகயிருக்குமென ஆர்மிற்ரேஜ்ஜிடம் சம்பந்தன் எடுத்துக்கூறியிருந்தார்.

இச்சந்திப்பின்போது தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு அக்கறைக்குரிய விதமாக முன்வைத்த பிரச்சினைகள் சில, குறிப்பாக வருகின்ற ஜூனில் இலங்கை கலந்து கொள்ளச் செல்லும் ஐ.நா.மனிதவுரிமைச் சபை அமர்வுகளுக்கு முன்னரே ஏனைய தமிழர்களால் வெளிப்படுத்தப் படப்போகும் பிரச்சினைகளையே பிரதிபலிப்பவையாக இருக்கின்றன.

வடக்கிலும் கிழக்கிலும் நிலவும் வீடமைப்புத் திட்ட பற்றாக்குறைகள்-குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் விதத்தில் ஏற்கனவே தயாரிக்கப்பட்ட உடன் வீடுகளாக 65 ஆயிரம் உடன் பொருத்தக்கூடிய வீடுகள் ஏற்படுத்திக்கொடுக்கும் அரசின் திட்டம் பற்றிய விடயங்கள் சபை அமர்வுகளில் கலந்துரையாடும் நோக்கம் அதற்கு உண்டென பிரசல்ஸில் தளங்கொண்டிருக்கும் சர்வதேச நெருக்கடிகளுக்கான (I.C.G- International Crisis group) தனது கடந்தவார அறிக்கையொன்றில்கூறியுள்ளது. அதிகரித்த செலவுத்தொகை- தவறான கோரல்-கூறல் விதிமுறைகள் மற்றும் மக்கள் சமூகத்துடன் கருத்துப் பரிமாறல் இன்மை போன்ற காரணங்களுக்காக இத் திட்டத்திற்கு சமூகத்தினர், வீடமைப்பு நிபுணர் மற்றும் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு போன்றோரிடமிருந்து கடுமையான எதிர்ப்புக் கிளம்பியுள்ளதாகவும் இவ்வறிக்கை கூறுகிறது.

பயங்கரவாத தடைச் சட்டதின்கீழ் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் 200-250 தமிழ் அரசியல் கைதிகளை வெகுவிரைவில் விடுதலை செய்ய முயற்சிப்பதாக அரசாங்கம் திரும்பத் திரும்ப வாக்குறுதியளித்திருந்தது. அக்கைதிகள் நடத்திய தொடர் உண்ணாவிரதம் போராட்டங்களுக்குப் பின்னர் அவர்களுள் 39 பேர் கடந்த நவம்பரில் பிணையில் விடுவிக்கப்பட்ட போதிலும் எதுவித குற்றச்சாட்டுக்களுமற்ற நிலையிலுங்கூட அவர்கள் குறிப்பிட்ட கால இடைவெளிகளில் பொலிஸ் நிலையங்களில் சமுகமளித்து கையெழுத்திடும்படி பணிக்கப்பட்டுள்ளனர். 117 பேர் கொண்ட மற்றுமொரு தொகுதி கைதிகளுக்கெதிராக நீதிமன்ற வழக்குப் பதிவுகள் இருப்பதாக அரசு அறிவித்திருக்கிறது. இவர்களுள் ஒரு தசாப்தத்திற்கும் மேலான காலம் சிறையிலிருந்து வரும் 64 பேர் கொண்ட எண்ணிக்கையினர் தாம் குற்றவாளிகள் என ஏற்றுக் கொண்டு புனர்வாழ்வு பெறும் அரச திட்டத்திற்கு உடன்படும் பட்சத்தில் அதற்கான முகாம்களுக்கு அனுப்பப்படுவர் என்ற ஓர் மாற்றுத்திட்டமொன்றும் முன்வைக்கப்பட்டுள்ளது. புனர்வாழ்விற்குட்படுத்தப்பட்டு விடுவிக்கப்பட்ட முன்னாள் போராளிகள் போலவே பல கால தடுப்பிலிருந்து விடுவிக்கப்பட்ட ஏனைய பலருங்கூட பொலிஸ் மற்றும் ஆயுதப் படையினர்களது தொடர்ச்சியான துன்புறுத்தல்- தொந்தரவுகளுக்கு முகங்கொடுத்து வருவது மட்டுமல்லாது தமது சொந்த சமூக மட்டத்திலும்கூட ஓரங்கட்டப்படும் நிலைமையும் உள்ளதாக சர்வதேச நெருக்கடிகளுக்கான குழு (ICG) அறிவிக்கிறது. ஆகப்பிந்திய விதமாக கடந்த பெப்ரவரி- மார்ச் ஆரம்பகட்டத்தில் தடுப்பிலுள்ள கைதிகளால் மேற்கொள்ளப்பட்ட மேலதிகமான உண்ணாநிலைப் போராட்டங்களின் பின்னருங்கூட சென்ற நவம்பருக்குப் பின்னர் எவருக்கும் விடுதலை எதுவும் கிட்டவில்லை. இந்தவிதமான தாமதங்களுக்கெல்லாம் பரவலாக சட்டமா அதிபர் இலாகாவே பொறுப்பாளியாகக் கொள்ளப்படுகிறது. பயங்கரவாத தடைச்சட்டத்தின்கீழ் பதியப்பட்டுள்ள வழக்குகளை தீர்ப்பதற்கென விசேட நீதிமன்றமொன்றினை கடந்த ஜனவரியில் அரசாங்கம் உருவாக்கியுள்ளது.

1971 மற்றும் 1980களிலும் இடம்பெற்ற "ஜே.வி.பி" கிளர்ச்சியின்போது கைது செய்யப்பட்ட சிங்கள கிளர்ச்சியாளர்கள் அரசிடமிருந்து அப்போது பெற்றிருந்த பொதுமன்னிப்பு அல்லது ஜனாதிபதியின் மன்னிப்பு போன்ற ஒன்றினை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தலைவர் சம்பந்தன் உள்ளிட்டு தடுப்புக் காவல் கைதிகள் விடயத்தை கையாளும் சட்டவாளர்கள் பலரும் கோரி வருகின்றனர். மக்களைக் கைதிகளாகவும் சந்தேக நபர்களாகவும் சித்திரவதை செய்து கொடுமைப் படுத்தி வந்த கடந்த கால அரசுகளின் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின்கீழ் தற்போதும் சித்திரவதைகள் மேற்கொள்ளப்படுவதாக நம்பப்படும் அச்சட்டத்தை நீக்கி அதற்குப் பதிலாக "சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட நியதிகளுக்குட்பட்ட சிறந்த நடைமுறைகள்" கொண்ட மனித நேயம் சார்ந்த ஒன்றை மாற்றீடு செய்யும் நோக்கத்தினை கொண்டிருப்பதாகக் கூறிக்கொள்ளும் தற்போதைய அரசே அதனை தொடாந்தும் நடைமுறைப்படுத்தி வருவது முரண்பாடான ஒன்றாகவே இருப்பதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஏனைய தரப்புக்களும் வாதிடுகின்றன.

**சண்டே லீடர் பத்திரிகையில் "இலங்கை பிரச்சினையில்... நடுநிலையாளராக ஆர்மிற்ரேஜ்" எனும் தலைப்பில் ஈஸ்வரன் ரட்ணம் எழுதிய அரசியல் கட்டுரையின் தமிழாக்கம்**

தற்போது நீதியமைச்சின் மீள் பார்வையின்கீழ் தேசிய சட்ட ஆணைக்குழு புதிய சட்ட வரைபை மேற்கொண்டு வருகிறது. எப்படியும் அரசாங்கம் தொடர்ந்தும் அப் பயங்கரவாத சட்டத்தினை பிரயோகித்தே வருகின்றதென சர்வதேச நெருக்கடிகளுக்கான குழு (ICG) கூறுகிறது. 2015-2016 வரையிலான இடைக் காலப்பகுதியில் இச்சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்ட 49 வரையிலானோர் தொடர்ந்தும் தடுப்புக் காவலிலேயே இருந்து வருகின்றனர். இவர்களுள் 25 பேர்களுக்கு மேற்பட்டோர் முன்னாள் தமிழீழ விடுதலைப் புலி உறுப்பினர் ஒருவரது யாழ்ப்பாண வீடொன்றில் மறைத்துவைக்கப்பட்ட வெடி பொருள் தொகுதியொன்று கைப்பற்றப்பட்டதன் பின்னர் அதாவது 2016 மார்ச், ஏப்ரல் மாதங்களின்போது கைது செய்யப்பட்டோராவர். சிவில் யுத்தம் 2009 மே முடிவடைந்து 7 வருடங்கள் கடந்ததன் பின்னருங்கூட யுத்தக்குற்ற சம்பந்தமான மீள் இணக்கப்பாடு பொறுப்புக்கூறல் போன்ற விடயங்கள் பெரிதும் செயற்பாடற்றேயிருந்து வந்ததாக சர்வதேச நெருக்கடிகளுக்கான குழு குறிப்பிட்டுக்கூறுகிறது. குறிப்பாக் விசாரணைகளில் வெளிநாட்டு நீதிபதிகள், நிபுணர்கள் பங்கேற்பு விடயங்களில்கூடவே வரும் மாறக்கூடிய இடைக்கால நீதி வழங்கல் ( Transitional Jastice) நடைமுறைகளில் அரசாங்கம் பின்வாங்கிச் செல்வதற்கு முயற்சிப்பதாகவே தோன்றுவதாக ICG கூறுகிறது.

"விசேடமாக போரின் இறுதிவாரங்களின்போது இடம்பெற்ற போர்க்குற்றங்களின் இயல்புகளிலும் தொகையிலும் வெளிப்படும் பிரமாண்டான தன்மையை ஏற்றுக்கொள்வது இராணுவத்திற்கு கடும் கசப்பானதொரு சோதனையாகவும் அதற்கான பொறுப்பினை ஏற்பதென்பது அல்லது இப்படியும் நடந்திருக்குமோ என நம்புவதேகூட அநேகமான சிங்கள மக்களுக்கு கடினமாயிருக்கும் என்பது போன்ற உணர்வுகளையிட்டு எவரும் அக்கறை கொள்ளாது இருக்க முடியாத ஒரு நிலை! இவ்வித நிலையில் ஐ.நா.மனிதவுரிமை சபைக்கு (UNHRC) ஏற்கனவே வாக்குறுதி அளிக்கப்பட்டிருக்கும் விசாரணைப் பொறிமுறைகள் சிங்கள தேசியவாதிகளுக்கு சந்தேகங்களை ஊட்டும் அதேநேரம் இராணுவத்திற்கும் மக்களுக்கும் (விசேடமாக சிங்கள மக்களுக்கு) இவற்றையிட்டு நம்பிக்கையூட்ட எடுக்கும் முயற்சிகள் போர்க்கால அட்டூழியங்கள் மட்டிலான நீதிக்கான தேடலில் அரசுக்கு இருக்கக்கூடிய பற்றுறுதியையே சந்தேகத்திற்கிடமாக்குவதுடன் சட்டபூர்வமான அர்த் தமுள்ள சுயாட்சி உரிமைக்கான தமது நியாயமான அபிலாசைகளை திருப்தி செய்யக் கூடிய அரசியலமைப்பு மாற்றங்களுக்கு அது ஆதரவு அளிக்குமா என்ற தமிழர் தரப்பு சந்தேகங்களை அதிகரிக்கச் செய்யும் மற்றுமொரு நிலை!" என மேலும் கூறுகிறது. ICG அறிக்கை. காணாமற் போனவர்களைத் தேடிக் கண்டுபிடிப்பதற்கான தடயங்கள், வழிமுறைகள், பொறிமுறைகள், பல தந்திரோபாய வழிமுறைகள் மற்றும் ஆலோசனைகள் போன்ற அனுசரணைகள் தொடர்ந்து கிடைத்துக் கொண்டிருந்தும் பலவந்தமான முறையில் காணாமற் போகச் செய்யப்பட்ட ஆயிரக்கணக்கானோர் விடயங்களில் தீர்வு காண்பதில் உறுதியான முன்னேற்றமெதுவும் கடந்த வருடத்திலிருந்து இது வரை கண்டுகொள்ளப் பட வில்லை. இருந்தும் காணாமற்போயிருக்கும் 20 ஆயிரம் பேர்களுக்கும் மேற்பட்டோரில் ஒவ்வொருவர் பற்றி அவர்களது விதியோ- கதியோ எதுவாயிருப்பினும் அதனைத் தேடிக்கண்டறிந்து சம்பந்தப்பட்டவர்களுக்கு அறியத்தர வேண்டிய பொறுப்பு விசாரணைக்கான ஜனாதிபதி ஆணைக்குழுவையேசாரும். அநேகமாக இந்த 20 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வழக்குகளனைத்தும் காணாமற்போகச் செய்யப்பட்ட தமிழர்களதேயாகும்.



(தொடரும்)

# பிராண்டை வாழ வைக்கும் வாய் வழிக் கதைகள்

தொழில் ரகசியம்

சினிமா தயாரிப்பு அலுவலகத்தில் நடந்த சர்ச்சையில் கடுப்பான ஊழியர் ஒருவர் புதிய படத்துக்கு பதிவு செய்து வைத்திருந்த பாடலை யூட்ரியூப்பில் திருட்டுத்தனமாக பதிவேற்றம் செய்தார். இசை உரிமையை சோனி மியூசிக்கிற்கு விற்றிருந்த நிறுவனத்துக்கு கோபம். சோனிக்கு எரிச்சல்.

இன்டர்நெட்டில் விடயத்தை ஏற்றுவது டியூபிலிருந்து பசையை எடுப்பது போல. ஒரு முறை செய்தால செய்ததுதான். விடயத்தை இறக்க முடியாது, பட நிறுவனமும் சோனியும முள்ளை முள்ளால் எடுப்போம் என்று அவர்களே அப்பாடலை படம் பிடித்து யூட்ரியூப்பில் வெளியிட்டனர்.

அதன் பின் நடந்தது உலக பிரசித்தம். கலைவெறி பிடித்தவர்கள் தலைவிரி கோலமாய் கொலைவெறியுடன் அப்பாடலை ரசிக்க அதன் ஒரு வரி புரியாத உலக மக்கள் கூட தினசரி அதை உச்சரிக்க, அப்பாடல் உலக மொழிகளில் ஒன்றானது!

பாடலை ஏழு மில்லியன் பேர் பேஸ்புக்கில் ஷேர் செய்தனர். இரண்டு மில்லியன் பேர் பதிவிறக்கம் செய்தனர். பாடலை 40 உலக எஃப்எம் ஸ்ரேஷன்கள் ஒலிபரப்பின. 'ட்விட்டரில்' தினம் பத்தாயிரம் பேர் எழுதினார்கள். ஐம்பது மில்லியன் பேர் பாடலைப் பார்த்தனர்.

'வைய் திஸ் கொலவெறி'. இது பாடல் முதல் வரி மட்டுமல்ல. எப்படி இப்பாடல் பரவியது என்ற கேள்வியும்!

பாடலை விடுங்கள். சில சமயம் சின்ன விஷயமும் தொற்று வியாதி போல் பரவுவது எதனால்? பிராண்டு, பிசினஸ், கம்பனி பற்றி இப்படி பரப்ப முடியுமா?

ஏன் முடியாது என்று கேட்பவர்களில் ஒருவர் 'ஜோனா பர்கர்' (Jonah Berger). 'யூனிவர்ஸிடி ஒப் பென்சில்வேனியா'வில் சந்தைப்படுத்தல் பேராசிரியர். வாய் வழி விடயம் பரவும் விதத்தை, பரப்ப உதவும் உத்திகளை படம் வரைந்து பாகங்களைக் குறிப்பிட்டு விளக்குகிறார் 'கண்டேஜியஸ்' (Contagious) என்ற புத்தகத்தில். தொற்றிக் கொள்வதற்கு ஆங்கிலத்தில் கண்டேஜியஸ் என்று பெயர்.

வாய்வழி பரவும் இந்த 'வேர்ட் ஓஃப் மவுத்' விடயத்திற்கு வீரியம் அதிகம். ஹோட்டல் விளம்பரத்தை விட அதை நண்பர் சிலாகித்து கூறுவதை அதிகம் நம்புகிறோம். விளம்பரம் பார்த்து வாங்காத கிரைண்டரை பக்கத்து வீட்டு பெண் சொன்னார் என்று வாங்குகிறோம்.




வாய் வழி பரவும் விடயத்தின் சக்திக்கு இன்னொரு காரணம் அது சரியானவர்களை மட்டும் சென்றடைவதால். உங்கள் பகுதியில் புதிய ஓர்கானிக் காய்கறி கடை திறந்தால் அதை எல்லோரிடமும் சொல்வதில்லை. யாருக்கு அதில் நாட்டமோ அவர்களிடம் மட்டுமே கூறுவீர்கள்.

தொற்று நோய் போல் பரவி பிரபலமான விடயங்கள், கதைகள், செய்திகள், தகவல்களை ஆராய்ந்த பர்கர் இவை பரவுவது ஆறு பிரதான காரணங்களால் என்கிறார். இதை புரிந்து செயல்பட்டால் உங்கள் பிராண்ட், கம்பனி பற்றிய செய்திகளையும் தொற்று நோயாய் பரப்பலாம்.

**சமூக நாணயம**

பேசும் விடயத்தை பொறுத்தே மற்றவர்கள் தங்களை எடை போடுவார்கள் என்று பலர் நினைக்கின்றனர். அணியும் புது உடையை பார்த்து மற்றவர் 'நல்ல கலர் சென்ஸ் உங்களுக்கு' என்று சொன்னால் தான் புதுசு போட்ட திருப்தி ஏற்படுகிறது நமக்கு. இதை சோஷியல் கரன்சி என்கிறார் பர்கர். உயர்வாய் மற்றவர் நினைக்கும்படி பேச விடயம் தந்தால் அதை வாய் கிழிய மற்றவரிடம் மக்கள் பேசுவார்கள்.

யாரைப் பற்றி உயர்வாய் நினைபபீர்கள். அவர் அந்த நடிகையை பற்றி பேசுபவர்களையா இல்லை 'நேற்று 'டிஸ்கவரியில்' குவாண்டம் மெக்கானிக்ஸ் பற்றி ஒரு ப்ரொக்ராம் பார்த்தேன்' என்று விளக்குபவரையா?

**விசைகள்**

ஒரு விடயத்தை பேசுகையில் அது வேறொரு விடயத்தை நினைவுபடுத்துவதைப் பார்த்திருப்பீர்கள். சுற்று வட்டாரத்தில் உள்ளவை உங்கள் பிராண்டைப் பற்றி அதன் செய்தி பற்றி நினைவுபடுத்தும்படி வடிவமைக்க முடியுமா என்று பாருங்கள்.

**உணர்ச்சிகள்**

மனதைத் தொடும், உணர்வுகளை நெருடும் விடயத்தை மக்கள் மற்றவரிடம் கூற விரும்புவார்கள். நகரில் ஒரு புடைவைக் கடை பொங்கல், கிறிஸ்துமஸ், ரம்ழான் போன்ற பண்டிகை காலங்களில் மக்களிடம் அவர்கள் பழைய துணிமணிகளை அன்பளிப்பு செய்யச் சொல்லி அவர்கள் வாங்கும் புது துணியில் டிஸ்கவுண்ட் தருகிறது. அப்படி சேகரிக்கும் பழைய துணிகளை சேவா சங்கங்கள் மூலம் ஏழை மக்களுக்கு வழங்குகிறது. 'இப்பண்டிகை காலம் உங்கள் குடும்பத்தோடு ஒரு ஏழை குடும்பமும் பண்டிகை கொண்டாடச் செய்யுங்கள்' என்று அந்த கடை விளம்பரங்கள் கூறும்போது மனம் நெகிழ்ந்து பழைய துணிகளை கொடுத்து மற்றவரிடமும் அதைப் பற்றி கூற தோன்றுகிறதா இல்லையா!

**பொதுவெளியில் பயன்படுத்துவது**

பிராண்ட் பற்றி ஒருவர் சொல்வதைவிட அவர்களே உபயோகிப்பதை பார்த்தால் மற்றவர்களுக்கு பிராண்ட் மீது ஈர்ப்பு வரும். மற்றவர் பார்க்கும் வகையில் பிராண்ட் விடயத்தை அமைத்தால் அது வேகமாக பரவு உதவும். ஒரு முறை 'ஆர்எம்கேவி சின்ன பெண்கள் பட்டு பாவாடை போர்டரில் சிண்ட்ரெல்லா கதை நெய்து விற்றது. எல்லா குழந்தைகளுக்கும் தெரிந்த பழைய கதைதான். ஆனாலும் வகுப்பில் ஒரு மாணவி அதை அணிந்து வந்து அலப்பறை செய்தால் மற்ற மாணவிகள் சும்மா இருப்பார்களா? பெற்றோரை பிடுங்கித் தின்ன மாட்டார்களா. சிண்ட்ரெல்லாவே பாவாடை அணிய ஆசைபடும் வரை பேசித் தள்ளிவிட்டனர்!

பிராண்ட் விடயத்தை பரப்பும் போது அதை ஊதி பெரியதாக்க முயற்சிக்க வேண்டுமேயொழிய அணைக்கக் கூடாது. வைய் திஸ் கொலவெறி பாடலை சக ஊழியர்கள் முதல் பாகிஸ்தானியர் வரை தங்களுக்கு ஏற்றவாறு வார்த்தைகளை மாற்றி பாடியபோது காப்புரிமை காரணம் காட்டி சோனி அதைத் தடுக்கவில்லை. இப்பாடல் இன்னமும் பிரபலமடைய அது ஊக்குவித்தது.

**நடைமுறைப் பயன்**

ஒருவருக்கு உதவியாக இருக்கும் விடயத்தை அவருக்கு தர பலருக்கும் விருப்பமே. மற்றவருக்கு பயன்படும்படி நம் பிராண்ட் விடயத்தை வடிவமைத்துத் தந்தால் அதை பலரும் பரப்புவார்கள். புத்தகம் வாங்க 'அமேசான்' இணையதளத்துக்கு செல்ல இருப்பவர்களுக்கு உதவியாக அப்புத்தகத்தை வாங்கிப் படித்தவர்கள் அந்த புத்தகத்திற்கு ஒன்று முதல் ஐந்து ஸ்டார் வரை எதைத் தருகிறார்கள் என்று காண்பிக்கிறது. புத்தகத்தை படித்தவர்கள் அதைப் பற்றி என்ன சொல்கிறார்கள் என்று தெரிந்துகொள்ள மற்றவர்களுக்கு இது பயன்படுவதோடு புத்தகத்தைப் பற்றி மற்றவரிடம் பேசவும் வைக்கிறது. ஐந்து ஸ்டார் பெறும் புத்தகங்கள் மற்ற புத்தகங்களை விட இருபது மடங்குவரை கூட அதிகம் விற்கிறதாம்!

**கதைகள**

சுவாரசியமான கதையை கூற யாருக்குத் தான் பிடிக்காது. உங்கள் பிராண்ட் பற்றிய செய்தியை அழகான கதையாக்கி தந்தால் அதை பரப்ப ஒரு கூட்டமே காத்திருக்கும். 'கோகோ கோலா' சுவையின் இரகசியம் அதன் பிரத்யேக '7ஓ' ஃ பார்முலாவாம். அது உலகில் இது வரை ஆறேழு பேருக்குத்தான் தெரியுமாம். அதை செக்யூரிடி போட்டு பாதுகாக்கிறார்களாம்' என்ற ஒரு கதையை யாராவது கூறக் கேட்டுருப்பீர்கள். இக்கதை உண்மையா என்பதை விடுங்கள். கோகோ கோலா பற்றி அதன் சுவை பற்றி பேச எத்தனை சுவாரசியமான கதை பாருங்கள்!

தொற்று வியாதியை கண்டு ஓடுபவர்கள் கூட தொற்றிக்கொள்ளும்படி பிராண்ட் பற்றிய சுவாரசியமான செய்தியை பரப்பினால் பிராண்டை தேடி ஓடி வருவார்கள்! அப்படி தொற்று வியாதி வந்து உங்கள் பிராண்ட் நீடுடி வாழ எம் மனப்பூர்வமான வாழ்த்துக்கள்!




# சிறிய செயல் பெரிய மாற்றம்!

சிறு சிறு மழைத்துளிகள் பெரும் வெள்ளமாய் மாறுவதைப்போல, வாழ்க்கைக்கான பெரும் மாற்றங்கள் நம்முடைய சிறிய செயல்பாடுகளின் மூலமே உருவாக்கப்படுகின்றன. சிறு கேள்விகளைக் கேட்பது, சிறிய எண்ணங்களை ஏற்படுத்துவது, சிறிய செயல்பாடுகளை மேற்கொள்வது மற்றும் சிறிய சிக்கல்களை தீர்ப்பது போன்ற செயல்களே, வரவிருக்கும் பெரியதொரு மாற்றத்திற்கு அடித்தளமாக அமைகின்றன என்கிறார் "ஒன் ஸ்மால் ஸ்டெப் கான் சேஞ்ச் யுவர் லைப்" என்ற இந்த புத்தகத்தின் ஆசிரியர்.

செயல்பாடுகளை சிறியதாய் தொடங்கும்போது, நம்முடைய நோக்கம் அல்லது இலக்கு என்பது ஒரு பெரிய விடயமே இல்லை. உடல எடை குறைப்பு, புகைப் பழக்கத்தை விடுதல், ஒரு நாவலை எழுதுதல், நமக்கான உடற்பயிற்சியினை ஆரம்பித்தல் போன்ற எந்தவொரு நோக்கத்தினையும் சிறியதாய் தொடங்கி எளிதாக எட்டிப்பிடிக்கலாம் என்பதே ஆசிரியரின் வாதமாக இருக்கின்றது. மேலும், இதற்கான வழிமுறைகளை கெய்சன் என்னும் புகழ்பெற்ற தத்துவ முறையின் வாயிலாக விவரித்துள்ளார்.

**மாற்றம் கடினமே!?**

மாற்றத்துக்கான இருபத்தைந்து சதவீத தீர்மானங்கள் 4 மாத காலத்திற்குள்ளாகவே கைவிடப்படுகின்றன. இதிலெல்லாம் தப்பிப் பிழைத்து தீர்மானத்தில் வெற்றிபெறுபவர்கள் கூட, பொதுவாக 5 அல்லது 6 ஆண்டுகள் கடந்த பிறகே தங்களது தீர்மானத்தில் வெற்றி அடைகின்றனர் என்கிறது அந்த ஆய்வு.

**சிறிய கேள்விகள்!?**

உங்கள் நண்பரிடம், அவரது சைக்கிள் அருகில் நிறுத்தப்பட்டுள்ள மற்றறொரு மோ.சைக்கிளின் நிறம் என்ன என்று கேட்டுப்பாருங்கள். அவர் உங்களை வேடிக்கையாகப் பார்த்து விட்டு, பெரும்பாலும் தெரியாது என்றே கூறுவார் அல்லவா! இதே கேள்வியை அடுத்த நாளும், அதற்கு அடுத்த நாளும் அவரிடம் தொடர்ந்து கேளுங்கள். நான்காவது அல்லது ஐந்தாவது நாளில் இதே கேள்வியை அவரிடம் கேட்கும்போது, தகுந்த பதிலுடன் இருப்பதைப் பார்க்க முடியும். ஆம், சைக்கிளை நிறுத்தும் போதே அவரது மூளை, இந்த கேள்வியை ஒருவர் உங்களிடம் கேட்கப் போகிறார் என்றும் அதற்கான பதிலை தயாராக வைத்துக் கொள்ளும்படியும் அவருக்கு அறிவுறுத்தி விடும்.

**சிறிய எண்ணங்கள்!?**

நமது அனைத்து செயல்களுக்கும் எண்ணங்களே அடித்தளமாக அமைகின்றது. மூளையின் சரியான சீரமைப்பிற்கு சிறு சிறு எண்ணங்களும், சிந்தனைகளும் உதவியாக இருப்பதாக சொல்கிறார் ஆசிரியர்.

**சிறிய செயல்கள்!?**

உடற்பயிற்சியினை தொடங்க நினைப்பவர்கள் தினமும் காலையில் வெறுமனே எழுந்து நில்லுங்கள். ஆம், சிலமணித்துளிகள் நிற்பது என்பது சிறிய செயலே என்றாலும், அதுவே தொடர்ந்து உங்கள் நோக்கத்தை நிறைவேற்றும் என்கிறார் ஆசிரியர்.

**சிறிய சிக்கல்கள்!?**

அவ்வப்போது உருவாக்கும் சிறிய பிரச்சினைகளை அடையாளம் கண்டு அவற்றை தீர்க்கும்போது பின்னாளில் ஏற்படும் வலிமிகுந்த பெரிய சிக்கல்களிலிருந்து விடுபட முடியும் என்கிறார் ஆசிரியர்.

**சிறிய வெகுமதிகள்!?**

உங்களிடமோ அல்லது மற்றவர்களிடமோ நல்ல பழக்கங்களை ஏற்படுத்த விரும்புகிறீர்களா? அதற்கான மிகச்சரியான வழி சிறிய வெகுமதிகளே என்கிறார் ஆசிரியர்.

சிறிய வெகுமதிகள் மற்றும் அங்கீகாரங்கள் தனிப்பட்ட வாழ்வில் மகிழ்ச்சியினையும், பணியில் சிறந்து விளங்கும் பண்பினையும் ஏற்படுத்துகின்றது.

எண்ணங்களோ அல்லது செயல்களோ எதுவாயினும் இன்றைய சிறிய விதைப்பு நாளைய பெரிய அறுவடை என்பதே இதன்மூலம் நாம் கற்றுக் கொள்ளும் செய்தி.

## பங்குச் சந்தை விபரம்

(வார இறுதியில்)

CSE COLOMBO STOCK EXCHANGE

| துறை | கடந்த வாரம் | இந்த வாரம் |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 6,571.21 | 6,519.23 ⇩ |
| எஸ் & பி 20 சுட்டி | 3,441.26 | 3,416.47 ⇩ |

**விலை அசைவுகளின் அடிப்படையில்** புரள்வு (ரூபா.மில்.) 3,470.318

***உயர்வைக் காட்டியவை:*** ஏசியா கப்பிரல்(10.00)சமித் பினான்ஸ்(24.80), சிலாவ் பினான்ஸ்(22.50),லங்கா சீமெண்ட்(8.00),அஸ்ஹொட் ஹோல்டிங்(35.00).

***சரிவைக் காட்டிய பங்குகள்(ரூ.):*** சிலோன் பிறின்டர்ஸ்(114.20), கென்வீனியன்ஸ் பூட்(401.30), சிலோன் லெதர்(71.30), சிலோன் காடியன் (140.00), பிடிஎல்(101.00). **மேலதிக தகவல்கள்: www.cse.lk**

## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 145.16 | 148.82 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 208.34 | 215.56 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 160.81 | 167.10 |
| சுவிஸ் பிராங் | 145.57 | 151.55 |
| கனேடிய டொலர் | 110.13 | 114.64 |
| அவுஸ்திரேலிய டொலர் | 103.98 | 108.79 |
| சிங்கப்பூர் டொலர் | 105.06 | 109.04 |
| ஜப்பான் யென் | 1.32 | 1.37 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.17 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 39.73 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

# தமிழ் சினிமா வரலாறு

176

## சிவாஜியின் இளமைப் பருவம்

...மருமகன் ஜெயிலுக்கு போய் விட்டாரே என்று சிவாஜியின் தாத்தா மனம் நொந்தார். நாளுக்கு நாள் உடல் நலிந்தது. சிலகாலத்துக்குப் பின் அவர் மரணம் அடைந்தார்.

**அண்ணன்கள்**

சிவாஜிக்கு திருஞான சம்பந்தமூர்த்தி கனகசபா நாதன் தங்வேலன் என்று மூன்று அண்ணன்கள். சிவாஜிக்கு சூட்டப்பட்ட பெயர் கணேசமூர்த்தி

சிவாஜியின் தாத்தா இறந்துபோன பிறகு ராஜா மணியம்மாள் குடும்பத்துடன் திருச்சியில் குடியேறினார். திருச்சி அருகே பொன்மலைக்குப் பக்கத்தில் உள்ள சங்கிலியாண்டபுரத்தில் ராஜா மணி அம்மாள் குடும்பத்துக்கு ஒரு வீடு இருந்தது. அங்கு வசிக்கலானார்.

சிவாஜிகணேசன் வளர்ந்தது. நாடக நடிகரானது. சினிமா உலகில் புகுந்தது எல்லாமே இந்த வீட்டில் வசித்த போதுதான்.

**பால்காரம்மா**

எஸ்.எஸ்.வாசனின் தாயாரும் எம்.ஜி.ஆரின் தாயாரும் தங்கள் குடும்பத்தை காப்பாற்ற எப்படி கஷ்டப்பட்டார்களோ அதுபோல் ராஜாமணி அம்மாளும் மிகவும் கஷ்டப் பட்டார்.

தந்தையோ இறந்து போய் விட்டார். கணவர் சிறை சென்று விட்டார். பிழைக்க என்ன செய்வது? குழந்தைகளை எப்படி படிக்க வைப்பது என்று யோசித்த ராஜா மணி அம்மாள் பால் வியாபாரம் செய்ய முடிவு செய்தார். கறவை மாடு வாங்கி பால் விற்கத் தொடங்கினார்.

நாளடைவில் ராஜாமணி அம்மாள் என்ற பெயர் மறைந்து போய் பால்காரம்மா என்ற பெயர் நிலைத்து விட்டது.

வீட்டுக்கு அருகே கிறிஸ்தவ பாடசாலை ஒன்று இருந்தது. அங்கு சிவாஜியை சேர்த்துவிட்டார், ராஜாமணி அம்மாள். அப்போது சிவாஜிக்கு 4 வயது.

**தந்தை விடுதலை**

சிறையில்இருந்த சின்னையா மன்றாயர் நல்ல மெக்கானிக் என்பதால் சிறையில் மின்சாரம் சம்பந்தப்பட்ட வேலைகளை செய்வது தண்ணீர்த் தாங்கியை பழுது பார்ப்பது போன்றவற்றை செய்து சிறை அதிகாரிகளிடம் நல்ல பெயர் வாங்கினார்.

எனவே நன்னடத்தைக்காக 7 வருட தண்டனை 4 1/2 ஆண்டு தண்டனையாகக் குறைக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டார்.

விடுதலையாகி வீடு திரும்பினார், சின்னையா மன்றாயர். அப்போது சிவாஜிக்கு 4-1/2 வயது. இவர்தான் உன் அப்பா என்று தன் கணவரைக் காண்பித்தார், ராஜாமணி அம்பாள்.

கண்களில் கண்ணீர் வழிய, தந்தையைக் கட்டித் தழுவிக் கொண்டார், சிவாஜி.

சிவாஜி கணேசன் தனது 7 ஆவது வயதிலேயே நாடகக் கம்பனியில் சேர்ந்து நடிகரானார்.



பாடசாலையில் படிக்கும்போதே சிவாஜிக்கு நடிப்பதிலும் பாடுவதிலும் ஆர்வம் இருந்தது.

**கட்டபொம்மன்**

ஒருமுறை வீரபாண்டிய கட்டபொம்மன் நாடகத்தைப் பார்க்க தந்தையுடன் சென்றார்.

அக்காலத்தில் சின்ன வேடங்களுக்கு ஆட்கள் தேவைப்பட்டால் நாடகத்திற்கு வரும் சிறுவர்களில் சிலரை அழைத்துப்போய் மேடையில் ஏற்றிவிடுவார்கள்.

கட்டபொம்மன் நாடகத்தில் வெள்ளைக்கார சிப்பாய் வேடத்தில் நடிக்க சிலர் தேவைப்பட்டதால் சிவாஜியை நாடகக்காரர்கள் அழைத்துச் சென்று விட்டார்கள். (தொடரும்)

# இலங்கையில் என்ன செய்கிறார் அமெரிக்க ராஜதந்திரி ஆர்மிரேஜ்?

(4ஆம் திகதி வெளியான கட்டுரையின் தொடர்ச்சி...)

நாங்கள் எமக்கான வாய்ப்புக்கள் கிடைக்கும் போதெல்லாம் இலங்கையின் நலன் சார்ந்த விடயத்தில் மட்டுமே கவனத்தைக் குவித்துள்ளோம். இது தவிர எமக்கான சொந்த நலன்களைக் கருத்திற் கொண்டு இலங்கையுடன் தொடர்பைப் பேணவில்லை. நான இலங்கையுடன் நீண்ட தொரு நட்புறவைப் பேணிவருகிறேன். ஏனெனில் இலங்கையர்கள் பழகுவதற்கு மிகவும் நல்லவர்கள். அவர்களின் வாழ்வு சிறப்புறுவதறகான வாய்ப்பை அவர்கள் பெற்றிருக்க வேண்டும்.

கேள்வி: இலங்கை தலைவர்களை நீங்கள் சந்தித்த போது, நாட்டை முன்னோக்கிச் செல்வதற்கான வழிகளை அவர்களுக்கு எடுத்துக் கூறினீர்களா?

பதில்: ஜனாதிபதி மைத்திரியின் நிலைப்பாடு தொடர்பாக நான் மகிழ்ச்சியடைகிறேன். அதாவது தமிழ் மற்றும் முஸ்லிம்களுக்காக மேற்கொள்ளப்படும் ஏற்பாடுகள் சிங்களவர்களிடமிருந்து எதையும் பறிப்பதற்கான நோக்கத்தைக் கொண்டிருக்கவில்லை என தென்னிலங்கையில் வாழும் சிங்களவர்கள் மத்தியில் மைத்திரி தெரிவித்துள்ளார். எல்லா மக்களும் இன்னமும் சிறப்பாக வாழ வேண்டும். இது ஜனாதிபதி மைத்திரியின் மிகவும் சாதுரியமான கருத்தாகும்.

நாங்கள் பிரதமர் விக்கிரமசிங்கவைச் சந்தித்து அவர் எவ்வாறு தனது பணியை மேற்கொள்கின்றார் என்பதைப் பார்த்து மகிழ்வடைந்தோம். காணாமற் போனோர பிரச்சினை தொடக்கம் நிலங்களை அவற்றின் உரிமையாளர்களிடம் வழங்குவது வரையான அனைத்துப் பணிகளையும்அவர் மேற்கொள்வது மகிழ்ச்சியைத் தருகிறது. இந்தப் பணிகளை மேற்கொள்வதில் எவ்வாறான கடினங்கள் உளளன என்பதை நான் அறிவேன். பழைய வழிகளைக் கையாள்வதை விரும்பும் பலர் இராணுவத்திலும் அரசாங்கத்திலும் உள்ளனர் என்பதை நான்அறிவேன். ஆனால புதிய வழிநோக்கிப் பயணிக்க விரும்பும் மக்களும் உள்ளனர். அவர்கள் இந்த வாய்ப்பைப் பயன்படுத்துகின்றனர். இலங்கையை நாங்கள் நேசிக்கிறோம். இது மேலும் சிறப்புற வளரவேண்டும் என விரும்புகிறோம்.



கேள்வி: நீங்கள் இதே தகவலை ஜனாதிபதி ஒபாமா அரசாங்கத்திடமும் தெரியப் படுத்துவீர்களா?

பதில்:நாங்கள் இங்கு வருவதற்கு முன்னர் அமெரிக்கா இராஜாங்கத் திணைக்களத்தின் இலங்கை மீதான நிலைப்பாட்டை நாங்கள் கேட்டறிந்தோம். நாங்கள் இங்கு கண்டறிந்தவற்றை நிச்சயமாக எமது அரசாங்கத்திடம் தெரியப்படுத்துவோம். கடந்த செப்டெம்பரில் நான் இங்கு வரும் போது இருந்த நிலை தற்போது முன்னேற்றம் அடைந்துள்ளது. எல்லாக் கட்சியினரும் சில விடயங்களைக் கலந்துரையாடுவதை நான் கண்டேன். இது என்னை மகிழ்ச்சிப்படுத்துகிறது.

வடக்கு கிழக்கில் இன்னமும் சில பிரச்சினைகள் உள்ளன என்பதை நான் உணர்கின்றேன். ஆனால் இலங்கையின் புதிய கூட்டணி அரசாங்கமானது திறம்பட சிறப்புறச் செயற்படுவதற்கு துணைநிற்கும் அனைத்து இலங்கையர்களையும் நான் நன்றியுடன் நோக்குகிறேன். இது நீண்ட காலத்தின் பின்னர் தற்போது இலங்கையில் தீர்வொன்று எட்டப்படுவதற்கான சாத்தியம் உள்ளது என்கின்ற நம்பிக்கையை எமக்குத் தருகிறது.

கேள்வி: ஜெனீவா விசாரணை தொடர்பாக இலங்கைமீது அமெரிக்க அரசாங்கம் தளர்வை ஏற்படுத்துமா?

பதில்:ஜெனீவா மட்டுமல்ல, அனைத்து நடவடிக்கைகளும் எமக்கு நம்பிக்கையைத்தருகிறது. இலங்கையில் மீளிணக்கப்பாடு மற்றும் உள்நாட்டு விசாரணைப் பொறிமுறை போன்றவற்றில் அமெரிக்காவின் உதவி தொடர்பாக நாங்கள் கேள்வியுற்றுள்ளோம். இலங்கையில் வாழும் மககளின் நலன் கருதி அவர்களுக்கு சௌகரியத்தை ஏற்படுத்தக் கூடிய விடயங்களை அமெரிக்கா மேற்கொள்ள வேண்டும். அதாவது கலாசார, பொருளாதார, கல்வி மற்றும் மூலோபாயக் கருத்துக்கள் மற்றும் ஆதரவுகள் பரிமாற்றப்பட வேண்டும். ஒபாமா அரசாங்கத்தால் இது தொடர்பாக முழுமையானதொரு மாற்றத்தை ஏற்படுத்த முடியாது என சிலர் கருதலாம். ஆனால் திருமதி கிளின்ரனோ அல்லது ட்ரம்ப்போ இந்த மாற்றத்தை ஏற்படுத்த முடியும் என நான கருதுகிறேன். அமெரிக்காவின் புதிய அரசாங்கமானது இலங்கை மீது சிறப்புறச் செயற்படுவதற்கான உந்து தலை நாங்கள் நிச்சயமாக வழங்குவோம்.

கேள்வி: இலங்கையை கேந்திர முக்கியத்துவம் மிக்க மையமாக நீங்கள் பார்க்கிறீர்களா?

பதில்:இவ்வாறு பார்ப்பது தவறானது என நான் கருதுகிறேன். இலங்கையை அமெரிக்கா வெறுமனே கேந்திர முக்கியத்து மையமாக மட்டுமே நோக்கினால் இலங்கையுடன் அவசியமான உறவைக் கட்டியெழுப்புவதில் நாங்கள் தோல்வியடைவோம். இலங்கையை 'சிப்பாயாக' நோக்குவதை இலங்கையர்கள் விரும்பவில்லை. இலங்கையர்கள் தமது நாட்டை 'வீரப் பெருந்தகையாக' நோக்க வேண்டும் என விரும்புகிறார்கள். இலங்கையுடனான அமெரிக்காவின் உறவில் இலங்கையின் கேந்திர அமைவிடம் முன்னுரிமைப்படுத்தப்பட்டால், மற்றும் அமெரிக்கா இடையிலான உறவு நிலையானது தோல்வியடையும்.

(முற்றும்)

வழிமூலம் - சண்டேரைம்ஸ்
மொழியாக்கம் - நித்தியபாரதி

எல்லோரும் நீதியை விரும்புகின்றனர்...
ஆனால் அடுத்தவர் விஷயத்தில் மட்டும்.
- ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## போர்க்குற்ற விசாரணை நம்பகமற்றுப் போகக்கூடாது

உண்மைகளை ஏற்றுக் கொள்வதே உலகில் மதிக்கப்படுகின்ற விடயமாக உள்ளது.

பாரத தேசத்துக்கு விடுதலை வெற்றுக் கொடுத்த தேசபிதா மகாத்மா காந்தி சத்தியசோதனை என்ற தன் சரிதத்தை எழுதினார்.

எந்த இடத்திலும் அவர் தனது பிழைகளை-தவறுகளை குறிப்பிட மறக்கவில்லை. இதனால்தான் காந்தியை மகாத்மாவாக உலகம் போற்றுகிறது.

எனவே உண்மையை ஏற்றுக் கொள்வது, உண்மையை வெளிப்படுத்துவது எந்தக் காலத்திலும் எவராலும் வரவேற்கப்படக் கூடியது.

இருந்தும் இந்த விடயத்தில் இலங்கை அரசு எதிர்மறையான போக்கைக் கொண்டிருப்பது மிகவும் வேதனைக்குரியது.

2009ஆம் ஆண்டு வன்னியில் நடந்த இறுதிப் போரில் உயிரிழந்தவர்களின் சரியான எண்ணிக்கையை வெளிப்படுத்துவது மிகவும் நல்லதாயினும் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கையை குறைவாகக் காட்டுவதில் இலங்கை அரசு மிகக் கடுமையாகப் பிரயத்தனம் செய்வது தெட்டத்தெளிவாகத் தெரிகிறது.

அதிலும் இறுதிப் போரில் தம் உறவுகளை இழந்து கண்ணீரும் கம்பலையுமாக தமிழ் மக்கள் இருக்கின்ற நிலையில் இறுதிப் போரில் உயிரிழப்பு அதிகம் இல்லை என இந்த நாட்டின் அமைச்சர் ஒருவர் கூறுவாராயின் அதுவே முதற்தர இனவாதமாக இருக்கும்.

வன்னிப் போரில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை என்பது அரச நிர்வாகத்தின் ஊடாக பெறக்கூடியது.

நிலைமை இதுவாக இருக்கையில், இறுதிப் போரில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை அதிகம் இல்லை என நாக் கூசாமல் கூறுவதானது, தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட இழப்புகளை திட்டமிட்டு இருட்டடிப்புச் செய்வதாகவே அமையும்.

எனவே, இத்தகைய வலிந்த வதைகளை ஆட்சியாளர்கள் தவிர்த்துக் கொள்வது நல்லது. இலங்கைத் திருநாட்டில் இன ஒற்றுமையை ஏற்படுத்த வேண்டும் என்ற சிந்தனை தென்பகுதியில் இருக்குமாயின் வார்த்தைப் பிரயோகங்களை மிகவும் நிதானமாக முன்வைப்பதே நல்லது.

வன்னியில் நடந்த இறுதிப்போர் தொடர்பில் அண்மையில் கருத்து வெளியிட்ட இந்த நாட்டின் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன,

போர் வெற்றி மகிழ்ச்சியைத் தந்தாலும் போரில் ஏற்பட்ட உயிரிழப்புகள் வேதனையைத் தருகிறது எனக் குறிப்பிட்டிருந்தார்.

ஜனாதிபதியின் இந்த வார்த்தை மனித நேயம் சார்ந்தது. ஒரு நாட்டின் தலைவர் கூறக் கூடியது.

ஆனால் ஜனாதிபதியின் இந்தக் கருத்துக்களை முறியடிப்பதாக அமைச்சர்களின் கருத்துக்கள் அமைவது எல்லாவற்றையும் குழப்புவதாகும்.

இது தவிர, போர்க்குற்றம் தொடர்பிலான உள்ளக விசாரணையில் வெளிநாட்டு நீதிபதிகள் அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்று அமைச்சர் மகிந்த சமரசிங்க கூறியுள்ளார்.

வெளிநாட்டு நீதிபதிகள் அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்பதை போரில் வெற்றி பெற்றவர்கள் மட்டும் தீர்மானிப்பதாக இருந்தால் நடைபெறும் விசாரணை போரில் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு எந்தப் பயனையும் தரமாட்டாது.

ஆகையால் எதனையும் நிதானமாக அணுகுவதே நல்லது.

## தென்சீனக்கடல் விவகாரம் குறித்து ஜோன் கெரி சீனாவுக்கு எச்சரிக்கை

(மொங்கோலியா)

தென் சீனக்கடல் பிராந்தியத்தில் சீனா மேற்கொள்ளும் வான் பாதுகாப்பு விஸ்தரிப்பு நடவடிக்கைகளுக்கு அமெரிக்காவின் இராஜாங்க செயளாளர் ஜோன் கெரி கடும் கண்டனம் தெரிவித்துள்ளதுடன் எச்சரிக்கையும் விடுத்துள்ளார்.

இதனைக் கெரி குறிப்பிடுகையில் ஆத்திரமூட்டும் ஸ்திரத்தன்மையைக் குலைக்கின்ற செயல் என்று விபரித்துள்ளார்.

மொங்கோலியாவிற்கு விஜயம் மேற்கொண்டுள்ள அமெரிக்க இராஜாங்க செயலாளர் ஜோன் கெரி இந்த விடயத்தினை நேற்று ஞாயிற்றுககிழமை தெரிவித்துள்ளார்.

எவ்வாறான போதும். தென் சீனக்கடற் பிராந்தியத்தில் சீனா மேற்கொள்ளும் நடவடிக்கைகள் தமது பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்கே என்றும், இதில் ஏனைய நாடுகள் தலையிடுவதைத் தாம் விரும்பவில்லை என்றும் அண்மையில் சீனா தெரிவித்திருந்தது.

இந்த நிலையில், அமெரிக்கா ஆசிய மற்றும் ஏனைய நாடுகளை தமது கட்டுப்பாட்டிற்குள் வைத்துக்கொள்ள எத்தணிப்பதாகவும் சர்வதேச ஊடகங்கள் சுட்டிக் காட்டுகின்றன.

எவ்வாறான போதும், கடந்த 2013 ஆம் ஆண்டு முதல கிழக்குச் சீனக்கடற்பகுதியில் சீனா தன்னுடைய வான் பாதுகாப்பு அடையாள மண்டலத்தினை விஸ்தரித்து வருவதும், அதனால் ப்ல்வேறு சர்வதேச நாடுகளினதும் எதிர்ப்புக்களை சம்பாதித்து வருவதும் சுட்டிக்காட்டத்தக்கது. (செ-12)

## லொறியுடன் மோதியது ஆட்டோ; விபத்தில் ஒருவர் உயிரிழப்பு

(ஹட்டன்)

ஹட்டன் - கொழும்பு பிரதான வீதியில் யட்டியாந்தொட்ட அலிவத்த பிரதேசத்தில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று அதிகாலை ஒரு மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

கிதுல்கல பிரதேசத்திலிருந்து யட்டியந்தோட்டை நோக்கி பயணித்த முச்சக்கர வண்டி வேகக்கட்டுப்பாட்டை இழந்து வீதி ஓரத்தில் நிறுததி வைக்கப்பட்டிருந்த லொறி ஒன்றில் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது. இந்த விபத்தில் முச்சக்கர வண்டி சாரதி உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் 38 வயதான யட்டியந்தோட்டை பிரதேசத்தை சேர்ந்தவராவார்.

உயிரிழந்தவரின் சடலம் கரவனல்ல ஆதார வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளது.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை யட்டியாந்தோட்டை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (செ-12)

## பாவனைக்குதவாத கொத்தமல்லி

மனித பாவனைக்குதவாத மழைநீரினால் சேதமடைந்த சுமார் 10 இலட்சம் ரூபாய் பெறுமதியான 7 ஆயிரத்து 225 கிலோ கொத்தமல்லியை தம்புளை பிரதேச அரிசி ஆலையொன்றிலிருந்து தம்புளை பிரதேச பொது சுகாதார அதிகாரிகள் நேற்றுமுன்தினம் கைப்பற்றியுள்ளனர். மக்கள பாவனைக்குதவாத பெருமளவு கொத்தமல்லி மீண்டும் மக்கள் பாவனைக்கு சந்தைக்கு வருவதற்காக அரிசி ஆலை ஒன்றில் பதப்படுத்தப் பட்ட நிலையில் இருந்த போதே, அதிகாரிகளினால் மீட்கப்பட்டுள்ளது. (செ-12)

# மைத்திரி பங்கேற்ற விழாவில் தீ விபத்து; அரச புலனாய்வுத் தலைவரிடம் விசாரணை!

(அம்பாந்தோட்டை)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பங்கேற்ற அம்பாந்தோட்டையில் சங்கிரி-லா நட்சத்திர விடுதி திறப்பு விழாவில் இடம்பெற்ற தீவிபத்துத் தொடர்பாக உயர்மட்ட விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்த விசாரணைகளின் போது, சங்கிரி-லா விடுதியின் பாதுகாப்பு ஆலோசகரான முன்னாள் இராணுவப் புலனாய்வுப் பிரிவுத் தலைவர் மேஜர் ஜெனரல் கபில ஹெறந்த விதாரண தொடர்பாகவும் விசாரணைகள் நடத்தப்படவுள்ளன.

மேஜர் ஜெனரல் கபில ஹெறந்தவிதாரண இராணுவப் புலனாய்வுப் பிரிவு பணிப்பாளராக இருந்து, பின்னர், மகிந்த ராஜபக்ஷவின் பதவிக்காலத்தில் அரச புலனாய்வுப் பிரிவு தலைவராக நியமிக்கப்பட்டிருந்தார்.

மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதி தேர்தலில் தோல்வியடைந்ததும் இவர் அந்தப் பதவியில் இருந்த விலகிய நிலையில், தற்போது அவர் சங்கிரி- லா விடுதியின் பாதுகாப்பு ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ளார்.

நாடு இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், வாணவேடிக்கைகளை நடத்த வேண்டாம் என்று, கடந்த புதன்கிழமை மாலை இடம்பெற்ற இந்த விடுதியின் திறப்பு விழாவுக்கு முன்னதாக, ஜனாதிபதி செயலகம் ஆலோசனை கூறியிருந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

எனினும், ஜனாதிபதி நிகழ்வில் பங்கேற்றிருந்த போது, பட்டாசுகள் வெடிக்கப்பட்டு வாணவேடிக்கை நடத்தப்பட்டது.

கடும் காற்றினால் பறந்த தீப்பொறிகள் பட்டு, அங்கு அமைக்கப்பட்டிருந்த குடில் ஒன்று தீப்பிடித்து எரிந்தது. ஜனாதிபதி நடன நிகழ்வு ஒன்றைப் பார்த்துக் கொண்டிருந்த போதே- அவருக்கு 50 மீற்றர் தொலைவில் இந்த தீவிபத்து ஏற்பட்டது.

இதையடுத்து அவர், பாதுகாப்பாக விடுதிக்குள் அழைத்துச் செல்லப்பட்டார். ஜனாதிபதி பாதுகாப்பு அணியில் இடம்பெற்றிருந்த தீயணைப்பு வாகனம் ஒன்றே தீயை அணைக்கப் பயன்படுத்தப்பட்டது. இந்தச் சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்திய நிலையில், சிறப்பு பொலிஸாரால் புலனாய்வு விசாரணைகளை ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அந்தப் பகுதியில் வெடிக்கப்பட்ட பட்டாசுகளின் மாதிரிகளையும் பொலிஸார் சேகரித்துள்ளனர்.

ஜனாதிபதி பங்கேற்ற நிகழ்வில் பாதுகாப்புக் குறைபாடு தொடர்பாக விரிவான விசாரணைகள் இடம்பெறும் என்றும், இதன்போது விடுதியின் பாதுகாப்பு ஆலோசகரும், முன்னாள் அரசபுலனாய்வுத் துறைத் தலைவருமான மேஜர் ஜெனரல் கபில ஹெறந்தவிதாரண குறித்தும் விசாரணைகள் நடத்தப்படவுள்ளன. (செ-12)

## துருக்கியில் அகதிகள் முகாமில் 8 சிறுமிகள்மீது துஷ்பிரயோகம்

### குற்றவாளிக்கு 108 ஆண்டுகள் சிறைத்தண்டனை

துருக்கி நாட்டின் தெற்கு காஜியண்டெப் மாகாணத்திலுள்ள நிஜிப் பகுதியில் அகதிகள் முகாம் ஒன்று உள்ளது. இந்த முகாமில் 10, 800 பேர் தங்கியிருந்தனர்.

இந்த முகாமில் இருந்த 8 சிரிய நாட்டு சிறுமிகளை அந்த முகாமில் வேலை செய்த ஊழியர் எர்டல் என்பவர் பாலியல் துஷ்பிரயோகத்துக்குட்படுத்தியது கண்டறியப்பட்டது.

இது தொடர்பான வழக்கு துருக்கி நீதிமன்றம் ஒன்றில் நடைபெற்று வந்தது. இந்நிலையில் நேற்று குற்றவாளிக்கு 108 ஆண் டுகள் சிறை தண்டனை விதித்து நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

முன்னதாக, அரசு தரப்பு சட்டத்தரணி குற்றவாளிகள் 289 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்க வேண்டும் என்று வாதாடினார் எனபது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை செவ்வாய்க்கிழமை காலை 8 மணியிலிருந்து 5.30 மணி வரை மணிவரை யாழ் பிரதேசத்தில் நாச்சிமார் கோவிலடி, இலந்தைக்காடு, கொற்றாவத்தை, பொலிகண்டி ஆலடி, நெடியகாடு, ஜஸ் தொழிற்சாலை பொலிகண்டி ஆகிய இடங்களிலும் கிளிநொச்சி பிரதேசத்தில அக்கராயன், ஆனை விழுந்தான், வன்னேரிக்குளம், ஜெயபுரம் ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில தெற்கிலுப்பைக்குளம் பிரதேசம், குருமன்காடு கிராமம், சாம்பல்தோட்டம் கிராமம், பசார் வீதி ஆகிய இடங்களிலும் மின் தடைப்படும். (இ-9)

## வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

### கர்ப்பகால பொறுப்புக்கள்



குடும்ப வாழ்வில் பொறுப்பேற்றுள்ள கணவன்-மனைவி இருவரும் கருப்பையில் வளர்ந்து வரும் குழந்தையின் உறுப்புகளின் வளர்ச்சியை நன்றாக நினைவில் கொள்ள வேண்டும். இந்தக் காலகட்டத்தில், தம்பதிகள் போதைப் பொருள் உபயோகித்து உடலுறவு கொண்டாலும், முரட்டுத்தனமாக நடந்து கொண்டாலும் உருவாகி வரும் குழந்தையின் உறுப்புகள் அதன் விளைவாகத் தாக்கப் பெறும். செயல் விளைவு நீதி அடிப்படையில் பெற்றோர்களின் அறியாமை, அலட்சியம், உணர்ச்சிவயம் இவற்றால் கருவில் வளரும் குழந்தையின் உறுப்புகள் நலிவுறும்.

மேலும் கர்ப்ப காலத்தில்' கருவுற்றிருக்கும் பெண்ணுக்கு மனதில் துன்பமோ, அச்சமோ அளிக்கும்படி எவரும் நடந்து கொள்ளக் கூடாது. குழந்தை உருவாகும் போதே தாய்-தந்தை இருவரின் கருமையப் பதிவுகள் குழந்தைக்குச் சொந்தமாகிவிடும். அதோடு, கருப்பையில் குழந்தை வளரும் காலத்திலும், பிறந்தபின் அதனை வளர்க்கும் முறையில், ஏற்படும் விளைவுகளும் குழந்தையின் உடல் நலத்தையும், மனவளத்தையும் தக்கபடி அமைத்துக் கொடுக்கும்.

நல்ல குழந்தை பிறக்க வேண்டும் என்று கணவனும், மனைவியும் விரும்புவது இயல்பு. அதற்கேற்றவாறு அவர்கள் கடமையை ஆற்றாவிட்டால், எவ்வாறு நல்ல குழந்தையை அடைவது? ஒரு குழந்தையின் உடல் நலமும், மனவளமும் பெற்றோர்களுக்கு மட்டும் உரிமையானவையல்ல. பிறக்கும் ஒவ்வொரு குழந்தையும், மனித சமுதாயத்தில் ஓர் உறுப்பினரே.

# வடமாகாண பாடசாலைகளுக்கிடையிலான

# கபடிப் போட்டி இறுதி முடிவுகள்





































வடமாகாண பாடசாலைகளுக்கிடையிலான மாகாண மட்ட கபடிப் போட்டிகள் அண்மையில் ஓமந்தை மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இதில்

15 வயதுப்பிரிவு
ஆண்கள்

மன்னார் கட்டையடம்பன் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை முதலாமிடத்தையும் சாவகச்சேரி இந்துக்கல்லூரி இரண்டாமிடத்தையும் கிளிநொச்சி கனகாம்பிகைக்குளம் அ.த.க. பாடசாலை மூன்றாமிடத்தையும் யாழ்.நெல்லியடி மத்திய கல்லூரி நான்காமிடத்தையும் பெற்றுக்கொண்டன.

19 வயதுப்பிரிவு
ஆண்கள்

யாழ்.கலட்டி றோ.க.த.க பாடசாலை முதலாமிடத்தையும் யாழ்.நெல்லியடி மத்திய கல்லூரி இரண்டாமிடத்தையும் கிளிநொச்சி இந்துக்கல்லூரி மூன்றாமிடத்தையும் யாழ்.சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி நான்காமிடத்தையும் பெற்றுக்கொண்டன.

15 வயதுப்பிரிவு
பெண்கள்

யாழ்.மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை முதலாமிடத்தையும் யாழ்.நெல்லியடி மத்திய கல்லூரி இரண்டாமிடத்தையும் கிளி.சிவநகர் அ.த.க.பாடசாலை மூன்றாமிடத்தையும் யாழ். சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி நான்காமிடத்தையும் பெற்றுக்கொண்டன.

19 வயதுப்பிரிவு
பெண்கள்

யாழ்.மெதடிஸ்த பெண்கள் உயர்தரப்பாடசாலை முதலாமிடத்தையும் யாழ்.நெல்லியடி மத்திய கல்லூரி இரண்டாமிடத்தையும் கிளி.கிளிநொச்சி இந்துக்கல்லூரி மூன்றாமிடத்தையும் யாழ்.இளவாலை திருக்குடும்ப கன்னியர்மடம் ம.வி.நான்காமிடத்தையும் பெற்றுக்கொண்டன.

## போராடி வென்றது ஞானமுருகன்

உதைபந்தாட்ட சங்க அனுமதியுடன் வல்வெட்டித்துறை நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக் கழகம் நடத்தும் வடமாகாண வல்லவன் உதைபந்தாட்ட தொடரில் 29.05. 2016 அன்று நடைபெற்ற போட்டியில் மயிலங்காடு ஞானமுருகன் வி.க எதிர்த்து வல்வை வி.க மோதியது.

ரசிகர்களின் ஆதரவில் இடம்பெற்ற போட்டியில் இரு அணியினரும் வெற்றிக்கான வேகமான ஆட்டத்தினை வெளிப்படுத்தினர். போட்டியின் முதற்பாதி ஆட்டத்தில் 13 ஆவது நிமிடத்தில் ஞான முருகன் விளையாட்டுக்கழகத்திற்கு கிடைக்கப்பெற்ற மூலை உதையினை அனுபவ வீரர் தவரூபன் சிறப்பான மூலை உதை மூலம் கோலாக மாற்றினார். இரண்டாவது பாதி ஆட்டத்தில் ஆட்டத்தின் 43 ஆவது நிமிடத்தில் வல்வை விளையாட்டுக்கழகம் ஜெகதாஸ் ஒரு கோலினை அடிக்க ஆட்டம் மேலும் விறுவிறுப்பானது. ஆட்ட நேர முடிவில் 1:1 என சமநிலையானது.

போட்டியின் சமநிலை தவிர்ப்புக்காக தலா 05 உதைகள் வழங்கப்பட்டு சமநிலை தவிர்ப்பு உதையில் ஞானமுருகன் வி.க 4:3 என வெற்றி பெற்றது. போட்டியின் ஆட்ட நாயகனாக ஞானமுருகன் வி.க தவரூபன் தெரிவு செய்யப்பட்டு அவரிற்கான பணப்பரிசு மற்றும் பதக்கத்தினை கழுகுகள் வி.க மூத்த வீரரும் கழக நலன்விரும்பியும் ஆகிய துரை ராசா வழங்கி கௌரவித்தார்.(கு)

## குருநகர் உதயசூரியன் வி.கழக மாவட்ட ரீதியிலான கிரிக்கெட் போட்டி

## இணுவில் கலைஒளி சம்பியன்

குருநகர் உதயசூரியன் விளையாட்டுக்கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்தப்பட்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டித் தொடரின் இறுதிப்போட்டியில் நெல்லியடி city sports விளையாட்டுக் கழகத்தை வெற்றி பெற்று கிண்ணத்தை சுவீகரித்தது இணுவில் கலை ஒளி விளையாட்டுக்கழகம்.

மேற்படி போட்டியானது (29.05.2016) குருநகர் பாடுமீன் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது.

நாணயசுழற்சியில் வெற்றி பெற்ற இணுவில் கலை ஒளி விளையாட்டுக்கழகம் முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

அதற்கமைய நிர்ணயிக்கப்பட்ட 10 பந்துபரிமாற்றங்கள் நிறைவில் அவ் அணி 5 இலக்குகளை இழந்து 102 ஓட்டங்களை பெற்றன.



தொடர்ந்து துடுப்பெடுத்தாட களமிறங்கிய நெல்லியடி city sports விளையாட்டுக் கழகம் 10 பரிமாற்றங்கள் நிறைவில் 6 இலக்குகளை இழந்து 86 ஓட்டங்களை பெற்றன. 16 ஓட்டங்களினால் இணுவில் கலைஒளி விளையாட்டுக்கழகம் வெற்றிபெற்றது.

கலை ஒளி சார்பாக தீபநாதன் 2 பந்து பரிமாற்றங்களை மேற்கொண்டு 9 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து 3 இலக்குகளை கைப்பற்றினார். போட்டியின் ஆட்டநாயகனாக கலை ஒளி வீரர் கோகுலனும் போட்டி தொடரின் நாயகனாகவும் சிறந்த பந்துவீச்சாளராக கலை ஒளி வீரர் தீபநாதனும் தெரிவாகினர். (கு)

## இன்றைய போட்டிகள்

அராலி வடக்கு திருமகள் விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்டத்திலுள்ள விளையாட்டுக் கழகங்களுக்கிடையே உதைபந்தாட்ட போட்டியை அராலி வடக்கு மடத்தடி திருமகள் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடத்துகின்றது. இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறும் போட்டியில் நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து சில்வர் ஸ்ரார் விளையாட்டுக் கழகமும் மாலை 4.30 மணிக்கு நடைபெறும் போட்டியில் பொம்மஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து யூனியன் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன.

❁❁❁❁❁❁❁

இளவாலை ஹென்றிஸ் இளைஞர் விளையாட்டுக் கழகம் ஹென்றீசியன் சவால் கிண்ண உதைப்பந்தாட்ட சுற்றுப் போட்டியினை புனித ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் நடத்து ன்றது. இன்று திங்கட்கிழமை இரவு 7.30 மணிக்கு மின்னொளியில் நடைபெறும் போட்டியில் புனித ஹென்றியரசர் அணி யினை எதிர்த்து முல்லை. சென். யூட் விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது.(கு)

# ஒன்றுபட்ட இலங்கைக்குள்...

நேற்றைய தினம் யாழ்ப்பாணம் இணுவில் அருணகிரிநாதர் சிவசுப்பிரமணிய ஆலயத்தின் மண்டபத் திறப்புவிழாவில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில் தெரிவித்திருப்பதாவது,

இந் நாட்டில் தற்போது ஒரு ஆட்சி மாற்றம் ஏற்பட்டுள்ளது அது வரவேற்கத்தக்க ஓர் ஆட்சியாகும். தமிழ் மக்களுக்கு பழைய ஆட்சியில் நிகழ்ந்த அநீதிகள் தறபோதைய ஆட்சியில் இல்லை.

இவ் ஆட்சி மாற்றத்துக்கு எமது மக்கள் பாரிய பங்களிப்பை செய்திருந்தார்கள். அவர்கள் இவ் ஆட்சி மாற்றத்தினூடாக நாட்டிலே நல்லாட்சி அமைதி, சமாதானம் ஏற்படும என நம்பினார்கள். அத்துடன் தமது பல்வேறு விதமான குறைபாடுகள் தீர்க்கப்படும் என நம்பினார்கள்.

விஷேடமாக காணிப் பிரச்சினை தொடர்பாக சிறைகளிலே உள்ள தமிழ் இளைஞர்கள் தொடர்பாக காணாமல் போனவர்கள் தொடர்பாக தமது பிரச்சினைகள் தீர்க்கப்படும் என நம்பியிருந்தார்கள்.

ஆனால் சில கருமாங்கள் இடம் பெற்றுள்ள போதும் காணிகள் வட்டப்படவில்லை என கூறமுடியாது. காணிகள் வடக்கிலும் கிழக்கிலும் ஓரளவு விடப்பட்டுள்ளன.

ஆனால் பாரியளவில் இன்னமும் விடப்பட வேண்டும். அது விரைவில் ஏற்பட வேண்டும் அதேபோல் காணாமல் போனவர்கள் தொடர்பிலும் சிறைகளிலே உள்ளவர்கள் தொடர்பிலும் விரைவிலே முடிவொன்று எட்டப்பட வேண்டும்.

அத்துடன் மக்களது வீட்டு வசதிகள் ஏற்படுத்தப்பட வேண்டியதுடன் அவர்களது தொழில் துறைகளுக்கான உதவிகளும் அதனை மேற்கொள்ளுவதற்கான வசதி வாய்ப்புகளும் ஏற்படுத்த வேண்டும்.

இளைஞர்களது தொழில் வாய்ப்புகள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட வேண்டும். குறிப்பாக அரச வேலைவாய்ப்புகளில் தமிழ் இளைஞர் யுவதிகள் புறக்கணிக்கப்படுவதாகவும் நியாயமாக வழங்கப்படுவதில்லை எனவும் குறைபாடுகள் பரவலாக இருக்கின்றன.

எனவே இவை தொடர்பில் எதிர்வரும் 9 ஆம் திகதி பாராளுமன்றத்திலே முழுநாள் விவாதத்தை நடத்தி அதனூடாக இப் பிரச்சினையை பிரதமர் முன்னிலையிலும் ஜனாதிபதி முன்னிலையிலும் கொண்டு செல்வோம்.

மேலும் நாம் இப்போது முக்கியமான ஓர் காலகட்டத்தில் வாழ்ந்து வருகின்றோம். அழிவில் இருந்தும் இழப்பில் இருந்தும் மீண்டு எமது வாழ்வியலை கட்டியெழுப்பி கௌரவமாகவும் சுயமரியாதையுடனும் சுதந்திரமாகவும் சரித்திர ரீதியாக வாழ்ந்துவந்த பிரதேசங்களில் எமது நியாய பூர்வமான அபிலாஷைகளை ஒருமித்த நாட்டுக்குள் பிளவுபடாத இலங்கைக்குள் பொருளாதார ரீதியாகவும் சமூக ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் கலாசார ரீதியாகவும் கட்டியெழுப்ப விரும்புகின்றோம். இந்த நிலையை நாங்கள் விரைவில் அடைய வேண்டும்.

தேசிய பிரச்சினைக்கு நியாயமான தீர்வை காணும் நோக்கத்துடன் புதிய அரசியல் திட்ட உருவாக்கத்துக்கு சில முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டு அவை இன்று அமுல்படுத்தப்பட்டுள்ளது.

இதன் மூலம் நியாயமான நிரந்தரமான அரசியல் தீர்வு எட்டப்பட வேண்டும் என நாம் விரும்புகின்றோம் அவ்விதமான அரசியல் தீர்வு எட்டப்பட ஒருமித்த நாட்டுக்குள் நாட்டுக்கு எந்தவிதமான பாதிப்பும் ஏற்படாமல் ஒரு விசுவாசமான பங்களிப்பையும் ஒத்துழைப்பையும் நாம் செய்வோம்.

ஆனால் அது மக்களுக்கு திருப்தி அளிப்பதாகவும் அதனை மக்கள் ஏற்றுக்கொள்ள கூடியதாகவும் அமைய வேண்டும் என இரா.சம்பந்தன் குறிப்பிட்டார். (செ-9)

# இந்.மீனவர்கள் 4 பேர் கைது

(கொழும்பு)

இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட இராமேஸ்வரப் பகுதியை சேர்ந்த 4 இந்திய மீனவர்களையும் எதிர்வரும் 16 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்ற நீதிபதி கருப்பையா ஜீவராணி நேற்றைய தினம் உத்தரவிட்டுள்ளார்

நேற்று முன்தினம் இரவு நெடுந்தீவு கடற்பரப்பில் ஒரு படகில் வந்து அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட 4 இந்திய மீனவர்களையும் இலங்கை கடற்படையினர் கைது செய்து அவரகளை யாழ் மாவட்ட கடற்தொழில் நீரியல் வளத்துறை அதிகாரிகளிடத்தில் ஒப்படைக்கப்பட்டனர்.

இவர்களில் இஸ்லாமியர்கள் 2 பேரும் கிறிஸ்தவர் ஒருவரும் இந்து ஒருவ்ரும் உள்ளடங்குகின்றனர்.

நேற்றையதினம் இவர்களை ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட போது நீதவான் அவர்களை எதிர்வரும் 16 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார். (செ-9)

# பேரவையின்...

போர் கூடத்தில் நடைபெற்றது.

அதில் கலந்து கொண்டு விளக்கமளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

60 வருடங்களுக்கு முன்னர் 5 ஆம் திகதி யூன் மாதம் சிங்களசட்டம் கொண்டுவரப்பட்டு இன அழிப்புக்கு காரணமான நாள் அன்றைய நாளில் தமிழ் மக்கள் பேரவையின் ஊடக கருத்தரங்கு நடைபெறும் சந்தர்ப்பம் இறையருளால் கிடைத்துள்ளது.

எமது கலை கலாச்சாரம் சிதைக்கப்பட்ட நிலையில் இவை அனைத்தும் ஒன்று கூட்டப்பட்டு ஒருமித்து சர்வதேச விசாரணையை முன்னிறுத்தி வகையில் பொறுப்புக் கூறலை முன்னெடுப்பதற்காக இவ் உபகுழு அமைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாகபுலம்பெயர் அமைப்புகளுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இக்குழுவின் செயற்பாடுகள் எதிர்காலத்தில் தமிழ் மக்கள் அனைவரும் எதிர்பார்த்திருக்கின்ற அரசியல் தீர்வை எட்டுவதற்கு எமது கைகளில் உள்ள ஒரே ஒரு ஆயுதம் ஆகும்.

இணக்க அரசியலில் தமிழ் தேசிய அரசியல் பின்னியிருக்கிற காலகட்டத்திலே பொதுமக்கள் தொடர் பாடலை கொண்டு பி.ஆர்.சி அறிக்கை ஒன்றை சமர்ப்பித்துள்ளது.

அதில் சிங்கள தேசிய நிலைப்பாட்டை மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளார்கள். இந்த நிலையில் பொறுப்புக் கூறல் தொடர்பான விடயத்தை மீண்டும் சர்வதேசத்தின் மத்தியில் கொண்டு செல்வது எமது நோக்கமாக உள்ளது.

ஆணைக்குழுக்கள் மூலமாகவும் தமிழர்களுக்கு தீர்வுகள் கிடைக்கவில்லை. எனவே பொறுப் புக்கூறலுக்கான அவசியத்தை மேற்கொள்ளும் செயற்திட்டத்தைதமிழ் மக்கள் பேரவை ஆரம்பித்துள்ளது.

சர்வதேச விசாரணை என்ற வகையில் ஐக்கியநாடுகள் அமையத்தால் 2012, 2013, 2014, 2015 ஆண்டு வரை அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டு தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டன. சர்வதேச தர விசாரணை உறுதிப்படுத்தப்பட்ட நிலையிலே இறுதி அறிக்கையில் சர்வதேச விசாரணையை உள்ளடக்கி எதிர்கால விசாரணைகள் அமைய வேண்டும் என்ற கருத்து தெரிவிக்கப்பட்டது. அதில் சர்வதேச தர நபுணர்கள் 3 பேர் இருந்தும் அவர்கள் பாரிய மனித பேரவலம் நடந்ததனை உறுதிப்படுத்தியிருந்தும் அது தொடர்பில் அரசு நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. எனவே இவற்றை முன்னிறுத்தி போராட வேண்டிய நிலையில் உள்ளோம்.

இந்த நிலையில் தமிழ் மக்கள் பேரவையினருடன் சர்வதேச சட்ட ஆலோசகரும் சர்வதேச சட்டவல்லுனரும், பிரபல்யபோர்க்குற்றம் மற்றும் இன அழிப்பு சட்ட வல்லுனருமாகிய அமெரிக்காவைச் சேர்ந்த பேராசிரியர் பொயில் இணைந்துள்ளது நிச்சயம் சர்வதேசத்தாலும், தமிழ்த் தலைமைகளாலும் ஏமாற்றப்பட்டு கைவிடப் பட்டுள்ள பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு ஒரு மன ஆறுதலைக் கொடுக்கும் என நம்பலாம்.

மேலும், 2009 முள்ளிவாய்க் கால இன அழிப்பின் பின்னும், சர்வதேசமும், தமிழ்த்தலைமைகளும் இலங்கைஅரசுடன் இணைந்து அரங்கேற்றிய ஐ.நா. தீர்மானம் மூலம், ஒரு காலம் கடத்தி, தமிழ் மக்களை ஏமாற்றி, இன அழிப்பிற்கான விசாரணையை நீர்த்துப்போகச் செய்யப்படும் ஒரு கபட நாடகத்திற்கு, பேராசிரியர் பொயிலின் தமிழ் மக்கள் பேரவையினருடனான இணைவு ஒருபெரும் சவாலாக அமையும் எனலாம். மேலும், இது ஒருமிக முக்கிய வரலாற்றுத் திருப்பத்திற்கான ஆரம்பமாக கருதப்படலாம்.

இவ் வேளையில், உள்ளக விசாரணையே இல்லையென்றளவுக்கு செல்கையில், இன்று தமிழ் மக்கள் பிரதிநிதிகள் உண்மையிலேயே 2009 இன அழிப்பிற்கு ஒருநீதி கிடைக்க வேண்டும் எனநினைப்பின், தமிழ் மக்கள் பேரவையின் பொறுப்புக் கூறலுக்கான சர்வதேசவிசார ணைக்கான உபகுழு ஆரம்பிக்கவிருக்கும் செயற்திட்டங்களிற்கு தமது முழு ஆதரவினை வெளிப்படையாகத் தெரிவித்து, எம்முடன் இணைந்து செயற்படமுன்வர வேண்டுமென வேண்டிக்கொள்கின்றோம் எனஅவர் மேலும் தெரிவித்தார். (செ-9)

# பேரவையின் மூன்று உப குழுக்கள்...

இக்குழுக்களின் செயற்பாடுகள் தொடர்பில் விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் மாநாடு நேற்றைய தினம் யாழ்.நக்காவீதியில் அமைந்துள்ள கலாமுற்றம் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்த மாநாட்டில் தமிழ் மக்கள் பேரவையால் உருவாக்கப்பட்ட முக்கிய மூன்று உப குழுக்களினதும் இணைத் தலைவர்கள் இணைநது குறித்த குழுக்களின் செயற்பாடுகள் தொடர்பில் ஊடகங்களுக்கு விளக்கமளித்திருந்தனர்.

அந்தவகையில்,

### கலை கலாசாரத்திற்கான உபகுழு

கலை கலாசாரத்திற்கான உப குழுவின் இணைப்பாளர்களாக சின்மயா மிஷன் ஜாக்கிரதசைதன்ய சுவாமிகள், திருமறைக்கலாமன்ற ஸ்தாபகர் அருட்தந்தை மரிய சேவியர், T.வசந்தராஜா, வைத்திய நிபுணர் பிரேமகிருஷ்ணா ஆகியோர் செயற்படவுள்ளனர்.

சமூகத்தின் கலை, கலாசாரம் சார்ந்த ஆர்வமுள்ள மற்றும் அத்துறை சார்ந்த நிபுணர்கள் பலருடனும் நெருங்கிய தொடர்புகளைக் கொண்ட சமய மற்றும் சமூகபெரியார்கள் அடங்கிய வடக்கு கிழக்கு தழுவிய 22 அங்கத்தவர்களைக் கொண்டு இக் உபகுழு அமைக்கப்பட்டுள்ளது.

தமிழர் தாயக மாகிய வடக்கு, கிழக்கில் இன்று திட்டமிட்டு நடைபெறும் இன அழிப்பின் ஒருவடிவமாகிய கலாசார சீரழிவுகளைத் தடுத்தல் மற்றும் தமிழர்களின் பாரம பரியகலை, கலாசார விழுமியங்களை பேணிப்பாது காத்தலும், அவற்றைமேலும் வளர்த்தல் போன்ற நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு இக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

இச் செயற்திட்டங்களிற்காக கலாசாரச் சீரழிவுகளைத் தடுப்பதற்கான செயற்திட்டங்களிற்கான பிரிவு, நடனத்துறை, நாடகத்துறை, இலக்கியத்துறை, இசைத்துறை, ஓவியத்துறை, புகைப்படத்துறை, திரைக் கலைத்துறை, நாட்டார் கலை போன்றதுறைகள் மற்றும் பிரிவுகள் தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன் ஒவ்வோர் துறைக்குமான ஒரு இணைப்பாளர் தெரிவுசெய்யப்பட்டு அத்துறை சார்ந்த நிபுணர்கள் உள்வாங்கப்பட்டு செயற்திட்டங்கள் முன்னெடுக்கப்படும். இத் துறைகளுக்கான இணைப்பாளர்களும் மேற்குறிப்பிட்ட 22 பேர் கொண்ட உப குழுவில் அடங்குகின்றனர்.

அத்துடன் மேற்குறித்ததுறைகள் தவிர்ந்த ஏனைய துறைகளில் ஆர்வமுள்ளவர்கள் நேரடியாக கலை கலாசாரத்திற்கான உபகுழுவுடன் 94 710145723 அல்லது 94 75 6993212 என்ற தொலைபேசி இலககங்களுடாகவோ அல்லது kalaachaaram@tamilpeoplescouncil.org என்ற மின்னஞ்சல் மூலமாகவோ தொடர்புகொண்டு அத்துறைகளையும்செயற்படுத்த இணைந்து கொள்ளலாம். மேலும் இத்துறைகளில் பங்களிக்கவிரும்பும் தாயகம் மற்றும் புலம்பெயர் அன்பர்கள் மேற் குறிப்பட்ட தொடர்புகளினூடாக இணைந்து கொள்ளலாம்.

### சமூக, பொருளாதார வலுவூட்டலிற்கான உபகுழு

சமூக, பொருளாதார வலுவூட்டலிற்கான உபகுழுவின் இணைப்பாளர்களாக யாழ் பல்கலைக்கழக பேராசிரியர் சிவநாதன், கொழும்பு பல்கலைக்கழக பேராசிரியர் அமிர்தலிங்கம், வைத்தியநிபுணர் கருணாகரன் ஆகியோர் செயற்படவுள்ளனர்.

தமிழர் தாயகமாகிய வடக்கு, கிழக்கின் பொருண்மிய துறை சார்ந்த நிபுணர்கள் மற்றும் எமது பிரதேச அபிவிருத்தியில் பங்காற்றி அனுபவமுள்ள பல்வேறுபட்ட திணைக்கள உத்தியோகஸ்தர்கள், தொழில் அதிபர்கள், அரசசார்பற்ற நிறுவனத்தவர்கள் அடங்கிய வடக்குகிழக்குதழுவிய 20 அங்கத்தவர்களைக் கொண்டு இந்த உப குழு அமைக்கப்பட்டுள்ளது.

தமிழர் தாயகமாகிய வடக்கு, கழக்கில் ஒரு முறைப்படியான திட்டமிடலுடன் அபிவிருத்திகளை மேற்கொள்ள சகலவிதமான ஒத்துழைப்பையும் வழங்கல், பிரதேசத்திற்கும், தமிழ் மக்களுக்கும் நேரான / எதிர்மறையான விளைவை ஏற்படுத்தக் கூடிய அபிவிருத்தித் திட்டங்களை இனங்கண்டு அதுபற்றிய ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தல் மற்றும் புலம்பெயர் உறவுகளின் உதவியுடன் இனங்காணப்பட்ட சில பொருண்மிய திட்டங்களை செயற்படுத்தலை நோக்கமாக கொண்டு இக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

மேலும் வடக்குகிழக்கு தமிழ் மக்களின் பொருண்மியதிட்டமிடல் குழுவாக இயங்குதல், வடக்கு கிழக்கிற்கான ஒரு பூரணபொருண்மிய வரைபை உருவாக்கி அதன் அடிப்படையில் அபிவிருத்திகளை மேற்கொள்ளத் தேவையான செயற்திட்டங்களைமேற் கொள்ளல், உடனடிச் செயற்திட்டங்களாக சில அடையாளங் காணப்பட்டசிறிய, நடுத்தர முயற்சியாண்மை மேம்படுத்தல் செயற்திட்டங்களை செயற்படுத்தல்.

உதாரணமாக போரினால் அங்கவீனமானவர்கள் மற்றும் பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்கள், வறுமை நிலையிலுள்ள குடும்பங்கள் போன்றவர்களின் பொருளாதார நிலையை உயர்த்தி வலுவாக்குவதற்கான செயற்திட்டங்கள் போன்ற முக்கிய பிரதான செயற்திட்டங்களை இக் குழு முன்னெடுக்கவுள்ளது.

குக்குழுவானது ஆரம்பத்தில் 20 அங்கத்தவர்களைக் கொண்டிருந்தாலும் துறைசார்ந்த பிரிவுகளாக மேலும் நிபுணர்களை தாயகம், மறறும் புலம்பெயர் பிரதேசங்களில் இருந்து உள்வாங்கி விரிவாக்கப்படும்.

இவ்வாறு உருவாக்கப்பட்ட உப குழு பிரதேச. அபிவிருத்திக்கும், எம் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த முனைவோருக்கும், தேவைகேற்றவகையில் அந்தந்தபிரிவுகள் சார்ந்த நிபுணர்களின் ஆலோசனைகளைவழங்கும்.

மேலும் இப்பிரிவுகளின் முழுப் பங்களிப்புடன் வடக்குகிழக்கிற்கான பொருண்மிய வரைபை உருவாக்கும்.

இக்குழுவுடன் இணைந்து செயற்படவிரும்பும்' நிபுணர்கள், மற்றும் ஆர்வலர்கள் நேரடியாக 94 7101 45723 அல்லது 94 756993212 என்ற தொலைபேசி இலக்கங்களுடாகவோ அல்லது economy@tamilpeoplescouncil.org என்ற மின்னஞ்சல் மூலமாகவோ தொடர்பு கொண்டு இணைந்து செயற்படலாம்.

மேலும் இச்செயற்திட்டங்களில் இணைந்து பங்களிக்க விரும்பும் புலம்பெயர் அமைப்புக்கள் மற்றும் தனிநபர்கள் மேற்குறிப்பிட்ட தொடர்புகளினூடாக இணைந்துகொள்ள முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

### பொறுப்புக் கூறலுக்கான சர்வதேச விசாரணைக்கான உபகுழு

தமிழ் மக்கள் பேரவையில் அங்கத்துவ அரசியல் கட்சிகளில் இருந்து தலா இருவரும், சட்டவல்லுனர்கள், சர்வதேச விசாரணைக்காக உரக்கக் குரல் கொடுப்பவர்கள் அடங்கிய 15 அங்கத்துவர்கள் இவ் உப குழுவில் அடங்குகின்றனர். குறித்த உபகுழுவின் சட்ட ஆலோசகராக சர்வதேச சட்டஆலோசகர் பேராசிரியர் பிரான்சிஸ் பொயில் செயற்படவுள்ளார்.

இக் குழுவின் நோக்கமாக 2009 முள்ளிவாய்க்கால் இன அழிப்பிற்கான ஒருசர்வதேச விசாரணை தரம் குறைக்கப்பட்டு ஒரு உள்ளக விசாரணையாக ஐ.நாவினால் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, இன்று அதுவுமே ஏதும் அற்ற ஒருபொறிமுறையாகிய நிலையில், எம் மக்களுக்கு தேர்தல் காலங்களில் வழங்கப்பட்ட வாக்குறுதிகள், தேர்தல் வஞ்ஞாபணங்களில் கூறப்பட்ட சர்வதேசவிசாரணையும் அற்று, ஒரு அதிஉச்ச வடக்கு கிழக்கு இணைநத ஒருதீர்வுக்கான சாத்தியக்கூறுகள் ஏதும் அற்றநிலையில், அதேமக்கள் ஆணைக்கேற்ப, ஒருசர்வதேச விசாரணையைவலியுறுத்தி ஐ,நா. நோக்கிதமிழர் தாயகத்தில் இருந்து உரக்கக் குரல் கொடுத்தல் மற்றும் சர்வதேச விசாரணையை வலியுறுத்திய செய ற்திட்டங்களை மேற்கொள்ளல் போன்ற செயற்பாடுகளை மேற்கொள்ளவுள்ளது.

இக் குழுவுடன் இணைந்து செயற்படவிரும்பும் சட்ட நிபுணர்கள் மற்றும் ஆர்வலர்கள் நேரடியாக 94 756993211 என்றதொலைபேசி இலக்கத்தின் ஊடாகவோ அல்லது accountability@t amil peoples council.org என்ற மின்னஞ்சல் மூலமாகவோ தொடர்பு கொண்டு இணைந்து செயற்பட முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இக்குழுக்களின் செயற்பாடுகள் தொடர்பாக தொடர்சியாக மக்களுக்கு தெரியப்படுத்துவதுடன் பொதுமக்களின் கருத்துக்களும் உள்வாங்கி செயற்திட்டங்கள் மேற்கொள்ளப்படும் என குழுக்களின் இணைத் தலைவர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-9)

## சூழல் பாதுகாப்பு...

பொறுப்பாகும் என சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, அதற்காக அர்ப்பணிப்புடன் செயற்படுபவர்களுக்கு சார்பாக சுற்றாடல்துறை அமைச்சர் என்ற வகையிலும் நாட்டின் ஜனாதிபதி என்ற வகையிலும் தாம் இருப்பதாகவும் மேலும் தெரிவித்தார்.

சர்வதேச சூழல் தினத்தை முன்னிட்டு நேற்று முற்பகல் மாத்தளை எட்வட் மைதானத்தில் நடைபெற்ற சர்வதேச சூழல் தின தேசிய நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

நாடெங்கிலும் இடம்பெறும் சூழல் அழிவுகளைத் தடுத்து சூழலைப் பாதுகாப்பதற்கு புதிதாக சிந்தித்து புதிய நிகழ்ச்சித் திட்டங்களின்படி செயற்படுமாறும் குறித்த அமைச்சர்கள், அரசாங்க அதிகாரிகளிடம் கேட்டுக்கொண்ட ஜனாதிபதி, சூழல் தொடர்பான பொறுப்புக்களை நிறைவேற்றுகையில் எப்போதும் எச்சரிக்கையை பார்க்கிலும் முன்மாதிரி மேலானது எனக் குறிப்பிட்டார்.

கடந்த இரண்டு தசாப்தங்களாக நாட்டில் இடம்பெற்ற சூழல் அழிவுகள் தொடர்பான பொறுப்பில் ஒரு பகுதியை எமது அரசியல்வாதிகளும் அரசாங்க அதிகாரிகளும் ஏற்றுக் கொள்ள வேண்டும் எனக் குறிப்பிட்ட ஜனாதிபதி, இப்படியான நிலைமைகளைத் தவிர்ப்பதற்கு சட்டம், அதிகாரம் மற்றும் பொறுப்புக்கள் இருந்தும் அதனை நிறைவேற்றாததன் பெறுபேறுகளை இன்று முழு நாடும் அனுபவிப்பதாகவும் குறிப்பிட்டார்.

சூழலைப் பாதுகாப்பதற்கு ஊடக நிறுவனங்கள் வழங்கும் பங்களிப்புகளும் போதுமானதாக இல்லை எனக் குறிப்பிட்ட ஜனாதிபதி, அதுதொடர்பாக குரல் எழுப்புவதற்கு தேசிய செய்திப் பத்திரிகைகள் உள்ளிட்ட ஊடக நிறுவனங்கள் நடவடிக்கை எடுக்கவேண்டியது யுகத்தின் தேவையாகும் என்றும் குறிப்பிட்டார்.

வடக்கில் இடம்பெறும் காடழிப்புகள் தொடர்பாக சுற்றாடல் துறை அமைச்சர் என்றவகையில் தமக்கு எதிராக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்ட போதும் கடந்த ஆட்சியில் 2013 ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட ஒரு அரசியல் தீர்மானத்தின் காரணமாக அத்தகைய ஒரு நிலைமைக்கு முகம்கொடுக்கவேண்டி ஏற்பட்டதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

சூழல் பாதுகாப்பு மற்றும் இயற்கை வளங்களைப் பாதுகாப்பது தொடர்பாக முதன்முறையாக முப்படையினரை ஈடுபடுத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாகக் குறிப்பிட்ட ஜனாதிபதி, இந்நாட்டின் காடுகள் தொடர்பாக வாரத்திற்கு ஒரு முறை கண்காணிக்கும் பொறுப்பு விமானப் படையினருக்கு வழங்கப்பட்டுள்ளதுடன், மரங்களை வெட்டி படகுகள் மூலம் கொண்டு செல்பவர்களை கண்டறியும் பொறுப்பு கடற்படையினருக்கும் சூழல் அழிவுகளை மேற்கொள்வோருக்கு எதிராக நடவடிக்கைகளை எடுக்கும் பொறுப்பு இராணுவத்திற்கும் பொலிஸாருக்கும் வழங்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

சூழலைப் பாதுகாக்கின்ற பொறுப்பு ஒரு அரசியல் கட்சியினதோ அல்லது நிறுவனத்தினதோ மட்டுமல்ல எனக் குறிப்பிட்ட ஜனாதிபதி, சூழலைப் பாதுகாக்கும் பொறுப்பை உரிய முறையில் நிறைவேற்றவேண்டியது நாளைய தலைமுறைக்காக நாம் நிறைவேற்றும் கடமையும் பொறுப்புமாகும் என்றும் குறிப்பிட்டார்.

2016 ஆம் ஆண்டின் சர்வதேச சூழல் தினத்துடன் இணைந்ததாக நடைபெற்ற பேச்சுப் போட்டியில் வெற்றிபெற்ற போட்டியாளர்களுக்கான பரிசில்களும் இதன்போது ஜனாதிபதியினால் வழங்கிவைக்கப்பட்டதுடன், சூழல் தொடர்பாக வெளியிடப்பட்ட சொபா என்ற சஞ்சிகையும் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டது.

மகாசங்கத்தினர் உட்பட ஏனைய சமயத் தலைவர்கள், அமைச்சர் காமினி ஜயவிக்கிரம பெரேரா, மத்திய மாகாண முதலமைச்சர் சரத் ஏகநாயக, இராஜாங்க அமைச்சர் வசந்த அலுவிகார, பிரதியமைச்சர்களான அநுர்ாத ஜயரத்ன, லக்ஷ்மன் வசந்த பெரேரா ஆகியோர் உள்ளிட்ட மக்கள் பிரதிநிதிகளும் தூதுவர்கள் உள்ளிட்ட விசேட அதிதிகளும் சுற்றாடல்துறை அமைச்சின் செயலாளர் உதய ஆர் செனவிரத்ன ஆகியோர்களும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். (செ-12)

## வைத்தியசாலை...

பட்டுள்ளது.

கிளிநொச்சி விநாயகபுரத்தைச் சேர்ந்த ராசா றமணி (வயது 44) என்பவர் கடந்த 4 ஆம் திகதி அன்று திடீர் சுகவீனம் காரணமாக வைத்தியசாலையின் அவசர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டு அன்றிரவே விடுதிக்கு மாற்றப்பட்ட நிலையில் மறுநாள் காலையில் மரணமடைந்துள்ளார்.

இதனை தொடர்ந்து கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையின் சட்ட மருத்துவ வைத்தியர் ஜெயவர்த்தன மற்றும் கிளிநொச்சி மாவட்ட திடீர் மரண விசாரணை அதிகாரி க.திருலோகமூர்த்தி ஆகியோரது ஆரம்பகட்ட வசாரணைகளை அடுத்து உடல் யாழ் போதான வைத்தியசாலைக்கு உடற்கூற்று பரிசோதனைக்கு நேற்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

சுகவீனம் காரணமாக வைத்தியசாலையின் அவசர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சையின் பின்னர் ஓரளவு சாதாரண நிலைமைக்கு அவர் திரும்பிய நிலையில் நோயாளர் விடுதிக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இந்த நிலையில் குறித்த நோயாளி அன்றிரவு இரவு மீண்டும் சுகவீனம் காரணமாக அவதிப்பட்டுள்ளார் என்றும் ஆனால் வைத்தியசாலை மருத்துவப் பணியாளர்கள் அதனை கண்டு கொள்ளவில்லை என்றும். இதனாலேயே அவர் இறந்துள்ளதாகவும் உறவினர்கள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

இது தொடர்பில் கிளிநொச்சி பிராந்திய பிரதி பதில் சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி மா.ஜெயராசா அவர்களிடம் கேட்டபோது,

வைத்தியசாலையின் பெண் பரிசாரகர் வைத்தியசாலையின் அவசர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டு மூளைக்காய்ச்சலுக்கான சிகிசை அளிக்கப்பட்டு, நோயாளர் விடுதிக்கு மாற்றப்பட்ட நிலையில் மரண மடைந்துள்ளார். இவரது மரணத்திற்கான காரணத்தை கண்டறிவதற்கு உடல் யாழ்.போதானா வைத்தியசாலைக்கு அனுப்பட்டுள்ளது.

மரணத்திற்கு வைத்தியசாலையின் கவனவீனமும் காரணமா எனவும் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. எனவே உடற் கூற்று பரிசோதனை அறிக்கை கிடைத்தவுடன் இது தொடர்பான உண்மை நிலைமையை தெரியப்படுத்துவதாகவும் குறிப்பிட்ட அவர் பொதுமக்கள் தமக்கு சிறிய காய்ச்சல ஏற்பட்டர்லும் வைத்தியசாலைக்கு சென்று பூரண சிகிச்சையை பெற்றுக் கொள்ளுமாறு அறிவித்துள்ளார். (செ-312)

## பலத்த காற்று...

யில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

நாட்டை சூழவுள்ள ஏனைய கடற்பிராந்தியங்களில் காற்றின் வேகம் மணிக்கு 50 கிலோமீற்றர் வரை அதிகரிக்கும் எனவும் அதனால் கடல் கொந்தளிப்பாக இருக்கும் எனவும் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. (செ-12)

## இ.போ.ச பேருந்து...

இச் சம்பவம் நேற்று இரவு 8.15 மணியளவில் முத்திரை சந்திக்கு அண்மையில் இடம்பெற்றுள்ளது.

இத் தாக்குதலில் பேருந்தின் சாரதி உட்பட மூவர் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்த மூவரும் சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச் சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ள நிலையில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

இதேவேளை கடந்த 3ஆம் திகதி வெள்ளிக்கிழமை கோண்டாவிலில் அமைந்துள்ள இலங்கை போக்குவரத்து சபையின் யாழ். சாலைக்கு முன்பாக இ.போ.ச ஊழியர்க ளால் வழிமறிக்கப்பட்ட தனியார் சிற்றூர்தியின் சாரதி மற்றும் நடத்துநர் மீது தாக்குதல் நடத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-12,60)

## கொஸ்கம ஆயுத...

இராணுவத்தினர் எவருக்கும் எந்த பாதிப்பும் இல்லை என்று மேஜர் ஜெனரல் சுனந்த ரணசிங்க தெரிவித்துள்ளார்.

அத்துடன் முப்படையினரும், தீயணை ப்பு படையினரும் தீயைக் கட்டுப்படுத்த தேவையான நடவடிக்கைகளை எடுத்துள்ளதாகவும், அந்தப் பிரதேசத்தைச் சூழவுள்ள அனைத்து வைத்தியசாலைகளும் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை குறித்த வெடிப்பு சம்பவத்தின் சத்தமானது 50 கிலோமீற்றர தூரத்தில் உள்ள தெரணியகல நூரி தோட்டம் வரை கேட்டதாகவும், வெளிவரும் புகை,வெளிச்சங்களைக் கொண்டு கொஸ்கம பிரதேசத்தை பார்க்க முடிந்ததாகவும் இந்த பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர். அத்துடன் இந்தப் பிர தேசத்துக்கான போக் குவ ரத்தும் தடைப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை தீ விபத்து ஏற்பட்ட பகுதிகளில் உள்ள பாடசாலைகள், அலுவலகங்கள் இன்றைய தினம் மூடப்படும் என ஜனாதிபதி அறிவித்துள்ளார்.(செ-12)

## மின்னல் தாக்கி...

இந்த சம்பவத்தில் வீட்டின் நுழைவாயில் பகுதி முற்றாக சேதமடைந்துள்ளது. எனினும் இந்த சம்பவத்தில் தெய்வாதீனமாக உயிராபத்துக்கள் எதுவும் ஏற்படவில்லை. (செ-12)

## ஒரு சிலை...

கரணவாய் மூத்த விநாயகர் ஆலய திருமண மண்டபத்தில் இடம்பெற்றது.

முன்னதாக நிகழ்வுகள் காலை 9.30 மணியளவில் நெல்லியடியில் உள்ள அவரது உருவச் சிலைக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சி தலைவருமான இரா. சம்பந்தனின் மலர் மாலை அணிவித்தல், அஞ்சலி நிகழ்வுகளுடன் ஆரம்பமாவதாக திட்டமிடப்பட்டிருந்தது.

இந்நிலையில் காலை 9.00 மணியளவில் வட மாகாண சபை உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் உருவச்சிலைப் பகுதிக்கு மலர் மாலையுடன் வருகை தந்துள்ளார்.

அங்கு நின்ற கட்சி உறுப்பினர்களுடன் சுமார் ஐந்து நிமிடங்கள் வரை உரையாடிய சிவாஜி, திடீர் என உருவச்சிலைக்கு அருகில் இருந்த ஏணியில் ஏறி சிவசிதம்பரத்தின் சிலைக்கு மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தியுள்ளார்.

சம்பந்தரின் வருகைக்காக காத்திருந்த கட்சி உறுப்பினர்கள் சிவாஜிலிங்கத்தின் செயலினால் சலசலப்பு அடைய நேரிட்டது.

இது பற்றி அங்கு நின்ற ஊடகவியலாளர் ஒருவரிடம் சிவாஜிலிங்கம் கூறுகையில்,

உரும்பிராயில் சிவகுமாரனின் நினைவு தினத்துக்கு அவசரமாக செல்ல வேண்டியுள்ளது. எனவே இங்கு அஞ்சலி செலுத்திவிட்டு போகிறேன் எனத் தெரிவித்துள்ளார்.

இதன் பின்னர் காலை 9.45 மணியளவில் இரா.சம்பந்தன் நிகழ்விடத்துக்கு வந்துள்ளார். அதையடுத்து சிவாஜிலிங்கத்தினால் உருவச்சிலைக்கு அணிவிக்கப்பட்ட மாலை சிலையில் இருந்து அகற்றப்பட்டு அதே மாலை இரா.சம்பந்தரின் கரங்களில் சேர்க்கப்பட்டு மீண்டும் சிவசிதம்பரத்தின் உருவச் சிலைக்கு அணிவிக்கப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டிருந்தது.

இதன்போது ஒரு மாலை ஒரே சிலைக்கு இருவரால் மாறிமாறி அணிவிக்கப்பட்டதால் அங்கு நின்றவர்களின் சலசலப்பு சற்று அதிகமாக இருந்ததை காணக்கூடியதாக இருந்தது. (செ-60)


நீங்கள் தொழில் தேடுபவரா?
5 நட்சத்திர ஹொட்டேல்களில்
கவர்ச்சிகரமான சம்பளத்துடனான
வேலைவாய்ப்பு ஏற்பாட்டுடன் கூடிய
O/L உடன் Business & Hotel Management UK Certified
CERTIFICATE - DIPLOMA - DEGREE
Up to 30% Discount
With FREE >>> English Course
3 மாத கால தொழில்துறைப் பயிற்சி
(பயிற்சி காலத்தில் கொடுப்பனவுகளும் வழங்கப்படும்)
கற்கைநெறி நிறைவில் பணியிடப்பயிற்சி
(பணியிடப்பயிற்சியின் பின் நிரந்தர தொழில் ஏற்பாடு)
வெளிநாடு செல்ல விரும்புவோருக்கு விசா ஏற்பாடு.
SCHOLARSHIPS AVAILABLE
புதிய பிரிவு ஆரம்பம் Week & Weekend Batch
அனுமதிகளுக்கு: 077 3616 798
SIKARAM ACADEMY Business · Hospitality · English
SCHOOL of HOSPITALITY
www.sikaram.lk
Sikaram Academy
021 222 0011
275-2/1, மணிக்கூட்டுக்கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
(வைத்தியசாலை பின்புறம் - பஸ் நிலையத்திலிருந்து 100m)
(சி-4817)

Spoken English with Grammer
U.K-ல் படித்த பட்டதாரி ஆசிரியரால் உங்கள் வீடுகளிற்கு வந்து உங்கள் வசதிகளிற்கு ஏற்ப கற்றுத்தரப்படும்
தொடர்பு
0766 151 837
(4850)

அலுவலக உத்தியோகத்தர்கள் தேவை
காலி நகரில் அமைந்துள்ள சிவன் ஆலயத்தில் கடமைபுரிய
★ அலுவலக உத்தியோகத்தர்கள்
★ ஊழியர்கள் தேவை
ஆர்வமும் விருப்பமும் உள்ளவர்கள் சுயவிபரம் அடங்கிய தமது விண்ணப்பத்தை
NO.3, Kelan kaduwa Place, Colombo 06
எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.
குறிப்பு: தங்குமிட வசதி வழங்கப்படும்.
(C-4818)

வெளிநாடுகளுக்கான பொதிகள் சேவை
❄ 220ற்கு மேற்பட்ட நாடுகளுக்கான சேவை.
❄ உணவுப்பொருட்கள், உடுப்புகள், கருவாடு, மருந்து வகைகள், எண்ணெய் வகைகள் ஏற்றுக் கொள்ளப்படும்.
மிகக் குறைந்த கட்டணம்.


திருமுருகன் கொம் நெற் (Pvt) Ltd.
271, K.K.S Road, Jaffna
கிளைகள்: திருநெல்வேலி, நெல்லியடி, பருத்தித்துறை, சங்கானை.
தொலைபேசி இல : 021 222 7835
(4864)

வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை
• வெளிநாடுகளுக்கு பொதிகளை மிக விரைவாக அனுப்பிக்கொள்வதற்கும்
• வெளிநாடுகளில் இருந்து பொதிகளை விரைவாகப் பெற்றுக் கொள்வதற்கும்
• காய்கறிகள், பழவகைகள், கடல் உணவுப்பொருட்கள், மருந்து, எண்ணை வகைகள், பால்மா உட்பட அனைத்துப் பாவனைப் பொருட்களையும் அனுப்பிக் கொள்ளலாம்.
20 வருட கால அசைக்க முடியாத நம்பிக்கை வென்ற நாம்
அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்
021 222 3536
10, கஸ்தூரியார், வீதி, புதிய மாநகரசபை கட்டடத்தொகுதி, யாழ்ப்பாணம்.
(சி-4813)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.06.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.